
# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்



ரூபா 250 /=

ஏப்ரல்- செப்டம்பர் 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மாடும் கயிறும் மானிடமும்

மாடும் கயிறுக்கும் – மற்றெவரோ கட்டியதை
மானிடர்கள்?

மதமென்று மொழியென்று இனமென்று நாடென்று
மானிடரைப் பிரித்துள்ள மதில்கள் தகர்ப்பாரோ
சாதியெனப் பாலெனச் சூழ்ந்துள்ள சிறைவிடுத்து
வெளியேறும் எண்ணஞ் சிந்தையிலே கொள்வாரோ
சடங்கென்று மரபென்று தாமே தம் தலை மீது
ஏற்றி வைத்த பழஞ்சுமைகள் இறக்கத் துணிவாரோ
கைளலிங் கழுத்தினிலுங் கட்டுவித்த மெல்லியதோர்
நூலறுக்க வலிமையிலார் கைவிலங்கு உடைப்பாரோ
தாமே பிணைத்த கயிறுகளுங் கைவிலங்கும்
தாமே அமைத்த சிறைக்கூண்டும் மதிற் சுவரும்
யாரோ தகர்ப்பர் யாரோ விடுவிப்பார்

தம்மைப் பிணைத்துள்ள மனக்கயிற்றைத் தாமிளக்கி
மனத்தடைகள் தாம் விலக்கி மனச்சிறையின் விடுபட்டு
நோக்கத் துணிவாரேல் தம் பகைவர் மாட்டிவைத்த
கைவிலங்கு பொடியாக நொறுக்கும் வலிவுடையார்
சிறைக்கதவும் நெடுமதிலும் தகர்த்தெறிவர்– தலைமீது
ஏற்றிவைத்த சுமை யாவும் எடுத்தெறிவார்
தலை நிமிர்வார்
அடிமை நிலை அறுப்பார்
முன்னோக்கியே நடப்பார்
மானுடத்தை விடுவிப்பார்

முட்கம்பித் தீவு
சி. சிவசேகரம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

THAYAKAM

Art, Literature and Social science Magazine

இதழ் 109 ஏப்ரல் - செப்டம்பர், 2023

பிரதம ஆசிரியர் :
க. தணிகாசலம்

நிர்வாக ஆசிரியர் :
ச. சத்தியதேவன்

ஆசிரியர் குழு :
சி. சிவசேகரம்
குழந்தை ம. சண்முகலிங்கம்
சோ. தேவராஜா
சிவ. இராஜேந்திரன்
அழ. பகீரதன்
தெ. ஞா. மீநிலங்கோ
வே. தினகரன்
ஆதித்தன்

வடிவமைப்பு :
எஸ். ரி. அனுஜன்
சிவ. பரதன்

உள் ஓவியங்கள் :
இணையத்திலிருந்து

முன் அட்டை புகைப்படம் :
குலசிங்கம் வசீகரன்

அச்சுப் பதிவு :
ஜே. எஸ். பிறின்ரேஸ்,
சில்லாலை வீதி
பண்டத்தரிப்பு

தொடர்பு :
ஆசிரியர்,
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

தொலைபேசி : +94 76 528 3003
மின்னஞ்சல் : thajaham@gmail.com
வலைப்பூ : thajaham.blogspot.com

வெளியீடு :

தேசிய கலை இலக்கியப் பேரவை
62, கே.கே. எஸ் வீதி
கொக்குவில் சந்தி
கொக்குவில்
இலங்கை

# உள்ளடக்கம்

## கவிதைகள்


வவனியூர் ஆர். ஜெ. கலா 09
ஊவா உலகநாதன் 10
அழ. பகீரதன் 16
ராசாத்தோட்டம் ராமஜெயம் 26
மாதவி உமாசுதசர்மா 31
மா.ஜீவன்ராஜ் 54


## மொழிபெயர்ப்பு கவிதைகள்


அல்போன்சினா ஸ்டோர்னி 04
கார்லோஸ் டிரம்மண்ட் டி ஆண்ட்ரேட் 20
அனா மரியா ரோட்ஸ் 25


## சிறுகதைகள்


அலெக்ஸ்பரந்தாமன் 11
பிரசன்னராஜ் 21
சிவ. இராஜேந்திரன் 27


## குறுங் கதை


வள்ளியம்மை சுப்பிரமணியம் 56


## கட்டுரைகள்


ஞாலசீர்த்தி மீநிலங்கோ 05.13,43
சரஸ்வதி பிரபாகர் 32
பூரணி பரராஜசிங்கம் 39
சு. முரளிதரன் 41
மொழிவரதன் 57


## மாணவர் ஆக்கம்


அருணன் 59


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகம்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய பண்பாடு

கலை இலக்கிய சமூகவிஞ்ஞான இதழ்

இதழ் 109
ஏப்ரல்- செப்டம்பர், 2023

# பொருளாதார ஒடுக்குதல்களை மக்களுக்கு மூடி மறைக்க தூண்டப்படும் இன, மத வாதங்கள்

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாத வகையில் அரசு மிகப் பெரும் கடன் சுமைகளுக்குள்ளும், மக்கள் விலைவாசி ஏற்றம், மின் கட்டண உயர்வு, வேலை இன்மை, சம்பள உயர்வின்மை, உணவுப் போதாமை, போசாக்கின்மை, மருந்தின்மை, மருந்தே மரணங்களுக்கு காரணமாகுதல் போன்ற பல்வேறு பிரச்சினைகளால் மிகவும் பாதிக்கப்படும் காலமாக உள்ளது. விவசாயிகள், கடற்தொழிலாளர்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகின்றனர். அத்துடன் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்காக உழைத்துவரும் அனைத்து இனத் தொழிலாளர்களும் ஒன்றுபட்டுப் போராடிப் பெற்ற தொழிற்சங்க உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டு அடிமை உழைப்பாளர்களாக ஆக்கப்பட்டு வருகின்றனர். நிலமற்ற மலையகத் தொழிலாளர்களின் குடியிருப்புக்கள் அடித்து நொருக்கப்பட்டு பலவந்தமாக தோட்டங்களில் இருந்து தொழிலாளர்கள் வெளியேற்றப் படுகின்றனர்.. அன்றைய கொலனித்துவ அரசமைப்பு மலையக மக்களை இந்தியாவில் இருந்து இலங்கைக்குப் புலம்பெயர வைத்த மலையகத்தின் 200ம் ஆண்டுத் தொடர்கதையின் முடிவுறாத துயர்கள் நிறைந்த அத்தியாயங்களாக இவை நீள்கின்றன.

அதுபோலவே இன்றைய நவகொலனித்துவ பொருளாதார அரசமைப்பில் இலங்கை அரசு ஐ.எம்.எவ் நிபந்தனைகளை ஏற்று அரச பணியாளர்களை ஆட்குறைப்புச் செய்ய, பணிக்கால விடுமுறையுடன் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தூண்டுதல் அளித்தது. அதனால் கல்வி, மருத்துவம் போன்ற சேவைத்துறைகளில் பணிபுரிவோர் உட்பட, பெரும் எண்ணிக்கையான மக்கள் உலக நாடுகளுக்கு புலம்பெயர்வதும் அத்தொடர்கதையின் பிறிதொரு அத்தியாயமாகவே அமைகிறது. ஊரையும், மண்ணையும், உறவுகளையும் பிரிந்து உலக நாடுகளில் வெயிலிலும், மழையிலும், குளிரிலும் கூடாரங்களிலும் வாழவேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர். இலங்கையில் பெருகிவரும் தற்கொலை மரணங்களுக்கு பொருளாதார நெருக்கடிகளும், வேலையின்மையும் இன்று முதன்மைக் காரணிகளாக அமைவதை ஆய்வறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன. இனமத பேதங்களின்றி இலங்கையின் அனைத்து இனங்களையும் சேர்ந்த பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் வாழ்வு, பொருளாதார அவலங்கள் நிறைந்த வாழ்வாக நாளாந்தம் விடிவதே இலங்கையின் இன்றைய யதார்த்தமாக உள்ளது. மக்களின் உழைப்புக்கும் நல் வாழ்வுக்கும் இடையேயான இம் முரண்பாடே அடிப்படை முரண்பாடாக, வாழ்வாதார உரிமைகளுக்கான பிரச்சினையாக என்றும் இருந்து வருகிறது.

ஆனால், அவற்றை முதன்மைப் படுத்தி, அனைத்து இன மக்களையும் ஒன்றுபட வைத்து, அதன் மூலம் மக்கள் எதிர்கொள்ளும் ஏனைய இன, மத, பால் ஒடுக்குதல்கள் உட்பட பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கான தீர்வுகளை இலகுவாக்கும் அரசியல் வழிமுறையை ஆட்சியில் தொடர்ந்து இருந்துவரும் அதிகார வர்க்கத்தினர் விரும்புவதில்லை. இம் முரண்பாட்டின் அடிப்படையில் பெரும் எண்ணிக்கையில் இன, மத உணர்வு கடந்து, வாழ்வாதார உரிமைப் பிரச்சினைகளுக்காக இலங்கை மக்கள் ஒன்றுபட்டால் அது தமது அதிகார வர்க்க ஆட்சி அமைப்பை மாற்றி அமைக்கும் பலம் மிக்க சக்தியாக மாறிவிடும் என அவர்கள் அஞ்சுகின்றனர். அதனால் அதற்கு எதிராக மக்கள் மத்தியில் இன, மத முரண்களைத் தூண்டி, அவர்களைப் பிளவுபடுத்தி பிரித்தாளும் தந்திரங்களையே அதிகார வர்க்கங்கள் கையாண்டு வருகின்றன. அரசின் பொருளாதார ஒடுக்குதல்களை மூடிமறைப்பதற்கு, இன, மத வேறுபாடுகளை மக்களிடம் தூண்டி, அம்முரண்பாட்டை இலங்கையின் பிரதான முரண்பாடாக முன்னிறுத்தி தமது அதிகாரத்தை தொடர்ந்து வருகின்றன. இந்நடவடிக்கைகளுக்கு ஏகாதிபத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய வல்லரசுகளும் பக்கபலமாக என்றும் இருந்து வருகின்றன. இதனால், இலங்கை அரசியலில் எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இத்தேசத்தின் பொருளாதார வளத்துக்காக வியர்வை சிந்தி உழைக்கும் அனைத்தின உழைக்கும் மக்களுக்கும், இனங்களுக்கும் எதிரான இந்த ஏமாற்று நாடகம் இன்னல்களும், சோகங்களும் நிறைந்ததாக தொடர்ந்து அரங்கேறி வருகிறது.

அரசு திட்டமிட்டே காலத்துக்குக் காலம் புதிய புதிய வடிவங்களில் இன, மதவாதத்தை தூண்டும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. அதனை எதிர்க்கும் ஏனைய ஒடுக்குதல்களுக்கு உட்படும் இனங்களைச் சேர்ந்த அதிகார வர்க்கச் சார்புடைய அரசியல்வாதிகளும், தமது 'வாக்குவங்கி' அரசியல் நலன்களுக்காக, ஒடுக்கும் அரசின் இன, மதவாத அரசியல் 'குண்டுச்சட்டிக்க்குள்' நின்றே அரசை எதிர்த்து வருகின்றனர். இத்தவறான அரசியல் நிலைப்பாட்டில் நின்று முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகள் மேலும் சிங்கள மக்களை அரசின் பேரின மதவாதப் பிடிக்குள் சிக்கவைத்து பேரினவாத ஆட்சிகளை தொடர்ந்து பலப்படுத்தவே உதவிவருகின்றன. அனைத்து மக்களையும் பேதங்கள் இன்றி பொருளாதார ரீதியாக ஒடுக்கிவரும் அரசு, தனது பேரினவாதச் செயற்பாடுகள் மூலம் இனமத வேறுபாடுகளை தூண்டி, பொருளாதார ஒடுக்கலுக்கெதிராக எதிர்த்தெழும் இலங்கை மக்களின் இன மத பேதங்கள் கடந்த ஒன்றுபட்ட எதிர்ப்புணர்வை தொடர்ந்து மழுங்கடித்து வருகிறது. இது இலங்கை அரசியலுக்குப் புதியதொன்றல்ல. ஏழு தசாப்தங்களுக்கு மேல் 'ஜனநாயகம்' என்னும் போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வந்த இன, மதவாத அரசியலே இன்று ஏகாதிபத்திய வல்லரசு நாடுகளிடம் நாட்டை அடகுவைத்து அவர்களிடம் கையேந்தும் நிலைக்கு நாட்டை தள்ளியுள்ளது. அவர்களின் கால்களைப் பிடித்தாவது தமது ஆளும் வர்க்க நலன்களை இந்நாட்டில் மேலும் பலதசாப்தங்களுக்கு உறுதிப்படுத்திக் கொள்வதே ஆதிக்க சார்பு அரசியலின் இலக்காக இன்றும் இருந்து வருகிறது.

மக்கள் மத்தியில் இன்றும் தொடரும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கு 'இறைவிதி'க் கோட்பாட்டை காரணமாக முன்வைத்து வரும் மதங்களை, ஆளும் வர்க்கங்கள் வரலாறுதோறும் அரவணைத்து, பாதுகாத்து வருவது அம்மதங்களின் கொள்கைகள் மீது கெண்ட பற்றுதல்களால் அல்ல. இம்மண்ணில் மனிதர்களால் மனிதர்கள் மீது ஏற்படுத்தப்பட்ட 'மனித விதி'களான ஒடுக்குமுறைகள், ஏற்றத்தாழ்வுகள், அதனைப் பாதுகாத்துவரும் அதிகார ஆட்சி அமைப்புக்களை, இன்றைய விஞ்ஞான அறிவியல் யுகத்திலும் மக்கள் ஏற்று அடங்கிவாழும் தற்காலிக ஆற்றுப்படுத்தல் மனநிலையாக 'இறைவிதி'க் கோட்பாடு அமைந்து வருகிறது. இதனால் மதங்கள் மீதான நம்பிக்கைகளை தமது ஆட்சி அதிகாரங்களுக்கு மேலும் பலம்சேர்க்கும் மத, பண்பாட்டு மேலாதிக்கமாக உலக ஏகாதிபத்திய வல்லரசு நாடுகள் வளர்த்து பாதுகாத்து வருவதை வரலாற்று நடைமுறை அனுபவங்களுக் கூடாகவும், கண்முன்பாகவும் இன்றும் நாம் கண்டு வருகிறோம்.

இத்தகைய பின்புலங்களை வைத்தே அரசின் இன, மத வாதங்களை தூண்டும் நடவடிக்கைகள் மக்களால் அணுகப்பட வேண்டும். இன்றும் உலக ஏகாதிபத்திய நாடுகள் தமது பொருளாதார அதிகார நல்ன்களுக்காக நடத்தி வரும் போர்களின் பின்னணியிலும், இன, மத அடிப்படைவாத உணர்வுகளை இலகுவாகத் தூண்டி தமது நலன்களை வலுப்படுத்தும் இத்தகைய கொடுஞ் செயல்கள் நடந்து வருகின்றன. இதனால் மதங்கள் அனைத்தும் காலங்காலமாக கருத்தளவிலாவது முன்வைத்து வரும், மனித இன பொருளாதார, பண்பாட்டு வரலாற்றின் வெளிப்பாடுகளான, எல்லைப்படுத்தப்பட்ட மனிதாபிமான உணர்வின் அரும்புகள் கூட மக்களின் மனங்களில் இருந்து முற்றாக கருக்கி அழிக்கப்பட்டு வருகின்றன.

மாற்றங்களை அடிப்படையாகக் கொண்ட உலகில் மத பண்பாட்டு நம்பிக்கைகளும், உணர்வுகளும் என்றும் மாறுதல் அடைந்தே வந்துள்ளன. மேலும் மாறுதல்களை நோக்கியே நகர்கின்றன. எனவே இலங்கையில் இன்று அனைத்தின மக்களும் நாளாந்தம் எதிர் கொண்டுவரும் பொருளாதார ஒடுக்குதல்களுக்கு எதரான போராட்டங்களில் இன, மத பேதங்களற்று அனைவரும் ஒன்றிணைவதன் மூலமே இத்தேசத்தில் உண்மையான ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் கட்டி வளர்க்க முடியும். அந்த ஒருமைப்பாட்டு உணர்வின் அடிப்படையிலேயே இன்றுவரை தீர்க்கப்படாத பிரச்சினைகளாக நீளும் இன, மத, சாதி, பால் ஒடுக்குமுறைகள் போன்றவற்றை தீர்ப்பதற்கான வழிமுறைகளைத் தோற்றுவிக்க முடியும். ஏழு தசாப்தங்களுக்கு மேலான இரத்தம்தோய்ந்த, இழப்புக்கள் நிறைந்த அனுபவங்களைப் பெற்ற மக்கள் அனைவரும் தம் எதிர்கால சந்ததிகளின் நலன்களுக்காக புதிய வாழ்வையும், புதிய பண்பாட்டுச் சூழலையும் தோற்றுவிக்க, இன, மதம் கடந்த பொருளாதார ஒடுக்குதல்களுக்கு எதிரான போராட்டங்களிலும் ஒன்றிணைய வேண்டும் ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ என்னைப் புனிதமாகக் கோருகிறாய்

அல்போன்சினா ஸ்டோர்னி
தமிழில்: நிலங்கோ

உனக்கு நான் வெளிச்சமாக வேண்டும்
கடலின் வெண்நுரை போலவும்
தாயான முத்துப் போலவும்
இருக்கின்ற எல்லா அல்லிகளை விடக்
கற்பான அல்லியாகவும்
மென்மையான வாசனைத் திரவியமாகவும்
இதழ்கள் மூடிய மலராகவும் வேண்டும்

எந்த நிலவொளியும் என்னைக்
கடந்து செல்லவில்லை
என்னை சகோதரி என்றழைக்கும்
டெய்சி இங்கில்லை
உனக்கு நான்
பனியாக
வெள்ளையாக
விடியலாக வேண்டும்.

அனைத்தையும் கொண்டிருந்த உன்
கையில் கோப்பைகள்,
தேன் மற்றும் பழங்களிலிருந்து
உதடுகள் ஊதாவாக அருந்துகிறாய்
விருந்தில் இருந்தபடி
வைனால் உன்னைப் போர்த்தி
உன்னுடலைக் கைவிட்டு
பச்சஸைக்* கொண்டாடினாய்.
இருட்டில் இருந்தபடி
வஞ்சகத்தின் தோட்டத்தில்
சிவப்பாடை அணிந்தபடி
பேரழிவைப் பரப்புகிறாய்.

உன்னுடைய எலும்புக்கூடு
அப்படியே உள்ளது.
என்ன அற்புதத்தாலோ என்று
எனக்கு இன்னும் தெரியவில்லை,
நீ என்னை வெள்ளையாக விரும்பினாய்
கடவுள் உன்னை மன்னிக்கட்டும்;
நான் கற்புடன் இருக்க வேண்டுமென்று
விரும்பினாய்
கடவுள் உன்னை மன்னிக்கட்டும்;
நீ எனக்கு விடியலைத் தர விரும்புகிறாய்!

காட்டுக்கு ஓடிவிடு
மலைகளுக்குச் செல்லு
உன் வாயை சுத்தம் செய்
ஒரு குடிசையில் வாழ்
ஈரமான பூமியின் மண்ணை
உன் கைகளால் தொடு
கசப்பான நிலக்கீழ் கிழங்குகளால்
உன் உடலுக்கு உணவளி
பாறைகளிலிருந்து குடி
உறைபனியில் உறங்கு
உப்பாலும் தண்ணீராலும்
உன் திசுக்களை புதுப்பி
பறவைகளுடன் பேசு
அதிகாலையில் எழுந்திரு

இவற்றால் இறுதியில்
உனது உடல் நிலைமாற்றம்
அடையும் போது
படுக்கையறைகளில் சிக்கிக்கொண்ட
உன் ஆன்மாவை
அதற்குள் உட்செலுத்து
நல்ல மனிதனாகு - பிறகு
என்னை வெள்ளையாக இருக்கும்படி கேள்
என்னை பனியாக இருக்கும்படி கேள்
என்னை கற்போடு இருக்கும்படி கேள்



* வைனிற்கான கிரேக்கக் கடவுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50வது ஆண்டில் தேசிய கலை இலக்கியப் பேரவை
ஆய்வரங்கத் தொடர் - உரை 2

# மக்கள் இலக்கியம் : சவால்களும் செல்திசைகளும்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

## தொடக்கக் குறிப்புகள்

தேசிய கலை இலக்கியப் பேரவை தனது 50வது ஆண்டில் காலடிபதிக்கும் இவ்வாண்டில் 'புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு" என்ற தேசிய கலை இலக்கியப் பேரவையின் மகுடவாக்கியத்தை நினைவுகூர்வது இந்த உரைக்குப் பொருத்தமானது. புதிய ஜனநாயகம், புதிய வாழ்வு, புதிய பண்பாடு ஆகிய மூன்றும் மக்களுக்கானவை. இதை அடைவதற்கான நீண்ட நெடிய போராட்டத்தில் கலை இலக்கியங்களின் பணி தவிர்க்கவியலாதது. ஒரு சமூக இலக்கிய அமைப்பாக தேசிய கலை இலக்கியப் பேரவையானது அடிப்படையாக மூன்று விடயங்களில் கவனம் குவிப்பது பயனுள்ளது.

1. சமூக மாற்றத்துக்கான படைப்பாளிகளின் இலக்கியப் பணிக்கான இலக்கு பற்றிய தெளிவு.
2. வெகுஜன இலக்கியப் பணியின் அவசியத்தை விளங்கல்.
3. இலக்கியத்துக்கும் சமுதாயத்துக்கும் காலத்துக்கும் இடையிலான உறவின் முக்கியத்துவத்தைப் புரிதல்

இந்தப் பின்புலத்திலேயே சமூக மாற்றத்துக்கான படைப்பாளிகளுடைய இலக்கியப் பணி, இலக்கியம் பற்றிய கொள்கைத் தெளிவின்றி தன் இலக்கு நோக்கி நகர முடியாது என்பதும் படைப்பிலக்கியம் பற்றியும் திறனாய்வின் தேவைகள் பற்றியும் விரிவாகப் பேசுவதும் கோட்பாட்டுருவாக்கம் செய்வதும் அவசியம் என்பதையும் வலியுறுத் வேண்டியுள்ளது. மக்கள் பங்குபெறும் வெகுஜனப் பண்பாட்டுத் தளத்தை அமைக்கும் இலக்கியப்பணியில் தன்னை அர்ப்பணித்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் தொடர்ச்சியான பயணத்திற்கு இது தவிர்க்கவியலாதது. இந்த அடிப்படையிலேயே மக்கள் இலக்கியம் என்ற கருத்தாக்கம் பற்றிய சில குறிப்புகளை வரலாற்று வழிநின்று நோக்க இக்கட்டுரை விளைகிறது.

சமகால இலக்கியச் சூழல் பற்றிய ஒரு குறுக்குவெட்டுப்பார்வையை நோக்காமல் மக்கள் இலக்கியம் பற்றியோ, ஈழத்து இலக்கியச் செல்நெறியில் மக்கள் இலக்கியத்தின் வகிபாகம் பற்றியோ அதன் எதிர்காலம் பற்றியோ பேசிவிட முடியாது. மூன்று தசாப்தகாலங்கள் நீடித்த ஒரு கொடிய போரும் அதன் முடிவும் அவைதம் நினைவுகளும் ஆழமாக வேரூன்றிய ஒரு நாட்டின் சமகாலம் என்பது போரின் முடிவின் 14 ஆண்டுகளின் பின்னரான காலமாகும். தீர்வை நோக்கி நகராத இலங்கையின் இனமுரண்பாடு ஏற்படுத்தியுள்ள தேசியவாத எழுச்சிகள், எரிச்சல்கள், எதிர்ப்புணர்வுகள் ஒருவகைப்பட்ட இலக்கியத்தின் பாடுபொருளாகின்றன. அன்றாட வாழ்வின் சவால்கள், போராட்டங்கள், எதிர்பார்ப்புகள் இன்னொரு வகையான கருப்பொருளாகின்றன. இவையிரண்டு வகைப்பட்ட இலக்கிய வெளிப்பாடுகளும் பல்வேறு வடிவங்களில் அவற்றிற்கான களங்களைத் தேடியடைகின்றன.

அங்கீகாரத்துக்கான ஆவல் ஒரு சமூக நோயாகப் பீடித்துள்ளது. குறிப்பாக தமிழக இலக்கியக்காரரின் அங்கீகாரத்துக்காகத் தவங்கிடப்பதே "இலக்கியகாரர்கள்" என்று தம்மை அழைத்துக் கொள்வோரின் பிரதான பணியாகியுள்ளது. இவர்களில் பலர் வேண்டி நிற்கின்ற அங்கீகாரமானது ஈழத்து இலக்கியத்தை கூவிவிற்பதன் ஊடு சாத்தியமாகிறது. கடந்த சில ஆண்டுகளில் இந்தப்போக்கு கவலைதரும் விதமாக அதிகரித்துள்ளது. தமிழக சஞ்சிகைகளுக்கும் பத்திரிகைகளுக்கும் எழுதுவது மேலானது என்ற எண்ணம் உருவாகியுள்ளது. தமிழகத்தின் முக்கிய இலக்கிய ஆளுமைகள் என்று இவர்கள் கருதுவோரின் அங்கீகாரம் என்பது 'இலக்கிய மோட்சத்திற்கு'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பானதாகவும் இருப்பதான ஒரு மாயத்தோற்றம் நிலவுகிறது. இது ஏன் ஏற்பட்டது. இந்த அங்கீகாரத்துக்கான ஆவலும் அதைப் பெறுவதற்கு அரங்கேறும் அவலக்காட்சிகளும் எழுப்புகின்ற கேள்வி யாதெனில்: இலக்கியம் யாருக்கானது?

இன்றைய சமகால ஈழத்திலக்கியச் சூழலில் தவிர்க்கவியலாத அடிப்படைக் கேள்வி இதுதான். இந்தக் கேள்வியை இலக்கியம் படைப்போரில் எத்தனை பேர் கேட்டுக்கொள்கிறார்கள்? தங்கள் படைப்புகளில் இதனைக் கவனத்தில் கொள்கிறார்களா? இதைக் கணிப்பில் எடுத்த இலக்கியப் படைப்புக்கள் எத்தனை? இக்கேள்விகளைப் புறக்கணித்துவிட்டு நாம் இலக்கியம் பற்றியோ இலக்கியத்தின் இயங்குதளம் குறித்தோ பேச முடியாது.

## இலக்கியம் யாருக்கானது என்ற வினா

இலக்கியம் யாருக்கானது என்ற கேள்வி புதிதல்ல. ஆனால் இக்கேள்வி எவ்வாறு விளங்கப்பட்டும் பதிலளிக்கப்பட்டும் இருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்வது பயனுள்ளது. இலக்கியம் என்பது அடிப்படையில் மனிதரது சமூக இருப்புப் பற்றியது. எந்த ஒரு படைப்பும் ஒரு படைப்பாளியின் சமூகப் பார்வையின் தன்மையை வெளிக்காட்டிவிடும். இந்த அடையாளம் வெளிவெளியாகத் தெரியாவிட்டாலும் அந்தப் படைப்பின் உள்ளடக்கம் ஒரு தேர்ந்த வாசகருக்கு படைப்பாளியின் சமூகப்பார்வையை இலகுவாக அடையாளங்ககாட்டிவிடும். எந்தவொரு படைப்பாளியும் ஒரு சமூகப்பிரிவை இலக்காகக் கொண்டே படைக்கிறார். ஒவ்வொரு படைப்புக்கும் ஒவ்வொரு நோக்கம் உள்ளது. அது வெறும் வணிக நோக்கமாக இருக்கலாம். அல்லாமல் மனித இன மேம்பாட்டுக்கானதாக இருக்கலாம். வேறெதுவுமாக இருக்கலாம். அந்த நோக்கங்கள் ஒருவரது சமூகப் பார்வையுடன் இணைந்தே செயற்படுகின்றன.

இலக்கியப் படைப்புகள் பல்வகைப்பட்டவை. இவை 'கலை கலைக்காகவே" மற்றும் 'கலை மக்களுக்காகவே" என்ற இருவேறுபட்ட முகாம்களில் பொதுமைப்படுத்தக் கூடியவை. இந்த வேறுபாட்டின் அடிப்படை இலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றிய சிக்கலாகும். கலை இலக்கியங்கட்கு ஒரு சமுதாயப்பார்வை தேவையா என்ற கேள்வியே இந்த விவாதத்தின் அடிப்படையாகும். தூய அழகியல்வாதிகள் எனப்படுவோர், கலை இலக்கியங்கட்கு சமுதாயப் பார்வை தேவை இல்லை என்று அவ்வாறு இருப்பதே தீயது என்றும் கருதினர். 'கலை கலைக்காகவே" என்ற வாதத்தின் அபத்தத்தை கடந்த ஒரு நூற்றாண்டு கால உலக இலக்கிய வரலாறு பலமுறை சுட்டிக்காட்டியுள்ளது. இதன் அபத்தத்தை வேறெவரையும் விடவும் மார்க்சியர்களே தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துரைத்துள்ளனர். இன்று மக்கள் நலனைப் புறக்கணித்து மக்கள் நல நோக்கிலன்றிப் படைப்புக்களைப் படைப்போர், தங்களை இலக்கிய வாதிகளாகக் காட்டிக் கொள்ள முயற்சிப்போர் கையில் எடுக்கும் ஆயுதமே "கலை கலைக்காக" என்ற வாதம். இதற்கு இப்போது அவர்கள் பின்னவீனத்துவம் போன்ற பிற்போக்கான சிந்தனைகளைத் துணைக்கழைத்து 'புதிது புனைதல்" என்று பாவனை காட்டுகிறார்கள். இந்த அடித்தளத்தில் உருப்பெறுகின்ற இலக்கியங்கள் நலிவு இலக்கியங்களாகவும் பல சமயங்களில் நச்சு இலக்கியங்களாகவும் அமைந்துவிடுகின்றன.

இலக்கியத்திற்கும் மனிதரது சமூக இருப்புக்கும் இடையிலான உறவு மட்டுமன்றிச் சமுதாய மாற்றத்தில் இலக்கியத்தின் பங்கு பற்றிய தெளிவான கணிப்பு மாக்ஸியத்தின் வருகையின் பின்னரே இயலுமாயிற்று. 175 ஆண்டுகள் முன்னர் வெளியான 'கம்யூனிஸ்ட் அறிக்கை" பாட்டாளிவர்க்கப் புரட்சி பற்றிய பிரகடனம் மட்டுமல்ல. அது முதலாளிய சமுதாயத்தின் விழுமியங்கள் ஒவ்வொன்றையும் கேள்விக்குட்படுத்தியது. அதற்கு இலக்கியமும் விலக்கல்ல. உலகை மாற்றுவதற்கான மாக்ஸிய மெய்யியலோடு இணைகிற மாக்ஸிய நடைமுறை ஒவ்வொன்றும் போல, மாக்ஸிய இலக்கியமும் இலக்கியப் பார்வையும் சமுதாயத்தை அறியவும் விளக்கவும் முனைவது அதை மாற்றுவதற்கே என்பதை உறுதிபடச் சொன்னது. இலக்கியம் மக்களுக்கானது. மக்களுடையது, இலக்கியப் படைப்புக்கள் மக்களுக் கானவையாதல் வேண்டும் என்பதை முன்னிறுத்தியது.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் மார்க்ஸிய சிந்தனை மரபு ஏற்படுத்திய தாக்கம் பெரிது. ஈழத்து இலக்கியப் பரப்பில் செல்வாக்காக இருந்த மரபுவாதத்திற்கு எதிராக மண்வாசனையை முன்னிறுத்தியதிலும் மக்களது பேச்சு வழக்கிற்கான இலக்கியத் தகுதியைப் பெற்றுக் கொடுத்ததிலும் அதைப் பரவலாக்கியதிலும் மாக்ஸியவாதிகளின் பங்கு பெரிது. 1960களில் மார்க்ஸிய லெனினியர்கள் முன்னெடுத்த பரந்த போராட்டம் இழிசினர் வழக்கு என்று தூற்றப்பட்டுப் புறக்கணிக்கப்பட்ட மக்கள் மொழியை இலக்கிய வழக்காகவும் அம்மொழியில் அமைந்த இலக்கியங்களை மக்கள் இலக்கியங்களாகவும் தலைநிமிர்ந்து நிற்கச் செய்தது. இவையனைத்தும் இலக்கியங்கள் மக்களுக்கானவை என்பதை தெளிவாகக் காட்டுகின்றன.

படைக்கப்படுகின்ற படைப்புக்கள் அனைத்தும் மக்கள் நலநோக்கில் படைக்கப்படுவதில்லை என்பதை நாமறிவோம். மக்களுக்கான இலக்கியங்களை அடையாளங்கண்டு முன்னிறுத்த வேண்டிய அதேவேளை மக்களுக்கானதாகவன்றி அமைந்த இலக்கியங்களை - நச்சு இலக்கியங்களை - அடையாளங்காண்பதும் புறக்கணிப்பதும் விமர்சிப்பதும் விழிப்புணர்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவதும் முக்கியமானது. சமுதாய விழுமியங்களைச் சீர்குலைத்து மக்களிடையே முற்போக்கான சமுகப்பார்வை ஏற்படாமல் தடுக்கும் இலக்கியப் படைப்புகள் குறித்தும் இலக்கியவாதிகள் குறித்தும் கவனம் தேவை. மக்களுடைய ரசனையைக் கீழ்மைப்படுத்துவது என்பது இன்று முக்கியமானதாகி விட்டது. மக்களின் ரசனையை பலவழிகளில் நுகர்வுக் கலாசாரம் சீரழிக்கிறது. பின்னர் 'மக்கள் விரும்புகிறார்கள்" என்ற போர்வையில் நலிவு இலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. இதற்காக கலை இலக்கியங்கள் பண்டமாகின்றன. இலக்கியங்களுக்கான சந்தை என்ற நிலை மாறி சந்தைக்கான இலக்கியம் தோன்றுகிறது.

பல ஈழத்துப் படைப்பாளிகளின் மொழி எமது பண்பாட்டு மொழியாக இல்லை. வட்டார வழக்குகள் அழிந்து தமிழ்நாட்டுச் சந்தைக்கான மொழியில் படைப்புகள் வெளியாகின்றன. கதைக்களம் ஈழத்தில் அமைந்த போதும் மொழி ஈழத்து வட்டாரமொழியாக இல்லை. இப்படைப்பாளிகள் மக்களுக்காக எழுதவில்லை. சந்தைக்காக எழுதுகிறார்கள். நூல்கள் ஈழத்து பதிப்பாளர்களால் பதிப்பிக்கப்படுவதில்லை. மாறாக ஈழத்து இலக்கியத்துக்கான சந்தையை தமிழகப் பதிப்பாளர்கள் பயன்படுத்துகிறார்கள். இவ்வாறு வெளியாகும் பல படைப்புகள் இலங்கையில் விற்பனை செய்யப்படுவதில்லை. இந்த அனுபவங்கள் மக்கள் இலக்கியம் என்றால் என்ன என்பதைச் சரிவர விளங்கக் கோருகின்றன.

## மக்கள் இலக்கியம் என்றால் என்ன?

மக்கள் இலக்கியம் பற்றி பேராசிரியர் சி.சிவசேகரத்தின் கருத்து இங்கு மனங்கொள்ளத்தக்கது. அவர் 'மக்கள் இலக்கியம் என்பதை மக்களின் நன்மைக்கான இலக்கியம், மக்களின் சார்பான இலக்கியம், மக்களைச் சென்றடையும் இலக்கியம், மக்களை விழிப்பூட்டும் இலக்கியம், மக்களைக் கிளர்ந்தெழுந்து போராடத் தூண்டும் இலக்கியம், மக்களால் உருவாக்கப்படும் மக்கள் நலனுக்கான இலக்கியம் என்று பலவாறாக நோக்கலாம். இவற்றுள் அதிமுக்கியமானது கடைசியாகக் குறிப்பிடப்பட்ட பண்பையுடையதாகும்" என்று மக்கள் இலக்கியம் குறித்து விளக்குகிறார். இது ஏற்புடைய விரிவான விளக்கமாகும். 'மக்களால் உருவாக்கப்படும் மக்களுக்கான இலக்கியம்" என்பதே இன்று நாம் கவனம் கொள்ளவேண்டியது என்பதை இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதேவேளை இந்;தவகையான இலக்கியங்களே மக்கள் இலக்கியங்கள் என்று வரையறுக்க வியலாது. ஆனால் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நில்லாத தன்மை அவசியம். அதுவே ஒரு படைப்பு மக்கள் இலக்கியமா அல்லவா என்பதைத் தீர்மானிக்கிறது. மக்களுக்காக மக்கள் நலநோக்கில் படைக்கப்பட்ட இலக்கியம் கூட மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்குமாயின் அது மக்கள் இலக்கியமாகா.

1942இல் மக்கள் கலை இலக்கியத்துக்கான யெனான் கலை இலக்கியக் கருத்தரங்கில் மாஓ சேதுங் மக்கள் இலக்கியம் பற்றி ஆற்றிய உரைகள் முக்கியமானவை. அவர் அவ்வுரையில் மக்களிடமிருந்து கற்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். கலை இலக்கியப் படைப்பாளிகள் மக்களிடமிருந்து தொடர்ச்சியாகக் கற்கவும், கற்றவற்றின் அடிப்படையில் படைப்புக்களைத் திருத்தவும் செம்மைப்படுத்தவும் தயாராக இருக்க வேண்டும். மக்களிடமிருந்து கற்றல் என்பது தொடர்ச்சியான செயன்முறை என்பதை மாவோ வலியுறுத்தினார். அவ்வுரைகளில் அவர் கவனம் குவித்த நான்கு விடயங்களை இங்கு கவனிப்பது தகும்.

- எந்தவொரு படைப்புக்கும் உருவமும் உள்ளடக்கமும் முக்கியமானவை. உள்ளடக்கமே அடிப்படையானது, அதற்காக உள்ளடக்கம் கலைப்பண்பிற்கு மாற்றீடாகும் என்று கொள்ளவியலாது.
- படைப்பாளர்கள் வெகுசனங்களுக்குப் பயனுள்ள பெறுமதியான ஆக்கங்களைப் படைத்தல் வேண்டும். இதன்மூலம் வெகுசனங்களின் தரத்தை உயர்த்தப் பங்களிக்க வேண்டும். ஏனெனில் இலக்கியங்களை வெகுசனங்களிடையே பரவலாக்காமல் அதன் தரத்தை உயர்த்த முடியாது.
- படைப்பாளிகள் திறந்த மனதுடையோராகவும் விமர்சனப் பாங்கானோராயும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்வோராயும் சுயவிமர்சனம் செய்வோராயும் இருத்தல் வேண்டும்.
- கலை இலக்கியப் படைப்புகளை விமர்சிப்பதில் அழகியற் தேர்வு முறைகளும் அரசியற் தேர்வு முறைகளும் ஒருங்கே முக்கியமானவை.

மக்கள் இலக்கியம் என்பது பரந்துபட்ட மக்களின் அங்கீகாரத்தையே வேண்டிநிற்கிறது. பரந்துபட்ட மக்களின் அங்கீகாரத்தைப் பெறாத அவர்களிற்குப் பயன்படாத இலக்கியங்கள் என்றென்றும் மக்கள் இலக்கியங்களாவதில்லை. இலக்கியங்கள் தனியே சமுதாயத்தை மாற்ற வல்லன அல்ல. எந்தப் படைப்பாளியாலும் சமுதாயத்தைத் தனியாக நின்று மாற்றவும் முடியாது. அதே வேளை, மாற்றத்துக்காகத் துடித்துக் கொண்டுள்ள ஒரு சமுதாயத்தில் அந்த மாற்றத்தைக் கொண்டு வருவதற்குரிய ஆற்றலை உடைய ஒரு சமுதாயத்தின் கையில் கலை இலக்கியங்கள் வலிய ஆயுதங்களாகின்றன. மக்களைப் போதையூட்டி மயக்கத்தில் ஆழ்த்தும் முதலாளியக் கலை இலக்கியங்கட்கு எதிரான வலிய கவசமாகவும் அவை செயற்படுகின்றன. மக்கள் இலக்கியங்களைப் படைப்போர் இதை மனதில் கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக மாற்றத்தில் மக்கள் இலக்கியத்தின் பணி

சமூக மாற்றம் திடீரென்று தோன்றும் தீப்பொறியல்ல. அது நீண்டகால வெகுசனப் பணியின் விளைவால் நிகழ்வது. சமூக மாற்றத்தை சாத்தியமாக்க வெகு சனங்களின் பங்குபற்றல் அவசியம். அப்பங்குபெற்றலை இலக்கியங்கள் இலகுவாக சாத்தியமாக்குகின்றன. இதற்கு வரலாறெங்கும் எண்ணற்ற உதாரணங்கள் உண்டு. இங்கு சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

பலஸ்தீனக் கவிதைகளின் வீச்சும் ஆழமும் அவை மக்களைப் பாடுகின்றன. மக்களால் பாடப்படுகின்றன. அக்கவிதைகளே சியோனிச வெறித்தனத்துக்கெதிரான வலிய கவசமாயுள்ளன. மக்களின் போராட்ட உணர்வாய், நம்பிக்கையாய் தினந்தோறும் வெளிப்படுகின்றன.

நிகராகுவாவில் சன்டனிஸ்டாக்களின் எழுச்சியின் போது தோற்றம் பெற்ற போராளிப் பெண் கவிஞர்களின் கவிதை மிகவும் முக்கியமானவை. போராட்டத்தின் வலியையும் வலிமையையும் இரத்தமும் சதையுமாய் பதிவு செய்தவை. அதேபோலவே அமெரிக்க ஆக்கிர மிப்புக்கெதிராக போட்டோ ரீக்கோ பெண்களின் புரட்சி கரமான தொடர்ச்சியான போராட்டத்தின் அடிப்படையாக அமைந்தவை அப்போராளிப் பெண்களின் கவிதைகளே.

நிகரகுவாவின் தலைசிறந்த கவிஞராக இன்றும் மதிக்கப்படுகின்ற ஏர்னெஸ்டோ கார்டினலின் பணி மக்கள் இலக்கியத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு. ஏர்னெஸ்டோ கார்டினல் தான் மதகுருவாக நியமிக்கப்பட்ட சொலன்டினாமோ தீவுகளில் ஒரு இலக்கிய இயக்கத்தைக் கட்டியெழுப்பினார். எழுதப் படிக்கத் தெரியாத விவசாயிகள், மீனவர்கள், தொழிலாளர்கள் மத்தியில் கவிதை எழுதவும், பாடவும், ஓவியம் வரையவும் கற்பித்தார். 1970களில் புரட்சிகர போராளிகளின் முக்கியமான கலை இலக்கியத் தளமாக சொலன்டினாமோ தீவுகள் அமைந்தன. அங்கிருந்து ஏராளமான மக்கள் கவிஞர்களும் ஓவியர்களும் உருவானார்கள்.

நைஜீரியாவில் பல்தேசிய கம்பெனியின் சுரண்டலுக்கும் அடக்குமுறைக்குமெதிரான இடையறாத போராட்டத்தை முன்னெடுத்தவர் கென் சரவேவோ. மக்களை அணிதிரட்ட தனது கவிதைகளையும் பாடல் களையும் முக்கியமான கருவியாகப் பயன்படுத்தியவர் சரவேவோ. அதேபோல மக்களுக்கான இலக்கியம் படைக்கப்பட வேண்டும் என்பதற்கான காலனித்துவ மொழியைத் துறந்து தனது மக்களின் மொழியான கிக்கியூவில் எழுதத் தொடங்கி சமூக மாற்றத்துக்கு இன்றுவரை இடையறாது பங்களிப்பவர் நுகி வான் தியாங்கோ. இவையெல்லாவற்றையும் நன்கறிந்தாலேயே "சொற்களும் ஆயுதங்கள்தான்" என்று சொன்னார் துணைத்தளபதி மார்க்கோஸ். "கருத்துக்களிலும் கதை களிலும் இருந்துதான் எந்தவொரு புரட்சியும் பிறக்க முடியும்" என்றார் ஃபிடல் காஸ்ரோ.

சமூக மாற்றத்தை நோக்கி மக்களை நகர்த்தும் முக்கிய கருவியாக இலக்கியங்கள் இருக்க முடியும். அவை கதைகளாக, கவிதைகளாக, நாடகங்களாக, பாடல்களாக எனப் பல்வகைப்பட்ட வடிவங்களை எடுக்கவியலும்.

## நிறைவுக் குறிப்புகள்

ஈழத்துத் தமிழ் இலக்கியச் சூழலில் மக்கள் இலக்கியத்தின் தேவை தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ளது. எல்லோருடனும் பகிரவேண்டிய அனுபவங் களும் சிந்தனைகளும் உள்ளன. அனைவரும் அறியவேண்டிய பொது உண்மைகள் உள்ளன. நமது சமூகம் பற்றி அறிய வேண்டியன உள்ளன. நமக்கு நடந்தனவும் நடப்பனவும் பற்றி மனத்தடையின்றி எடுத்துரைக்கவேண்டியன உள்ளன. நம்மைச் சூழுஞ் சமூகங்கள் பற்றி அறிய வேண்டியன உள்ளன. இதை மக்கள் இலக்கியப் படைப்பாளிகள் மனங்கொள்ள வேண்டும். பல நூற்றாண்டுகளாக் நம்மைப் பீடித்துள்ள சமூக நோய்களின்றும் நமது சிந்தனைத் தேக்கத்தினின்றும் விடுபடாமல், விடுதலை பற்றிப் பேசுதல் பொருளற்றது. எதையும் மூடிக்கட்டுவதால் நமது சிந்தனைத் தேக்கம் இல்லாதொழியாது. அனைத்தையும் வெளி வெளியாகப் பேச வேண்டும். அதை இலக்கியத்தால் மிகச் சிறப்பாகச் செய்ய இயலும். நாம் அதற்கு ஆயத்தமாக வேண்டும்.

நாம் கொண்டிருந்து இழந்த வாசிப்புப் பழக்கத்தை மீளவும் வென்று நமதாக்க வேண்டும். முதலில் நமது இலக்கியம் நம்மைப் பற்றியது. சகோதரச் சமூகங்கள் பற்றியது. நம்மைச் சூழவுள்ள உலகுடன் நமது உறவு பற்றியது. நமது பெருமைகட்கு உரியதாகக் கூறும் இலக்கியங்கள் நம்மை அடையாளப்படுத்தா. வரலாறு பற்றிய புனைவுகள் நமது சமகால இருப்பாகாது என்பதை புரியவும், புரியவைக்கவும் வேண்டும். அதே வேளை மொழி ஒரு சனநாயகமான சமூகச் செயற்பாடு. அந்த சனநாயகத்தன்மையைப் பிரதிபலிப்பது மக்கள் இலக்கியங்களே. எனவே மக்கள் இலக்கியங்கள் உருவம், உள்ளடக்கம் ஆகியவற்றில் சனநாயகத்தன்மை உள்ளனவாக வளர்த்தெடுப்பது அவசியம்.

அங்கீகாரத்துக்கான ஆவலும் புகழ் நாட்டமும் அடிப்படையான இலக்கியத் தகுதியாகக் கொள்ளப்படும் போக்கு அதிகரித்து வருகிறது. தமிழக இலக்கிய பிம்பங்களின் தயவுக்காகவும் குறிப்புக்காவும் காத்துக் கிடக்கும் ஒரு இலக்கியக் கூட்டம் உருவாகியுள்ளது. அது சுயவிளம்பரத்தையும் சுயபுராணத்தையும் அன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சமூகப் பயனான எதையும் செய்யவியலாதது. அந்தக் கூட்டமே இலக்கியத்தின் பேரால் சமூகச் சீரழிவான கருத்துக்களையும் கேடுகளையும் செய்கிறது. அதற்கு பின்னவீனத்துவம் என்று பெயர் கொடுத்து நவீன இலக்கியம் என்ற பெயரால் அபத்தங்களை எழுதிக் குவிக்கின்றது. இது இலங்கையிலும் புலம்பெயர் சூழலிலும் முக்கிய திசைவழியாயுள்ளது.

இலங்கையின் சமூகநெருக்கடிகள் ஏற்படுத்தியுள்ள உளவியல் சிக்கல்கள் ஒருபுறமும் அன்றாட வாழ்வின் சவால்கள் ஏற்படுத்தியுள்ள அழுத்தங்கள் மறுபுறமுமாக மக்கள் அல்லல்படுகையில் நம்பிக்கை ஒளியாக, ஆற்றுப்படுத்தும் கருவியாக, போராட்டத் திசைமார்க்கமாக இலக்கியங்களே திகழ முடியும். மக்களைப் பாடுகின்ற, மக்கள் பாடுகின்ற இலக்கியப் படைப்புக்களை நோக்கி படைப்பாளிகளையும் வெகுமக்களையும் அழைத்துச் செல்வதே இன்று எம்முன்னுள்ள பிரதான பணி.

❐

கவிதை

# விழித்திடு



*வீதிகள் தோறும் கோசங்கள்*
*விடியல் காணா எங்கள்*
*தேசங்கள்*
*காலையும் மாலையும்*
*கஞ்சா வாசங்கள்*
*களித்திடும் மானிடர் மாயங்கள்*
*நாளைய பொழுதுகள்*
*இருட்டுக்கள்*
*நம்பிக்கை என்பது ஏழையின் கனவுகள்*
*வாலிப வயது பருவங்களே*
*வீழ்ச்சியில் உங்கள் காலங்கள்*
*வெளிச்சம் வாழ்வினில்*
*ஒளிர*
*உங்கள் வியர்வைகள் பருதியில் காயட்டும்*
*பாய்ந்திடும் குருதியும் உறைந்து விடும்*
*இந்த பாழ்பட்ட போதையின் பாதகத்தால்*
*மூழ்கிடும் மூளையும் செத்து விடும்*
*நீங்கள் மீண்டிட வேண்டும் எம்நிலத்தில்*
*வசந்தங்கள் வாழ்வினில்*
*வீசட்டும்*
*உங்கள் வாழ்வினில் வளங்கள் நிறையட்டும்*
*புழுதியின் வாசம் நிரப்பட்டும்*
*உங்கள் உழைப்பால் இப் பூமியும் பூர்த்துக் குலுங்கட்டும்*
*வாழ்வது என்பது ஒரு முறை*
*இந்த வாழ்க்கையும் இறைவன் பெருங் கொடை*
*நம்பியே நீயும் வாழணும் நாசங்கள் விலகிப் போகணும்*
*நாளைய விடியலும் உன் பெயர்தனை எழுதணும்*

*வவுனியூர் ஆர்.ஜெ.கலா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவாவில் கேட்ட ஒப்பாரி



கண்ணீரும் வத்திருச்சி என்ன பெத்த அம்மா
கையும் காலும் சோர்ந்தருச்சி
நெஞ்சும் தான் எரிஞ்சிரிச்சி
நெடுங் கவல கூடிரிச்சி

தின்னு கொழுத்தவுக ஒனக்கு
திருட்டுப் பட்டம் தந்தாரோ
நாளெல்லாம் ஒழைச்ச உன்ன
நடு ரோட்டில் போட்டாகளோ

மூளி அலங்காரி
மோசம் செஞ்ச கொடுமக்காரி
பாவி நாசக்காரி – பொய்
பழி போட்ட மோசக்காரி

வேசம் போடும் ராட்சசியால்
நாசம் வந்து சேர்ந்தம்மா
பாசம் அன்பை விற்கும் அந்த
பாதகியை என்ன சொல்வேன்?

காக்கிச் சட்ட வெறியால – அங்க
சாக்கி ஒன்னும் இல்லையம்மா
இரும்பு கம்பி கம்பாலே
எத சொல்ல முடியுமம்மா?


என்ன சொல்லி அழுதாயோ அம்மா
எவன் காலில் விழுந்தாயோ
மூச்சி நிற்கும் நேரத்துல
மொணங்கி எதை சொன்னாயோ

தாய் என்ன புள்ளை என்ன
நாயாளும் தேசத்திலே
கெழவி என்ன கொமரி என்ன
கேடு கெட்ட நீதியில

ஏழை அழுத கண்ணீர் அம்மா – மக்கள்
இதயங்களில் சேர்ந்திருக்கும்
காலம் வருகையிலே
கரு நாகம் போல எழும்

ஊவா. க. உலகநாதன்


---



குடும்பம் ஒரு கதம்பம்
திருமணம், குடும்பம்,
பெற்றோரியம் ஆகியவை சார்ந்த
உளவியல் மையக் கட்டுரைகள்

கோகிலா மகேந்திரன்

விலை:
வெளியீடு :
ஜீவநதி வெளியீட்டகம்



சிறுபொறி
கல்வி மேம்பாடு புதிய தளம் அமைக்கும்
மாணவர் இதழ்


விலை:
வெளியீடு :
கே.ஏ.எஸ். சத்தியமனை நூலகம்
சுழிபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புடுங்கிகள்

அலெக்ஸ்பரந்தாமன்,

புதுக்குடியிருப்பு.



பிரதேச செயலகத்தில் உள்ள காணிப் பிரிவு அலுவலகத்தில் இருந்து பரமனுக்கு ஓர் அழைப்பாணை வந்திருந்தது.

மேற்படி, இ.கரன் என்பவரால் கொடுக்கப் பட்ட காணிப்பங்குரிமை முறைப்பாடு தொடர்பாக, கீழ்காணும் திகதியன்று பகல் 12 மணிக்கு எமது செயலகத்தில் உள்ள காணிப் பிரிவுக்கு தாங்கள் வருகை தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

பரமனுக்கு ஒருபுறம் சிரிப்பாகவும் மறு புறம் எரிச்சலாகவும் இருந்தது. எப்படியாவது ஏதோ ஒரு வகையில் தனது காணியின் ஒருபகுதியை அபகரித்துவிட வேண்டுமென்ற கரனின் பேராசை அற்பமான அதேவேளை அறமற்றதொன்று என்பதையும் அவனது குணவியல்பு வருடங்கள் பல கடந்த பின்பும் மாறா அதே நிலையில் இருப்பதையும் பரமன் உணர்ந்து கொண்டான்.

கரன் என்பவன் பரமனோடு கூடப் பிறந்தவன். சிறுவயதில் இருந்தே அடுத்தவர் பொருள்களை புடுங்கி எடுப்பதில் இருந்து, வீட்டில் உள்ள பொருள்களையும் கள வெடுக்கத் தொடங்கியிருந்தான். பெற்றோரின் தீவிரமற்ற கண்டிப்பு... கேடுகள் விளைவிக்கும் கூடா நட்புகளின் சேர்க்கை... கரனை மேலும் மேலும் விபரீதமான பாதைகளில் வழி நடத்திச் சென்று கொண்டிருந்தன.

பரமனது 'பாட்டா' செருப்புகள், மேசை லாச்சிக்குள் வைக்கப்பட்டிருந்த 'மொண்டியா' கைக்கடிகாரம், அலுமாரிக்குள் இருந்த பெறுமதியான சேட் மற்றும் அரைக் காற்சட்டைகள் என்பன காணாமல் போகத் தொடங்கின.

குறிப்பிட்ட பொருள்கள் காணாமல் போவதுபற்றி பரமன் அறியவரும்போது, அன்றையநாள் அந்தவீடு பெரும் அமளி துமளிப்படும்.

"நான் வைச்ச இடத்தில என்ர பொருளெல்லாம் காணாமல் போகுது. ஆர் எடுக்கிறது? ஆரோ பிறத்தியார் வந்து எடுக்கினமே?"

பரமன் ஒருதடவை தாயைப் பார்த்து மன ஆற்றாமை மிகுந்து கேட்டபோது, தாயும் மிகக் கவலையடைந்தவளாய் அதைக் கரனிடம் கேட்டே விட்டாள்.

அடுத்த கணம் —

"உன்ர சாமான் சக்கட்டுகள் காணாமல் போறதுக்கு நானே காரணம்? நான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எடுத்ததைக் கண்டனியே...?" என்று கேட்டபடி... பரமனது கன்னங்கள், காதுகள் மீது இரண்டு கரங்களாலும் மாறிமாறி அறைவான். பரமனோ அவனது அடியினது அகோரத்தைத் தாங்க முடியாது குளறி அழுவான்.

பிள்ளைகள் மீதான பெற்றோர்களது பொறுப்பற்ற, பாரபட்சமான செயல்களினால் கரன் அக்குடும்பத்துக்குள் தன்னிச்சையாக வளரவும் செயல்படவும் காரணமாகிப் போயின. பள்ளிப்படிப்பைப் பாதியிலை நிறுத்திவிட்டு, ஊரிலே கூலிவேலைகளுக்குச் செல்லத் தொடங்கினான் கரன். அவன் படிப்பைப் பாதியில் நிறுத்தியது குறித்து பெற்றோர் கவலைப்படவுமில்லை. அது குறித்து அவனிடம் விசாரிக்கவுமில்லை. கூலி வேலைக்குச் சென்றுவரும் நாள்களில், அவ்வப்போது தாய்க்குக் கொடுக்கும் சிறு தொகைப்பணம்... தாய்க்கு கரன்மீது அதிக அன்பும் அக்கறையும் கொள்ள ஏதுவாயிற்று. பரமன் அக்குடும்பத்துள் இரண்டாம் தரப் பிரஜையாக நடத்தப்பட்டான். அவன் கூறும் எந்தவொரு நியாயமான வார்த்தைகளும் எடுபடாமல் போயிற்று.

பரமனும் தனது எஸ். எஸ். சி. கல்வித்தரத்தை முடித்துக்கொண்டு, மேற்கொண்டு படிக்க முடியாத நிலையில், கரனைப்போல தினக்கூலி வேலைகளுக்குப் போகாமல், அந்த ஊரில் உள்ள கணேசலிங்கம் என்பவரின் தச்சுப் பட்டறையில் வேலைக்குச் சேர்ந்தான். கணேசு கிழமைக்கு ஒரு தடவை தொழிலாளிகளின் சம்பளக்கணக்கைப் பார்த்து, முடித்து வேதனம் கொடுப்பது வழக்கமாக இருந்தது. இதன் நிமித்தம் பரமனது கையில் கொஞ்சம் பணம் புரள ஆரம்பித்தது. பரமனிடம் எந்தவிதமான கெட்ட பழக்கங்களும் இருக்கவில்லை. இதனால் அவனுக்கு அநாவசியமான செலவுகளும் ஏற்படவில்லை.

பரமன் ஒழுங்காக வேலைக்குப் போவதையும் அவனிடம் காசு புழங்குவதையும் கண்ட கரன், வேலைக்குச் செல்வதைக் குறைத்துக் கொண்டான். கரன் வேலைக்குப் போகாத நாள்களில், பரமனது மேசை லாட்சிக்குள் பணம் களவு போக ஆரம்பிக்கும். அதன்பின், பரமனது அவல ஒலி அந்த அயலெங்கும் கேட்கத் தொடங்கும்.

கரனின் தாய்தந்தை அவனது பொறுப்பற்ற போக்குக் குறித்துக் கவலைப்பட்டதாகவும் தெரியவில்லை. 'ஆம்புளைப்புள்ளை... எங்கையெண்டாலும் கையடிச்சு காலடிச்சு பிழைச்சுத் தின்னும்தானே..' என்ற எண்ணப் பாங்கோடு, அவனைத் தவறான வழியில் நடத்தியபடி, நடக்க விட்டபடி... கடந்து போய்க்கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் முற்பகல்வேளை... எதிர்பாராத செய்தியொன்றை அந்த ஊர்மக்கள் ஒழுங்கைகள் எங்கும் பரப்பிக் கொண்டிருந்தார்கள்.

"பட்டப்பகலில அதுவும் வீட்டில தனியா இருந்த பொம்புளையின்ர தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடுறதெண்டது, சும்மா இலேசுப்பட்ட விசயம் இல்லைக் கண்டியளோ..."

தச்சுப்பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்த பரமனுக்கு தகவல் வந்து சேர்ந்தது. அவன் மனதளவில் நிலைகுலைந்து போனான். சந்தைக்கு மீன்வாங்கப்போன கணேசலிங்கம் திரும்பிவந்து பட்டறையில் நின்ற பரமனை அனுதாபத்தோடு பார்த்தார். பின் அவர் நிகழ்ந்த விடயத்தைத் தெளிவுபட உறுதிபடத் தெரிவித்த பிற்பாடே பரமன் அதை நம்பினான்.

"நகைக்கடை உரிமையாளர் செல்வநாயகத்தின்ர வீட்டைபோய், அவற்ர மனிசியின்ர கழுத்தில கிடந்த தாலிக்கொடியை அறுத்துக் கொண்டு ஓடியிட்டினமாம்... உங்க ஒழுங்கையள் முழுக்க சனங்கள் நிண்டு, உதைத்தான் கதைக்குதுகள்..."

மாலை நேரம் வேலை முடிந்ததும் அவன் உடனே வீட்டிற்குச்செல்ல விரும்பவில்லை. தெருவிலே முகம் காட்டப் பயந்தான். வெட்கப்பட்டான். வேதனைப்பட்டான்.

'சே... எவ்வளவு பெரிய மானக்கேடு. அப்பர் ஆத்தை சீரில்லாததாலை வளர்ப்பு முறை பிசகிப்போட்டுது. இனி என்னெண்டு ஊரிலை முகம் காட்டி நடந்து திரியுறது...?'

குமுறிக்கொண்டிருந்தது பரமனுக்குள் சின உணர்வு.

மாலைப்பொழுது மங்கி இருள் பரவத் தொடங்கியதும், அவன் தச்சுப்பட்டறையில் இருந்து வீட்டுக்குத் திரும்பினான். வீடு ஒரே இழவு கோலமாக இருந்தது. தாயும் தந்தையும் முற்றத்தில் நின்றபடி... தங்கள் மகனது வளர்ப்புமுறை குறித்து, ஒருவருக்கொருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றம் சுமத்தியபடி இருந்தனர். அருவருப்பான வார்த்தைகள் கொண்டு சமர் புரிந்தனர். அவர்களைச்சுற்றி வேடிக்கை பார்க்கவென வந்துநின்றார்கள் ஊரவர்கள் சிலர். வீட்டிற்கு வந்த பரமனைக் கண்டதும், தாய் ஓடிவந்து அவனுக்கு முன்பாக நின்று, ஓ... வெனக் குளறி அழத்தொடங்கினாள். பரமன் தாயை அருக்களிப்புடன் பார்த்து விட்டு, அப்பால் வீட்டினுள் நுழைந்து மறைந்து கொண்டான்.

அதன்பின், ஒருவாரத்துக்கும் மேலாக அவன் தச்சுப்பட்டறைக்குச் செல்லவில்லை. வீட்டிற்குள்ளேயே இருந்தான். சாப்பாட்டில் கவனம் கொள்ளாததினால், அவனது உடல் பலவீனமடைந்திருந்தது. இரண்டு தடவைகள் தச்சுப்பட்டறையில் இருந்து, கணேசு வந்து அவனது மனதை ஆறுதல்படுத்திவிட்டுப் போனார். இதற்கிடையில் களவு செய்து விட்டு, சக நண்பர்களோடு தலைமறைவாகி யிருந்த கரனை, பொலிஸார் தகவலறிந்து பிடித்துக் கொண்டுபோய் விட்டனர். பொலிஸ் நிலையத்தில் தம் விசாரணையை முடித்த பொலிஸார், அவர்களை நீதிமன் றத்தில் பாரப்படுத்தியபோது, நீதிமன்று கரனை முதலாவது குற்றவாளியாகக் கண்டு, ஆறுமாதகால தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தது.

சிறை சென்றுவந்தபின்பும், கரன் மனம் திருந்தியதாக இல்லை. பல திருட்டுக்களோடு தொடர்புடைய குற்றவாளிகள் சிலர், சிறையினுள் அவனுக்கு நண்பர்களாகி இருந்தார்கள். இதன்நிமித்தம் அவர்களும் விடுதலையாகி வெளியே வந்ததும், கூட்டாக இணைந்து பல திருட்டுகள், கொள்ளைகள் போன்றவற்றில் ஈடுபட ஆரம்பித்தார்கள்.

ஒருதடவை ஆடம்பரமான வீடொன்றில் இவர்கள் கொள்ளை முயற்சியில் ஈடு பட்டிருந்தபோது, அதில் ஒருவனை வீட்டு உரிமையாளர் மடக்கிப் பிடித்து விட்டார். கரன் உட்பட ஏனையோர் தப்பியோடி விட்டார்கள். பிடிபட்ட நபரைப் பொலிஸில் ஒப்படைத்ததும், பொலில் அவன்மீது மேற்கொண்ட விசாரணையின் நிமித்தம், அந்தநபர் தன்னோடு கூட வந்தவர்களையும், ஏற்கனவே நடத்திய களவு, கொள்ளைச் சம்பவங்கள் அனைத்தையும் கக்கி விட்டான். ஒருமாத காலத்தின்பின்பு, அயற் கிராமமொன்றின் ஓதுக்குப்புற கள்ளுத் தவறணையில் வைத்து, கரன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டான்.

பொலிஸார் கரனை நீதிமன்றில் முற் படுத்தியபோது, வழக்கை விசாரித்த நீதிபதி கரனுக்கு ஆறுவருடகால சிறைத்தண் டனையை வழங்கி, வழக்கை நிறைவு செய்தார்.

கரனுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பைக் குறித்து சிலநாள்கள் வரை ஊரிலே நக்கல், நையாண்டியான கருத்துகள் பரவலாகி... பின் நாளடைவில் அவை மெல்லத் தணிந்து போயின.

பரமன் இப்போது தச்சுப்பட்டறைக்குச் சென்று வந்து கொண்டிருந்தான். குடும்பத் துள் எதுவித குழப்பங்களும் இல்லாமல் இருந்தன. கரனின் திருட்டுச் செய்கைகளால் மிகுந்த மன அழுத்தத்துக்குள்ளாகிப்போன தாயும் தந்தையும் இப்போது யாவும் அடங்கிய நிலையில், அமைதியாக இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

இருப்பினும், பரமனுக்கு ஊரில் இருக்கப் பிடிக்கவில்லை. தனக்குத் தெரிந்த சினேகிதன் ஒருத்தன் தந்தையுடன் வன்னியில் விவசாயம் செய்து கொண்டிருந்த நிலையில், அங்கு போய் அவனோடு சிலநாள்கள் தங்கி யிருந்தான். பரமனுக்கு அந்த இடம் பிடித்துக் கொண்டுவிட்டது. நண்பனோடு கூட இருந்து கொண்டு, கூலிவேலைகளுக்குப் போவதும், ஏனைய நேரங்களில் அவனது தோட்டத்தில் உதவி ஒத்தாசை புரிவதும், சிலநேரங்களில், காணி அருகோரம் இருக்கும் காட்டுப் பகுதியை வெட்டி வெளியாக்குவதுமாக இருந்தான். ஆடி 83 கலவரத்தால் பாதிக்கப் பட்டு, மீள ஊருக்குச் செல்ல விரும்பாது அந்தக் கிராமத்தில் தங்கிவிட்டவர்களுக்கு அரசகாணிகள் பங்கிட்டுக் கொடுக்கும் போது, பரமனும் தான் வெட்டி வெளியாக்கிய நிலப்பரப்பைப் தனது பெயரில் பதிவு செய்து தனதாக்கிக் கொண்டான்.

கரன் ஆறுவருட சிறைவாழ்க்கையை முடித்துக்கொண்டு வீடுவந்ததும், அவனுக்கு வெளிநாடு செல்லும் ஆசை ஏற்பட்டது. பணத்திற்கு பெற்றோர் இருக்கின்ற வீடு வளவை ஈடு வைத்துத் தரும்படி அவர்களைச் சதா தொந்தரவு படுத்த, அவர்களும் ஏதோ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஒரு நம்பிக்கையில், எதிர்பார்ப்பில் சம மதித்துக் கொண்டனர். பணத்தைப் பெற்றுக் கொண்டு பட்டணத்துக்குப் புறப்பட்ட கரன், பின்பு ஊருக்கு வரவே இல்லை. ஈடு வைத்த நாள் கடந்து விட்டது. பெற்றோர் இருவரும் நடுத்தெருவில் நிற்பதையறிந்த பரமன், ஊருக்குப்போய் அவர்களைக் கூட்டிக் கொண்டு வந்து வன்னியில் தன்னோடு சேர்த்துக் கொண்டான்.

போர்க்காலநிலை வன்னியில் புதிதாக முளைவிட்டபோது, பரமனின் தந்தையும் தாயும் ஷெல் தாக்குதலில் பலியாகிப் போனார்கள். தொடர்ந்து நிகழ்ந்த போரின் அவல உச்சத்தின்பின், பரமனும் அவனைப் போன்ற பலரும் எதிர்காலமற்ற பல வினாக்களோடு, இராணுவத்தினரிடம் சரணடைந்து கொண்டார்கள்.

வவுனியா — செட்டிகுளம் இடைத்தங்கல் முகாமில் மூன்று வருடங்கள் வாழ்ந்துவிட்டு, பின் மீள்குடியேற்றமாக தனது வாழ் விடத்துக்குத் தன் குடும்பத்தோடு வந்து சேர்ந்தான் பரமன்.

வன்னிப் போர் அவல நிகழ்வுகளால், அவனுக்கு சொந்த ஊரின் நினைவுகள் அற்றுப்போய் விட்டன. தாயும் தந்தையும் அவலமாய் இறந்ததோடு, அவன் அவர்களின் வழியில் உள்ள உறவினர்கள் எவரையும் நாடிச் செல்லவில்லை. ஊரோடொத்த மனைவியின் உறவுகளே எனக்குப் போதும்... என்ற எண்ணப்பாங்கோடு இருந்து விட்டான். வன்னிப்போர் முடிவுக்கு வந்து பத்து வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையில், இதுவரையில் அவனது சொந்த ஊரில் இருந்து யாரும் அவனைத் தேடி வரவுமில்லை.

இந்நிலையில்தான், பரமனின் சகோதரன் கரன், தனது தம்பி வன்னியில் வசதியாக வாழ்வதாக அறிந்து கொண்டான். தாய் தந்தையோடு பரமன் வாழ்ந்த நிலையில், அவனது காணியில் தாய்தந்தையருக்குரிய பங்கில், பிள்ளையென்ற வகையில் தனக்கும் பங்கு உண்டு... என நினைத்தான். சிறுவயதில் இருந்தே அடுத்தவர் பொருள்களை அடா வடித்தனமாக புடுங்கி எடுத்து அனுபவித்து வாழ்ந்தவனுக்கு, பரமனுக்கு இரண்டு இடங்களில் காணி இருப்பதை அறிந்து கொண்டு, பரமனின் ஊருக்கு வந்தான். வந்தவன், அப்பிரதேச செயலகத்தில் உள்ள காணிப்பிரிவு அலுவலகத்திற்கு ஒரு முறைப் பாட்டுக் கடிதத்தைக் கொடுத்தான்.

குறிப்பிட்ட நாளில் பரமன் தனது காணிக்குரிய ஆவணங்களோடு பிரதேச செயலகத்தில் உள்ள காணிப்பிரிவு அலு வலகத்திற்குச் சென்றிருந்தான். செயலகப் பிரிவினுள் செயலர், விசாரணை அதிகாரிகள், கிராம சேவகர்கள், உதவியாளர்கள்... எனப் பலரும் அமர்ந்திருந்தார்கள். பலரது காணிப் பிரச்சினைகள் விசாரிக்கப்பட்டு, இறுதி முடிவு எடுக்கப்பட்டு, அவரவர்க்கான அறி வித்தல்கள் கொடுக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

பரமனது முறை வந்தபோது, அவன் அழைக்கப்பட்டான். கரனும் கூடவே சென்றான். விசாரணை ஆரம்பமாகியது.

விசாரணை அதிகாரியொருவர் பரமனை விசாரிக்க ஆரம்பித்தார்.

"உங்களுக்கு இந்தக்காணி எப்படிக் கிடைத்தது...? உங்கள் பெற்றோர் வழிச் சொத்தா? "

"இல்லை ஐயா. இது நான் ஏற்கனவே பல வருசத்துக்கு முன்னம் காடாக் கிடந்த இடத்தை வெட்டி வெளியாக்கி, பெமிற் குடுக்கேக்கை என்ர பெயரில பதிஞ்சு வைச்சிருக்கிறன். இவர் இப்ப நாற்பது வருசத்துக்குப் பிறகுவந்து, தனக்கும் காணி யில பங்கிருக்கு தா... எண்டால், என்ர காணி என்ன அடுத்தவன்ர கழுத்தல கிடக்கிற தாலிக்கொடி, சங்கிலி எண்ட நினைப்போ... நினைச்சவுடனை புடுங்கிக் கொண்டு போறதுக்கு?"

விசாரணை அதிகாரிக்கு பரமன் இறுதி யாகக் கூறிய வார்த்தைகளின் சூட்சுமம் புரியவில்லை. அவர் கரனைத் திரும்பிப் பார்த்தார்.

"நானும் இடைக்கிடை வந்து இவர் களோடை இருந்து காடு வெட்டினனான். நிலைமை இப்படியிருக்க, இவர் தனக்கு மட்டும்தான் எண்டு உரிமை கொண்டாட முடியாது. இவருக்கு ஏற்கனவே இரண்டு காணி இருக்குது. அதில ஒண்டை எனக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரச் சொல்லுங்கோ..." கரன் கூறிக் கொண்டிருக்கையில், பரமன் இடைமறித்தான்.

"எனக்கு இரண்டலல, இருபது காணி இருந்தாலும், அடுத்தவன்ர சொத்துகளைப் புடுங்கித் தின்னுற ஆக்களுக்கு நான் காணி குடுக்க வேண்டிய அவசியமில்லை. இது நான் பிரயாசைப்பட்டுத் தேடிய சொத்து.. "

காணி அதிகாரி பரமனை அமைதியாக இருக்கும்படி பணித்தார். பரமன் அமைதியானான். அதிகாரி மேற்கொண்டு கரனிடம் பல கேள்விகள் கேட்டார். அவரது கேள்விகளுக்கு கரனின் பதில்கள் முரண்பாடாக வெளிப்பட்டன. இதை செயலர் உட்பட ஏனைய அதிகாரிகள் மற்றும் கிராம சேவகர்கள் தங்களுக்குள் உள்வாங்கியபடி இருந்தனர்.

"நான் இது குறிச்சு நீதிமன்றுக்கும் போனனான். அவையள் உங்களிட்டை கடிதம் வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னவை..." விசாரணை செய்து கொண்டிருந்த அதிகாரிக்கு, கரன் மேலதிக தகவலாக இதைக் கூறினான்.

"நாங்கள் கடிதம் தரமுடியாது.காணிக்குரியவர் நீண்டகாலமாக அங்கு இருந்திருக்கின்றார் என்பதற்கான வலுவான ஆதாரமாக, காணிக்குரிய பெமிற்றில் அவரது பெயர் பதியப்பட்டு, அப்போதைய பிரதேச செயலரினால் உறுதிப்படுத்தப்பட்டு, அவரது கையொப்பமும் இடப்பட்டிருக்கிறது. இந்த நிலையில இப்ப நீங்கள் வந்து காணியில எனக்கும் பங்கு இருக்கு. பிரித்துத்தர வேணுமெனக் கேட்கிறது நல்லதல்ல. இது மனசாட்சிக்கு விரோதமான செயல். அப்படி உங்களுக்கு இருக்கிறதுக்குக் காணி இல்லையெண்டால், இந்தப்பிரதேசத்தில ஒருகால் ஏக்கர் அரசகாணி உங்களுக்கென ஒதுக்கித் தரலாம். பிறகு நீங்கள் அதில வந்து இருக்கலாம்."

அதிகாரி கூறிக்கொண்டிருக்கையில், கரன் அவசரமாகக் குறுக்கிட்டான்.

"எனக்கு வேறை இடமும் வேண்டாம். இவர் இருக்கிற காணியில பின்பக்கம் தென்னைமரங்கள் நிக்குது. அந்தப்பக்கத்தை எனக்குப் பங்கிட்டுத் தாங்கோ..."

கரனை விசாரணை செய்த அதிகாரி, அவனைக் கூர்ந்து பார்த்தார். அவருக்கு உண்மை நிலை புரிந்து விட்டது. கரனைப் பார்த்து ஒரு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

"நீங்கள் இருக்கிறதுக்கு இடமில்லாமல் தானே காணி கேட்கிறியள்...?"

"ஓமோம்..."

"பிறகேன் தென்னைமரங்கள் நிற்கிற பக்கமாக, அந்தக் காணியை மட்டும் கேட்கிறீர்கள்?"

அந்த அதிகாரி கேட்ட கேள்விக்கு, கரனால் பதில் கூற முடியவில்லை. முகத்தில் எரிச்சல் உணர்வு மேலிட, அந்த அதிகாரியைப் பார்த்தான். இந்த முகமாறுதலை பிரதேச செயலர் உட்பட அங்கிருந்த அனைவரும் அவதானித்துக் கொண்டார்கள். செயலருக்கு கடுப்பேறிக் கொண்டது. தனது கையில் வைத்திருந்த பரமனது காணிப் பெமிற்றை அவனிடம் கொடுத்துவிட்டு, கரனைப் பார்த்துக் கூறினார்.

"பெமிற் பரமனது பெயரில் நீண்ட காலத்துக்கு முன்பே எழுதப்பட்டிருக்கிறது. அதனால இந்தப் பிரச்சினையை மேற்கொண்டு விசாரிக்கவோ அல்லது நீதிமன்றத்துக்கான அனுமதிக் கடிதத்தைத் தரவோ நாங்கள் விரும்பவில்லை. நீங்கள் விரும்பினால் உங்களுக்கு அரச காணி ஒதுக்கித் தரப்படும். அதில வந்து இருங்கோ..." என்றவர், பரமனைப் பார்த்து, "நீங்கள் போகலாம். விசாரணை முடிந்து விட்டது..." என்றார்.

பரமன் எழுந்து கொண்டான். அவருக்கு நன்றி கூறிவிட்டு, வெளியே வருகையில், உதவியாளர்களில் ஒருவர், அவனிடம் வந்து விசாரணைகளின் அடிப்படையில் நடந்த நிகழ்வினைச் சுருக்கமாக எழுதி, அவனிடம் கையொப்பம் வாங்கிக்கொண்டு அவனை அனுப்பி வைத்தார்.

பொழுது பிற்பகலைக் கடந்து கொண்டிருந்தது. மதிய நேர அனல் வெக்கையும் தணிந்திருந்தது இவ்வளவு நேரமும் பரமனுள் தகித்த மனவெக்கையைப்போல!

❏

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையூறாய்



நேர்ந்திடும் எனப்
பல்லாண்டு காத்து
ஊர் அமைந்த கோயிலில்
சீர் திகழ இன்று வந்து
வாசல் அண்டி நிற்க,

தேர் ஏற சுவாமி காவி
அரோகரா கோசமிட
நாற்புறமும் யாபேரும்
பார்த்திருக்க
பூச்சிந்த பூரித்து,
பரவசிக்க
தேர் இருத்தி மீண்டார்
தோள் கொண்டார்

கரம் கூப்பிய மங்கையர்
மகிழ
யார் கண்டார்
ஆர் நவின்றார்
பேர் ஒளி பரவிற்று

புறம் வடம் நீள இடையே
குன்றுகள் எனத்
தேங்காய்க் குவியல்கள்
விடலைப் பருவத்து
நினைவை மீட்டிக்
காத்தேன் சற்றே...

படபட கடகட வென
ஒலிப்பில்
திடமிகு கை வலிமை காட்ட
உடலது வியர்க்க
திமிறும் தசைகள்...
திசை எங்கும் கண்கள் மொய்க்கும்!

ஆர்க்கும் ஒலிப்பை மேவி
ஆர் அங்கே அலறுவது
இலயிப்பைக் குலைக்கும்
கதையளப்பு!
ஈர்பத்துப் பட்டம் வாங்கி
தம் குரல் ஒலிப்பில்
ஊர் அமைதி குலைக்கும்
உத்தமர்களோ?
குரல் மேன்மை காட்ட
இதுவோ நேரம்?

ஊர் கூடி இழுக்க
தேர் ஓடும் வீதியினில்
அரோகரா எனும் ஒலிப்பொடு
அண்ணாந்து பார்க்க
ஆரோகணிக்க
ஒன்றிப்பில் நாமிருக்க
இடையூறாய்
ஏனிந்த ஒலிபெருக்கி?

என் அகம் அதில்
உலகு உறையும்
இப்போதில்
ஈகமென ஏன் அலறுவர்?

மடை பரப்பி வழிபட்ட
மரபை மாற்றிக்
குடை பிடித்த குருக்கள்
ஓதிடும் வடமொழி
மேவிட
நித்தமும் சத்தமே
சங்கடமாய்...

அழ. பகீரதன்

நன்றி: வளரி புரட்டாதி 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத்தில் சூழலியல் சிந்தனைகளும் அக்கறைகளும்

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

காலநிலை மாற்றம் குறித்த முன்னோடியான பங்களிப்பு சோவியத் விஞ்ஞானிகளிடமே வெளிப்பட்டது. சூழலியல் தொடர்பான சோவியத்தின் பார்வை என்ன. இது இன்று முக்கியத்துவம் பெறுகின்ற மார்க்சிய சூழலியல், சூழலியல் சோசலிசம் போன்ற கருத்துருவாக்கங்களுக்கு எவ்வாறு பங்களித்தது என்பதை நோக்கும் இத்தொடரின் ஐந்தாவது கட்டுரை இது.

சோவியத் ஒன்றியத்தின் அரசியல், ஆட்சிமுறை, சமூகம் பற்றிய விரிவான ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. ஆனால் சூழலியல் தொடர்பில் சோவியத் ஒன்றியத்தின் அக்கறைகள் என்ன? ஆட்சியாளர்கள் சுற்றுச்சூழல் குறித்து என்ன கருதினார்கள்? சூழலியலைப் பற்றிய தத்துவார்த்த அடிப்படைகள் என்ன? போன்ற வினாக்கள் விரிவான ஆழமான ஆய்வுக்கு உள்ளாகவில்லை. காலநிலை மாற்றம் தொடர்பான முன்னோடியான ஆய்வுகள் சோவியத் விஞ்ஞானிகளுடையவை. புவிவெப்பமடைதல் பற்றியும் இதன் நீண்டகால ஆபத்துகள் பற்றியும் முதன்முதலாக எச்சரித்தவர்கள் இவர்களே. உலகின் மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்ட நாடாக சோவியத் ஒன்றியம் திகழ்ந்தது. எனவே இங்கு நடைபெறுகின்ற சூழலியல் மாற்றங்கள் முழு உலகையும் பாதிக்கவல்லன. பின்தங்கிய நாடாக இருந்து வல்லரசாக மாற்றங்கண்ட சோவியத்தின் வரலாற்றில் சூழலியலின் பங்கு தவிர்க்க முடியாதது.

1970களின் முடிவில் சோவியத் ஒன்றியத்திலும் பெரும்பாலான சோசலிச நாடுகளிலும் சுற்றுச்சூழல் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்ற ஒரு கதையாடல் மேற்குலகால் உருவாக்கப்பட்டது. 1986 இல் செர்னோபில் அணுமின் நிலையத்தில் வெடிப்பும் அதைத் தொடக்கத்தில் மூடிமறைத்த செயலும் முதலாளித்துவ நாடுகளை விட சோசலிச நாடுகள் சுற்றுச்சூழல் தொடர்பில் மோசமானவை என்ற கருத்தாக்கத்திற்கு வலுச்சேர்த்தது. இது சோவியத் ஒன்றியமானது சுற்றுச்சூழலில் அக்கறையற்றது என்ற வாதத்திற்கும் அதற்கும் மேலாக மார்க்சியம் ஒரு தத்துவமான சுற்றுச்சூழல் குறித்துப் பேசுவதில்லை என்ற கருத்து பலம்பெறுவதற்கு உதவியது. கடந்த பத்தாண்டுகளில் சோவியத் ஒன்றியத்தின் சுற்றுச்சூழல் அக்கறைகள் குறித்த பல ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவை இவ்விடயம் தொடர்பில் புதிய செய்திகளைத் தருகின்றன. சோவியத் ஒன்றியத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் எவ்வளவு கடுமையாக இருந்ததோ, அதே அளவுக்கு சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இரண்டாம் உலகப்போரைத் தொடர்ந்து ஸ்டாலின் வியக்கத்தக்க வலுவான வனப் பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்கியமையாகும்.

சூழலியல் சிந்தனையாளர்கள் சோவியத் ஒன்றியத்தின் முதன்மையான பங்களிப்பை இப்போது கவனிக்கத் தொடங்கியுள்ளனர். நீண்ட காலமாக, சோவியத் ஒன்றியத்தின் சுற்றுச்சூழல் மரபு பற்றிய விவாதங்கள் புதிய சாத்தியங்களை நோக்கி அழைத்துச்செல்கின்றன. சோவியத் ஒன்றியத்தின் சுற்றுச்சூழல் மரபு என்பது ஆழமான சூழலியல் சிந்தனைகளையும் மற்றும் நடைமுறைகளை உருவாக்கியதோடு அம்மரபு பொருள்முதல்வாத, இயங்கியல் மற்றும் சோசலிச அறிவுசார் அடித்தளங்களைக் கொண்டிருந்ததாகப் பலர் ஏற்றுக் கொள்கிறார்கள்.

ஆரம்பகால சோவியத் சூழலியலைக் கட்டமைத்ததில் லெனினின் பங்களிப்பு முக்கியமானது. அவர் சூழலியல் விழுமியங்களை வலுவாக ஏற்றுக்கொண்டார், மேலும் சூழற்பாதுகாப்பில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்தார். அவர் முன்னோடியான சோவியத் சூழலியளாளர் விளாடிமிர் நிகோலாவிச் சுகச்சேவ்வின் ஆய்வுகளைப் படித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக "சதுப்பு நிலங்கள்: அவற்றின் உருவாக்கம், மேம்பாடு மற்றும் பண்புகள்" (Swamps: Their Formation, Development and Properties) என்ற சுகச்சேவ்வின் நூலினால் கவரப்பட்டார். புரட்சியின் பின்னர் சமூகச் சூழலியல் என்ற சுகச்சேவ்வின் கருத்தாக்கத்தின் வழிப்பட்டு சூழலியல் பாதுகாப்பு குறித்து லெனின் கவனஞ் செலுத்தத் தொடங்கினார். ஒருபுறம் கல்வி ஆணையகத்தின் மூலம் மாணவர்களுக்கு சூழலியல் முக்கியத்துவத்தினை உணர்த்த விரும்பினார். 1924 ஆம் ஆண்டில் அனைத்து ரஷ்ய சூழலியல் பாதுகாப்பு அமைப்பு ஆயிரம் ஆரம்ப உறுப்பினர்களோடு உருவாக்கப்பட்டது. லெனினின் ஆதரவுடன் கல்வி ஆணையம், அறிவியல் ஆராய்ச்சிக்காக அழகிய இயல்புடைய சுற்றுச்சூழல் அமைவிடயங்களை (இயற்கை இருப்புக்கள் -zapovedniki- என்ற பெயரில்) அமைத்தது. இவ்வமைவிடங்கள் இயற்கையை அதன் இயல்போடு பாதுகாப்பதை நோக்காகக் கொண்டன. 1933 வாக்கில் இதேபோன்ற 33 அமைவிடங்கள் உருவாக்கப்பட்டன. இவை மொத்தமாக 2.7 மில்லியன் ஹெக்டேர்களை உள்ளடக்கியிருந்தன.

இக்காலப்பகுதியில் முதன்மையான சூழலியல் ஆய்வாளர்கள் சோவியத் ஒன்றியத்தில் இருந்தார்கள். இவர்களில் கனிமவியலாளரும் புவி வேதியியலாளரு மாகிய விளாடிமிர் வெர்னாட்ஸ்கி முக்கியமானவர். இவரே புவி வேதியியல், உயிர் புவி வேதியியல் மற்றும் கதிரியக்க புவியியல் ஆகிய துறைகளின் நிறுவனர்களில் ஒருவராவார். அலெக்சாண்டர் இவனோவிச் ஓபரின் "உயிரின் தோற்றம்" (Origin of Life) என்ற தனது ஆய்வுநூலின் வழி நன்கறியப்பட்டவர். உயிரின் தோற்றம் பற்றிய முன்னோடியான ஆய்வுகள் இவருடையவை. தாவர மரபியலாளர் நிகோலாய் இவனோவிச் வவிலோவ், எத்தியோப்பியா, துருக்கி, திபெத், மெக்சிகோ மற்றும் பெரு போன்ற இடங்களில், உலகெங்கிலும் உள்ள ஆரம்பகால மனித சாகுபடிப் பகுதிகளுடன் பிணைக்கப்பட்ட கிருமிகள் மற்றும் மரபணு நீர்த்தேக்கங்களின் முதன்மை ஆதாரங்களைக் கண்டுபிடித்தார். விலங்கியல் நிபுணர் விளாடிமிர் விளாடிமிரோவிச் ஸ்டான்சின்ஸ்கி சுற்றுச்சூழல் சமூகங்களின் ஆற்றல்மிக்க பகுப்பாய்வின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்தார். இவர் சுற்றுச்சூழல் அமைவிடயங்களின் முன்னணி ஊக்குவிப்பாளராகவும் பாதுகாவலராகவும் இருந்தார். சோவியத் இயற்பியலாளர், தத்துவவாதி, அறிவியல் வரலாற்றாசிரியர் எனப் பல்முகங் கொண்ட் போரிஸ் மிகைலோவிச் ஹெசன் நியூட்டனின் பிரின்சிபியா பற்றிய கட்டுரைக்காக மிகவும் பிரபலமானவர். இக்கட்டுரை அறிவியலின் வரலாற்று வரைவியலின் அடித்தளமாக இருக்கிறது.

1930களில் இரண்டு முக்கிய துறைகளில் - வனவியல் மற்றும் காலநிலையியல் - சோவியத் சூழலியல் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. சோவியத் சூழலியல் இயங்கியலின் ஒருங்கிணைந்த அணுகுமுறை குறிப்பிட்ட நிலைமைகள் பற்றிய விரிவான அனுபவ ஆராய்ச்சியில் வேரூன்றியது. வனம்-சுற்றுச்சூழல்-அமைப்பு ஆகிய மூன்றின் இணைந்த செயற்பாட்டை வலியுறுத்தியது. இது காலநிலை குறித்த பரந்த சூழலியல் புரிதலுக்கு வழிவகுத்தது. இது 1948 இல் இயற்கையை மாற்றுவதற்கான மாபெரும் ஸ்டாலினின் திட்டத்தை உருவாக்க உதவியது. ஸ்டாலினின் இத்திட்டம் காடுகள் அழிக்கப்பட்ட பகுதிகளில் மானுடவியல் பிராந்திய காலநிலை மாற்றத்தை மாற்றியமைக்கும் ஒரு பெரிய முயற்சியாக கருதப்பட்டது. நீர்நிலைகளை மேம்படுத்துவது வலியுறுத்தப்பட்டது. ஏற்கனவே 1936 ஆம் ஆண்டில் சோவியத் அரசாங்கம் வனப் பாதுகாப்பு மற்றும் காடு வளர்ப்பின் முக்கிய நிர்வாகத்தை உருவாக்கியது. இது நாடு முழுவதும் பரந்த பிரதேசங்களில் "நீர்-பாதுகாப்பு காடுகளை" நிறுவியது. சோவியத் ஒன்றியத்தின் சில பகுதிகளில் உள்ள காடுகள் தொழில்துறை காடுகளாக இடைவிடாமல் சுரண்டப்பட்டாலும், ரஷ்யாவின மைய நிலப்பரப்பில் இருந்த பழமையான சிறந்த வளர்ச்சி யடைந்த காடுகள் பாதுகாக்கப்பட்டன. சுற்றுச்சூழல் குறித்த விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து சுற்றுச்சூழல் மறுசீரமைப்புக்கான முயற்சிகளின் பின்னணியில் அறிமுகப்படுத்தப்பட்ட இயற்கையின் மாற்றத்திற்கான ஸ்டாலின் திட்டம், அதுவரை உலக வரலாற்றில் எவரும் சிந்தித்திராத மிகப்பெரிய காடு வளர்ப்புத் திட்டமாகும். இது வனப்புல்வெளி மற்றும் புல்வெளி பகுதிகளில் சுமார் 6 மில்லியன் ஹெக்டேர் (15 மில்லியன் ஏக்கர்) புதிய காடுகளை உருவாக்க முயன்றது. மேலும் "மனிதனால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தை மாற்றுவதற்கான உலகின் முதல் வெளிப்படையான முயற்சியை" அமைத்தது. நதிகள், சாலைகள் மற்றும் கூட்டுப் பண்ணைகளைச் சுற்றிலும், மத்திய ஆசியாவில் இருந்து வெளிவரும் காற்றின் உலர்த்தும் செல்வாக்கைத் தடுக்கும் நோக்கத்துடன், நீர்நிலைகள் மற்றும் விவசாயத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மரங்கள் தங்குமிடங்களில் நடப்பட்டன. ஸ்டாலின் இறக்கும் போது (அது நிறுத்தப்பட்ட போது) இத்திட்டம் நிறைவேறாவிட்டாலும், ஒரு மில்லியன் ஹெக்டேர் புதிய காடுகள் நடப்பட்டு, இன்று அவற்றில் 40 சதவீதம் உயிர் பிழைத்துள்ளன.

1950களில் சோவியத் மக்களிடையே சூழலியல் குறித்த அக்கறை அதிகரித்தது. அனைத்து ரஷ்ய சூழலியல் பாதுகாப்பு அமைப்பு ஒரு மில்லியன் அங்கத்தவர்களைக் கொண்ட மிகப்பெரிய அமைப்பாக மிளிர்ந்தது. அதேவேளை சூழலியல் இளைஞர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையணியிலும் பல இலட்சம் பேர் உறுப்பினர்களாக இணைந்து பணியாற்றினார்கள்.

சோவியத் காலநிலையியல் ஆய்வுகள் இக்காலப் பகுதியில் அசாதாரண முன்னேற்றங்களை அடைந்தன. பூமியின் மேற்பரப்பின் வெப்ப சமநிலை, பூமி அமைப்பின் வெப்ப சமநிலையின் பல்வேறு கூறுகளை கணக்கிடுவதற்கான முறை என புதிய ஆய்வுத்துறைகளை நோக்கி சோவியத் விஞ்ஞானிகள் பயணித்தனர். இவர்களே காலநிலை மாற்றம் குறித்தும் புவிவெப்ப மடைவது பற்றியும் முதலில் எச்சரித்தவர்கள். இவர்களே பௌதீகக் காலநிலையியலை (physical climatology) ஒரு துறையாக நிறுவுவதற்கான வழியை அமைத்தவர்களாவர்.

ஸ்டாலினின் மறைவு, சோவியத் சூழலியல் இயங்கியலுக்கு மிகப்பெரிய பின்னடைவைக் கொடுத்தது. சோவியத் சூழலியலின் சோகம் என்னவென்றால், 1953 இல் ஸ்டாலினின் மரணத்திற்குப் பின்னரான முதல் தசாப்தத்தில் சோவியத் ஒன்றியத்தின் சுற்றுச்சூழலின் சீரழிவு மோசமடைந்தது. இயற்கையின் மாற்றத்திற்கான ஸ்டாலின் திட்டம் நிறுத்தப்பட்டது. இயற்கையும் வளங்களும் மிகவும் கொடூரமான சுரண்டலுக்கு ஆளாகின. ஸ்டாலின் இறந்து ஆறு நாட்களுக்குப் பிறகு, வன மேலாண்மை அமைச்சகம் கலைக்கப்பட்டது. வனப் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த முன்னுரிமை குறைக்கப்பட்டது.

*இரண்டாம் உலகப் போரைத் தொடர்ந்து சுற்றுச்சூழல் மறுசீரமைப்புக்கான முயற்சிகளின் பின்னணியில் அறிமுகப்படுத்தப்பட்ட இயற்கையின் மாற்றத்திற்கான ஸ்டாலின் திட்டம், அதுவரை உலக வரலாற்றில் எவரும் சிந்தித்திராத மிகப்பெரிய காடு வளர்ப்புத் திட்டமாகும். இது வனப்புல்வெளி மற்றும் புல்வெளி பகுதிகளில் சுமார் 6 மில்லியன் ஹெக்டேர் (15 மில்லியன் ஏக்கர்) புதிய காடுகளை உருவாக்க முயன்றது, மேலும் "மனிதனால் தூண்டப்பட்ட காலநிலை மாற்றத்தை மாற்றுவதற்கான உலகின் முதல் வெளிப்படையான முயற்சியை" அமைத்தது. நதிகள், சாலைகள் மற்றும் கூட்டுப் பண்ணைகளைச் சுற்றிலும், மத்திய ஆசியாவில் இருந்து வெளிவரும் காற்றின் உலர்த்தும் செல்வாக்கைத் தடுக்கும் நோக்கத்துடன், நீர்நிலைகள் மற்றும் விவசாயத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் மரங்கள் தங்குமிடங்களில் நடப்பட்டன. ஸ்டாலின் இறக்கும் போது (அது நிறுத்தப்பட்ட போது) இத்திட்டம் நிறைவேறாவிட்டாலும், ஒரு மில்லியன் ஹெக்டேர் புதிய காடுகள் நடப்பட்டு, இன்று அவற்றில் 40 சதவீதம் உயிர் பிழைத்துள்ளன.*

க்ருஷ்சேவ் ஆட்சியில் சோவியத் மண்ணுக்கும் இயற்கைக்கும் மிக மோசமான சேதம் ஏற்பட்டது. இதன் விளைவாக, அறிவியல் சமூகத்திலிருந்து ஒரு மகத்தான சுற்றுச்சூழல் இயக்கம் எழுச்சியைக் கண்டது. க்ருஷ்சேவின் "கன்னி நிலங்கள்" திட்டம், 1954 இல் தொடங்கி, விவசாயத்தின் விரிவாக்கத்திற்காக "கன்னி நிலம்" என்று அழைக்கப்படும் 33 மில்லியன் ஹெக்டேர்களை உழுவதை இலக்காகக் கொண்டது. இத்திட்டத்தில் ஆரம்ப வெற்றிகள் கிடைத்தாலும் விரைவில் இதனால் உருவாக்கப்பட்ட நிலங்கள் தூசி நிலங்களாகி எதற்கும் பயன்பாடற்றதாக மாறியது. 1950 களின் பிற்பகுதியில், உலகின் பழமையான மற்றும் ஆழமான நன்னீர் ஏரியான பைக்கால் ஏரியின் சூழலியலில் தலையிட சோவியத் தலைமை முதன்முறையாக முடிவு செய்தது. 1960 களின் முற்பகுதியில், சோவியத் யூரேசியாவில் பருத்தி விவசாயத்திற்கு நீர்ப்பாசனம் செய்வதற்காக, ஆரல் கடலில் உள்ள இரண்டு முக்கிய நதிகளான அமு தர்யா மற்றும் சிர் தர்யா ஆகியவற்றைத் திருப்ப க்ருஷ்சேவ் உத்தரவிட்டார். இதன் விளைவாக ஆரல் கடல் அதன் உண்மையான அளவின் பத்தில் ஒரு பங்காகச் சுருங்கியது.

இந்தச் சூழலியல் சேதங்கள் சோவியத் விஞ்ஞானிகள் மற்றும் இயற்கைப் பாதுகாவலர்களிடமிருந்து தீவிரமான எதிர்வினைகளைச் சந்தித்தன. பைக்கால் ஏரியைக் காப்பாற்றுவதற்கான போராட்டத்தில் சோவியத் புவியியலாளர்களும் விஞ்ஞானிகளும் தலைமைப் பாத்திரம் ஏற்றனர். பைக்கால் சுற்றுச்சூழல் அழிவின் அடையாளமாக மாறியது, இது சோவியத் சுற்றுச்சூழல் இயக்கத்தின் அசாதாரண வளர்ச்சிக்கு வழிவகுத்தது. 1981இல் ரஷ்ய சூழலியல் பாதுகாப்பு அமைப்பில் 37 மில்லியன் பேர் அங்கத்தவர்களாக இருந்தனர். இதுவே உலகின் மிகப்பெரிய சுற்றுச்சூழல் அமைப்பாக இருந்தது.

1983 ஆம் ஆண்டு "தத்துவம் மற்றும் நாகரீகத்தின் சுற்றுச்சூழல் பிரச்சினைகள்" (Philosophy and the Ecological Problems of Civilisation) என்ற நூல் வெளியானது. இது சோவியத் விமர்சன சூழலியல் சிந்தனை மறுமலர்ச்சியின் மிகவும் வியக்கத்தக்க தயாரிப்பாகும். இந்நூல் மார்க்சிய இயங்கியலின் அடிப்படையில் சூழலியல், வளர்ச்சி, நுகர்வு போன்றவற்றை விளக்கியது. இன்று பேசப்படுகின்ற "சூழலியல் மார்க்சியம்" என்ற கருத்தாக்கத்திற்குப் பங்களித்த முதன்மையான நூலிது.

சோவியத் ஒன்றியத்தின் சூழலியல் குறித்துத் திரும்பிப் பார்க்கின்ற போது கவனிக்க வேண்டியது யாதெனில் தொடர்ச்சியாக அங்கு சுற்றுச்சூழல் இயக்கங்கள் இருந்தன. வினைத்திறனுடன் செயலாற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாவரவியலாளர்கள், விலங்கியல் வல்லுநர்கள் மற்றும் புவியியலாளர்களால் கட்டுப்படுத்தப்படும் பல அமைப்புக்களும் இயக்கங்களும் இருந்தன. இவற்றில் இயற்கையின் பாதுகாப்பிற்கான அனைத்து ரஷ்ய சங்கம், மாஸ்கோ இயற்கையியலாளர்கள் சங்கம், சோவியத் ஒன்றியத்தின் புவியியல் சங்கம், மற்றும் அனைத்து யூனியன் தாவரவியல் சங்கம் என்பன முதன்மையானவை. நில பயன்பாடு, வள சுரண்டல், வாழ்விட பாதுகாப்பு மற்றும் மேம்பாடு ஆகியன குறித்த மாற்றுப் பார்வைகள் இருந்தன. அவை பகிரங்கமாக முன்வைக்கப்பட்டன. விவாதிக்கப்பட்டன. அரச கொள்கை வகுப்பில் இவ்விவாதங்கள் செல்வாக்குச் செலுத்தின. இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் இவை "ஸ்டாலினின் சர்வாதிகாரம்" கோலோச்சியதாகச் சொல்லப்படும் காலத்தில் நடைபெற்றவை. சோவியத் சூழலியலில் இந்த இயக்கங்களின் பங்களிப்பு முக்கியமானது. இவற்றை நோக்குவதாயின் இதன் மூன்று முக்கிய குணவியல்புகளின் அடிப்படையிலேயே நோக்க வேண்டும்.

1. இவை சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் போராட்டங்களின் பின்னிப்பிணைந்த வடிவமைப்பைக் கொண்டிருந்தன.
2. இவை பரஸ்பரம் ஒன்றையொன்று வலுப்படுத்துவதாக இருந்தன.
3. இவை ஒருங்கே தனித்தனியாகவும் பன்முகத்தன்மை கொண்டதாகவும் இயங்கின.

1917இல் புரட்சி வெற்றியடைந்த போதும் சோவியத் ஒன்றியம் பொருளாதார ரீதியாக மிகுந்த நெருக்கடியில் இருந்தது. அதிலிருந்து மீண்ட சிலகாலத்தில் இரண்டாம் உலகப்போரில் மிக மோசமான பேரழிவைச் சந்தித்தது. அதைத் தொடர்ந்து கெடுபிடிப்போரும் ஸ்டாலினுக்குப் பின்னரான சோவியத் ஆட்சியாளர்களின் சீரழிவும் சோவியத் ஒன்றியத்தின் இருப்பிலும் இயங்கியலிலும் செல்வாக்குச் செலுத்தின. இந்தப் பின்புலத்திலேயே சோவியத் சூழலியலின் வரலாறு நோக்கப்பட வேண்டும்.

சோவியத் சூழலியலின் முக்கியமான குறிகாட்டி யாதெனில்: தத்துவார்த்த ரீதியில் "சமத்துவ, வர்க்கமற்ற, அரசு இல்லாத சமூகங்களை" உருவாக்குதல், நடைமுறை ரீதியில் "பிற உயிரினங்களுக்கு தீங்கு விளைவிப்பதைத் தவிர்க்கும்", "வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்" சூழலியல் நடைமுறைகளை உருவாக்குதல் என்ற இரண்டையும் ஒருங்கே சாத்தியமாக்குவது மிகக் கடினமானது. ஆனால் லெனினும் ஸ்டாலினும் அதைச் சிறப்பாகச் செய்தார்கள். இதன்மூலம் வளமான வாழ்க்கையும் நலமான சூழலும் ஒருங்கே சாத்தியமாகக் கூடியது என்ற வலுவான செய்தியை சோவியத் ஒன்றிய வரலாறு காட்டிநிற்கிறது. ❑

கவிதை

# பயம் பற்றிய சர்வதேச மாநாடு

*கார்லோஸ் டிரம்மண்ட் டி ஆண்ட்ரேட்*
*தமிழில்: நிலங்கோ*

*இப்போதைக்கு நாங்கள் அன்பைப் பாட மாட்டோம்,*
*அனைத்து நிலக்கீழ் அரங்குகளுக்கப்பால் அது தப்பி ஓடிவிட்டது.*
*எல்லா அணைப்புகளையும் கிருமி நீக்கம் செய்யும் பயத்தைப் பற்றிப் பாடுவோம்.*
*நாங்கள் வெறுப்பைப் பாட மாட்டோம், ஏனெனில் எம்மிடம் அது இல்லை,*
*பயம் மட்டுமே உள்ளது.*

*எங்கள் தந்தையரே தோழர்களே*
*கிராமப்புறங்கள் பற்றிய பயம்*
*பெருங்கடல்கள், பாலைவனங்கள் பற்றிய பயம்*
*வீரர்களுக்கு பயம், தாய்மார்களுக்கு பயம், தேவாலயங்களுக்கு பயம்,*
*சர்வாதிகாரிகளின் ஜனநாயகவாதிகளின் பயத்தைப் பாடுவோம்,*
*மரண பயத்தையும் மரணத்திற்கு பின் என்ன என்றும் பாடுவோம்,*
*பிறகு நாம் பயத்தால் இறந்துவிடுவோம்*
*எங்கள் கல்லறைகளில் பயமுறுத்தும் மஞ்சள் பூக்கள் துளிர்விடும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுப்பினை

பிரசன்னராஜ்



நீண்ட கால இடைவெளியில் பிறந்த ஊருக்குப் போயிருந்தேன். கோயிலையும் பார்த்து, உறவுகளையும் பார்த்து வரவென பஸ் நாற்சந்தியில் நிற்க, இறங்கி மேற்கே நீளும் றோட்டில் நடந்தேன். கோடை வெயில் தகித்துக்கொண்டிருந்தது. அனல் காற்று வந்து முகத்தை சீண்டிச்சென்றது.

சுற்றுமுற்றும் பார்க்கையில் மனம் அதிர்ந்து போனது. காணிகளில் அணிவகுத்து நின்ற பனைமரங்கள், வேலிகளில் நிரை கட்டி நின்று நிழல்தந்த பூவரசு மரங்கள், பச்சை விரித்த புல்வெளிகள், பற்றைச் செடி கொடிகள் என பெருமளவுக்கு அழிந்து போயிருந்தன.

முன்னர் நான் பார்த்தது போலில்லை. ஊரே மாறிப் போயிருந்தது. வளைவில் பார்க்கையில் இடிபாடுகளுடன் பனங்கட்டித் தொழிற்சாலை சிதைவடைந்து போய்க் கிடந்தது. ஒரு காலத்தில் பல குடும்பங்களின் வயிற்றுக்குக் கஞ்சி வார்த்த அது இன்று இயக்கமற்றுப் போயிருந்தது. படித்துவிட்டு வேலையற்றிருந்த காலத்தில் எனக்கும் கை கொடுத்தது அல்லவா. சதா வெக்கையை உமிழ்ந்த படியிருந்த அடுப்புகளுக்கு முன் நின்று வேலை செய்த நினைவு மனதில் மீண்டது.

அன்று கூடவே என்னுடன் நின்று அனலில் வெந்த நணபர்கள் மகேசு, யோகன், குட்டி, தம்பியன் என எல்லோரும் வரிசையில் முகங்காட்டி நின்றனர். இப்போ எங்கிருக் கிறார்களோ என்கிற ஏக்கம் மனதில் வந்து கனத்தது. மகேசைத்தவிர, மற்றவர்கள் எங்கள் ஊரின் தெற்குத்திடலில் குடியிருந்தவர்கள், அங்கு வாழ்பவர்கள் முழுவதுமே உழைப் பாளிகள். எங்கள் ஊரவர் ஏனோ அவர்களை அண்ட விடுவதில்லை. சாதிக்குள் சாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து ஒதுக்கிவிட்டார்கள். நண்பர்கள் பலர் எனக்கு அங்கிருந்தனர். அவர்களது உழைப்பையும், தன்னம்பிக்கையையும் வணங்க வேண்டும் போல் தோன்றும். அப்படியொரு உழைப்பு அவர்களிடமிருந்தது.

நானும் நிர்ப்பந்த வசத்தால் ஊரைவிட்டுக் கிளம்பி மூன்று தசாப்தங்களாகி விட்டது. யாழ்ப்பாண வாசியாகி, பின்னர் கனடா பிரஜையுமாகிவிட்டேன்.

எதிரே பெண்கள் சிலர் தலையில் சுமைகளுடன் காவோலைகளை இழுத்துக் கொண்டு கடந்து போனார்கள். கால்களில் செருப்புக் கூட இருக்கவில்லை. நிமிர்ந்த நடையில் வேகம்காட்டி நடந்து, சந்தியில் திரும்பி தெற்குத் திடல் நோக்கிப் போனார்கள். சிறுவயதிலும் கண்ட இயல்பான காட்சிதான் இது. இன்னமும் மனிதர்கள் மாறாமலிருந்தார்கள். தலைமுறை தலைமுறையாகத் தலையில் ஏறிய பாரச்சுமை இன்னும் இறங்கவில்லபோல,

நாதன் வீட்டுச்சந்தி வந்தது.

சந்தியில் வாலிப வயதினர் கூட்டமாக நின்றிருந்தனர். பத்துப் பன்னிரண்டு பேர் இருக்கும் கல்லில் குந்திக்கொண்டும், நின்று கொண்டுமிருந்தனர். தலை வளர்த்து தாடியும் மீசையுமாக தோற்றம் காட்டினர். என்னை வினோதமாகப் பார்த்து தமக்குள் ஏதோ பேசிக்கொண்டார்கள். எனது தெற்குத்திடலைச் சேர்ந்தவர் போலிருந்தது. நண்பர்களின் வாரிசுகளாக இருக்கலாம் என எண்ணிக்கொண்டேன். பார்த்த பார்வையில் வன்மம் தெரிந்தது. நல்ல வேளை சைக்கிள் ஒன்றுவந்து என்னருகில் நின்றது. வந்தவர் கூர்குறிப்பாக என்னைப் பார்த்துவிட்டு,

"அட நீ... தேவன்தானை...?"

ஞாபகத்தை அசைப்போட்டபடி சில கணங்கள் பேசாமல் நின்றிருந்தேன்.

நான் அவனைக் கூர்ந்து பார்த்தேன்.

அவனது காலில் புழுதி படிந்திருந்தது. வியர்வை நெற்றியிலிருந்து வடிந்து முகத்தை நனைத்தபடியிருந்தது. கைகளில் நரம்புகள் புடைத்து வெளித்தெரிந்தன. கன்னங்கள் நரைத்த முடியுடன் சுருங்கிப்போய்க்கிடந்தது. முதுமை தலைகாட்டிய தோற்றம்.

"என்ன என்ன புதினமாப் பாக்கிறாய்...? உன்னோடை படிச்சனான். தெரியுமோ...?"

முந்திக்கொண்டு புதிராகப் பேசினான். அவனைப் பார்க்கையில் வைத்தி அப்பாவின் சாயல் தெரிந்தது.

"பழனி...?"

"சரிதான்... என்னை மறக்கேல்லையடா நீ."

"..."

"கனடாவாலை எப்ப வந்தனி..."

"போன கிழமைதான்..."

"இஞ்சை எங்கை போறாய்...?"

"அக்கா வீட்டை..."

"அட... முருகானந்தன் அண்ணை வீட்டுக்கோ. நல்ல மனிசனவர். காணிக் கந்தோரிலை வேலை செய்யேக்கை எனக்கு நல்ல உதவியள் செய்தவர். இப்ப ஆளை வெளியில காணுறேல்லை. என்னைக் கண்டால் மனிசன் விடாது..."

ஆதங்கப்பட்டுக் கூறினான் பழனி.

"ஆ... அவற்றை காணிக்கைதான் காய் வெட்டிப் பனை சீவிப்போட்டு வாறன். வீட்டை கொண்டுபோய் விடட்டே..."

"இல்லை பழனி. நான் நடந்து போவன். எங்கட கோயிலையும் ஒருக்காப் பாக்கோணும்"

"நீயும் ஒரு கோபுரம் கட்டிறதா அறிஞ்சன் உண்மைதானை..."

"இல்லையடா. பழனி. நான் தனியக் கட்டேலுமே. எங்கட பரம்பரையிலை உள்ளவை எல்லாரும் சேந்துதான் கட்டுறம்..."

"அதுசரி... நீ எப்பிடி இருக்கிறாய்...?"

"ஏதோ இருக்கிறன். சீவலும், தோட்டமும் எண்டு போகுது. எங்களுக்கெண்டு எழுதினதை மாத்தேலுமே...?"

"பிள்ளையள்...?"

"மூத்தவன் இயக்கத்துக்குப் போய் கடைசிச் சண்டையிலை செத்திட்டான். மற்றவன் எங்கட தொழில்தான் செய்யிறான். சுதந்திரமான தொழில்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொம்பிளைப் பிள்ளையள்...?"

"ஒருத்திதான்... எங்கட நேசரியிலை படிப்பிக்கிறாள். கலியாண வயதும் வந்திட்டுது. அம்மாளாச்சி விடப்போறாவே... பாப்பம்."

"சரியடாப்பா... உன்ரை பிள்ளையள் உழைக்குதுகள். இந்த ஆபத்தான தொழிலை விட்டாலென்ன..."

"தேவன் உந்தக் கதை பறையாதை. என்ரை காலும் கையும் உள்ளவரை இந்தத் தொழிலை விடமாட்டன்... என்ரை பிள்ளையளுக்கு பாரமாயிருக்க மாட்டன்ரா..."

உறுதிபடக் கூறினான் பழனி.

அவனது சைக்கிள் பின்கரியலில் பிளாஸ்ரிக் பெரல் கட்டியிருந்தது. அதற்குள் சீறியபடி கள்ளிருந்தது. கான்ரிலிலும் சிறிய பெரலொன்று தொங்கியது. இடுப்பில் இயனக்கூடு. அதற்குள் இரண்டு பாளைக் கத்திகள் கனத்துக் கிடந்தன.

அந்தக் கோலத்தில் அவனைப் பார்க்க பாவமாக இருந்தது.

பழனியுடன் ஒன்றாகப் படித்து, விளையாடி, சண்டை பிடித்து அடுத்த கணமே நேசமாகி வெட்டை வெளியெங்கும் அலைந்து திரிந்த நாட்கள் மறக்க முடியாதவை. அவனிடம் தட்டிப்பறித்துச் சாப்பிட்டவை என் இரத்தத்தில் இன்னும் கலந்திருக்கிறது. அவனுடன் ஒருமுறை பள்ளிக்குப் பக்கத்து வடலிக் காணிக்குள் ஏறிக்குதித்து கள்ளமாங்காய் ஆயப்போய் கங்குமட்டை என் வயிற்றைப் பதம் பார்த்த காயத்தின் மறு இன்னும் வயிற்றில் உள்ளது.

"தேவன்... நான் கேக்கிறனெண்டு கோவிக் காதையடா... உங்கடை ஆக்களெல்லாம் ஊரை

விட்டிட்டுப்போட்டுதுகள். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவெண்டு. கன குடும்பங்கள் வெளிநாடுகளுக்கும் போட்டினம். நீயும்தான். அதுக்கை ஆருக்கு நாலு கோபுரம் கட்டிறியள். கோயிலைக்கும்பிட ஆரிரிக்கினம். எங்கடை ஆக்களையும் சேர்க்க பயப்பிடுறியள். பேந்தேன் கோயிலைப் பெரிசாக் கட்டிறியள்...?"

அவனது வார்த்தைகள் சம்மட்டியால் ஓங்கி அடித்தது போலிருந்தது. நட்பு வட்டத்தில் பலரும் கேட்கிற கேள்விதான் இது. என்னைச் சிந்திக்கவும் வைத்தது. அவனது கேள்வி நியாயமானதுதானே. மௌனித்திருந்தேன்.

"..........."

"தேவன் நான் சொல்லிறதிலை ஏதும் பிழையிருக்குதோ...? கோயிலை அளவாக் கட்டிக்கொண்டு, உங்கட ஊரிலை இருக்கிற ஏழை எளியதுகளுக்கு வீடு கட்டிக் குடுக்கலாமடா. என்ரை பகுதியிலையும் எத்தனை குடும்பங்கள் குடிசையிலை வாழுதுகள். ஒழுங்கான கக்கூசுகள் கூடி இல்லாமல் இருக்குதுகள். நல்லாயிருக்கிற நீங்கள் இந்த உதவியளை செய்யலாம்தானை. ஒருக்கா என்ரை வீட்டுக்கும் வந்திட்டுப்போ.."

உரிமை பாராட்டிக்கூறிவிட்டு, தெற்குத் திடல் நோக்கி நைந்த சிரிப்புடன் சைக்கிளை மிதித்துக்கொண்டுபோனான்.

என்ன பதில் கூறுவதென்று புரியாத குழப்பத்தில் கையை மட்டும் அசைத்துவிட்டு நடந்தேன். ஏற்றத்தில் இடதுபுறம் பிள்ளை யார் கோயில் தெரிந்தது. எனது மூதாதையர் உருவாக்கிய நூற்றாண்டு பழமையான கோயில் இது. எங்கள் குல தெய்வம் எனச் சொல்லிச் சொல்லி மனதில் பதிந்துபோய் விட்டது. நான்கு பக்கமும் அரையும் குறையுமாக கோபுரங்கள் எழுந்து நின்றன. பிரமாண்டமான கோயிலைச் சுற்றிப் பார்க்க அரைமணி நேரமானது.

"மாமா வந்து கன நேரமோ...?

அக்காவின் மகன் வசி வந்து நின்று நெகிழ்வோடு கேட்டான். என்னை அழைத்துச் செல்ல வந்திருக்கிறான் என அக்கணத்தில் புரிந்து கொண்டு ஆட்டோவில் ஏறி அக்கா வீட்டில் இறங்கினேன்.

***

பழனியைக் கண்டதிலிருந்து நினைவுகள் ஒவ்வொன்றும் சித்திரங்களாக மனதில் கோலமிட்டன.

பள்ளிக்காலத்தில் எனக்குக் ஹீரோவாக இருந்தவன் பழனி. பட்ட பனைகளில் ஏறி பொந்துக்குள் இலாவகமாகக் கைவிட்டு கிளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிப்பதில் வல்லவன். அத்துணிச்சல் யாருக்கும் வராதது. கிளி வளர்ப்பில் பைத்தியமாகிப் போய் அவனுக்குப் பின்னால் திரிந்திருக்கிறேன்.

பழனியின் தகப்பன் வைத்தி அப்பா. சிவராத்திரி நாளன்று எங்கள் கோயில் முன்வெட்டையில் நடக்கின்ற நாடகங்களில் நடித்துப் பிரபலமானவர். உச்சஸ்தாயியில் குரலெடுத்துப் பாடும்திறன் அவருக்கு வாய்த்திருந்தது. அதுவும் காத்தான் கூத்துப் பாடல்களையெல்லாம் கரைச்ச மனிதர். பாவங்களுடன் மன முருகிப்பாடி மகிழ்விப்பவர். தோற்றத்திலும் நல்ல சிவலையான அழகர். அதனால் என்னவோ எந்த நாடகத்திலும் பெண் வேடம் அவருக்குக் கிடைத்துவிடும். வைத்தி அப்பா பெண் வேடமிட்டு நடிப்பதைப் பார்த்து உண்மையான பெண் தான் எனக் கிறங்கியவர்கள் பற்றியெல்லாம் ஊரில் உலாவிய கதைகளுமிருந்தது. அதிலும் அவருக்குப் பெருமைதான். வைத்தி அப்பா இறந்து பல ஆண்டுகள் கழிந்திருக்கும்.

சூதுவாதற்ற வைத்தி அப்பாவின் ஆன்மாவைத் தரிசித்த சந்திப்பாகவே பழனியின் அன்றைய சந்திப்பு நிகழ்ந்தது.

பழனியின் ஊரில் இருக்கும் பலரது கதைகளும் சோகமானவைதான். ஆண்கள் பெண்கள் என்று மாடாய் உழைத்து உருக்குலைந்து போனதுதான் மிச்சம். ஆற அமர இருந்து கூடிப்பேசி மகிழக் கூட நேரமில்லாத வாழ்க்கை. ஏதோ வேலை வேலையென்று இறக்கை கட்டிப் பறப்பது பழகிப்போய்விட்டது அவர்களுக்கு. வீடு வாசல் என்று இருப்பதெல்லாம் ஒப்புக்குத் தான். இரவு படுக்கை நேரம் தவிர, மற்ற நேரமெல்லாம் தெருவளந்த பொழுதுகள்தான் வாய்த்திருக்கிறது.

அந்த ஊரில் பெண்களோவெனில், இரட்டைச் சுமையைச் சுமக்கவேண்டியிருக்கும். அதிகாலையிலேயே தோட்ட வேலைகளுக்கென்று திக்குத் திக்காக கிளம்பி விடுவார்கள். சுற்றுவட்டாரத்தில் உள்ள தோட்டங்களில் பருவகால வேலைகள் அவர்களுக்கெனக் காத்துக் கிடக்கும். எல்லா வேலைகளும் முடிந்துவர மாலையாகிவிடும். வீட்டுக்கு வந்தாலும் பல சோலிகள் காத்திருக்கும். கடைகளுக்குப்போய் வந்து சமையல் செய்வது ஒரு பக்கம். குடித்துவிட்டு வந்து சண்டைக்கிழுக்கும் கணவன்மாரின் தொல்லை மறுபக்கம், பசியில் வாடிக் கிடக்கும் பிள்ளைகள் இன்னொரு பக்கமென எல்லாவற்றையும் ஒற்றையாக நின்று சமாளிக்கவேண்டியிருக்கும்.

சிறுவயதில் பார்த்த அதே குடிமனைகளில்தான் வசிக்கிறார்கள். காவோலை வேலிகளும், குண்டும் குழியுமான தெருக்களும் அந்த உழைப்பாளர்களுக்கென்று விதிக்கப்பட்டுள்ளது. அந்த இருண்ட வாழ்விலிருந்து அவர்களை மீட்க, மீட்பர்கள் யாருமில்லை.

***

சொற்ப நாட்களில் விடுமுறை முடிந்ததும் கனடாவுக்குத் திரும்பிவந்து மூன்று மாதங்கள் கடந்துவிட்டது.. பால்ய நண்பன் பழனியை ஒருமுறை சந்தித்ததற்குப் பிறகு சந்திக்கவில்லை. தன்வீட்டுக்கு அவசியம் வரும்படி அழைத்தும் நான் போகவில்லை. வேலையும் வீடுமென இருந்துவிட்டேன்.

நெடுநாட்களுக்குப்பின் அவனைச் சந்தித்ததை மீட்டுப் பார்ப்பதற்கு ஊரிலிருந்து வந்த தொலைபேசி அழைப்புக் காரணமாயிற்று. இன்று அதிகாலையில் தொலைபேசியில் அழைத்த மைத்துணர் பழனியின் செய்தியைச் சொன்னார். தழுதழுத்த குரலில் மனம் கனத்துப்போய் பேசினார். யாரும் எதிர்பாராத விபத்து. உடல்நிலை குன்றிய வேளை பனையில் ஏறி பாளைகளைப் பதப்படுத்தியிருக்கிறான். பழனி சமநிலை தவறி கீழே வந்து விழுந்திருக்கிறான். காயப்பட்டுப் போனவனின் உயிர் அந்த இடத்திலேயே பிரிந்துவிட்டதாக செய்தியறிந்து உறைந்து போயிருந்தேன்.

அன்று முழுவதும் பழனியின் உருவந்தான் வந்துவந்து மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது.. நீண்ட இடைவெளிக்குப் பின் சந்தித்தபோது, வீட்டுக்கு அழைத்திருந்தான். நட்பின் நெருக்கத்திலான கள்ளங்கபடமற்ற அழைப்பு அது. நம்பிக்கையுடன் காத்திருந்திருப்பான். நிச்சயம் வருவதாகக் கூறிச் சென்றேன். அவனிடம் போகாமல் நான் திரும்பியது அவனுக்கு வருத்தத்தை உண்டு பண்ணியிருக்குமோ என்ற குற்றவுணர்வு மனதை வருத்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துயரத்தை வேலைத்தலத்திலும் நண்பன் பாலாவிடம் முழுமையாகக் கூறி என் குற்றவுணர்வை வெளிப்படுத்தினேன்.

சில கணங்கள் என்னை உற்றுப்பார்த்து விட்டு,

"தேவா நீ நினைக்கிறது போலை இல்லை" என்றான்.

திகைத்துப்போய் அவனைப் பார்த்தேன்.

"பொதுவா உடல் உழைப்பை நம்பியிருக்கிறவையள் மற்றவர்களிடம் எதையும் எதிர்பார்க்க மாட்டார்கள். யார் குறித்தும் மனவருத்தப்படவும் மாட்டார்கள். அவர்களிடமிருக்கிற உறுதி, வைராக்கியம் அதுக்கெல்லாம் இடம்கொடாது. நீ கவலைப்படுறதுக்கு ஒண்டுமில்லையடா..?"

பாலா சாதாரணமாகக் கூறிவிட்டு தனது இடத்துக்குச் சென்றான்.

அவன் கூறிய வார்த்தைகள் அக்கணத்தில் ஆறுதல் தந்தது. வெளிநாட்டில் உள்ளவர்கள் ஊருக்கு உதவுகின்ற வழிகளை ஒப்பிட்டு என் மனம் தானாகவே ஓர் உரையாடலில் இறங்கியது.

பழனி போன்ற ஏழை எளியதுகளுக்கு உதவுதவதில் மாற்றுவழியொன்று தேவையென மனம் எண்ணியது.

❐

# எனக்குத் தெரியும்

அனா மரியா ரோட்ஸ்
தமிழில்: நிலங்கோ

எனக்குத் தெரியும்
விருப்புடன் போராட வந்தவள் என்பதற்கு மேலாக
எதையும் நான் விரும்பவில்லை என்று
எனக்குத் தெரியும்

சித்தாந்தத்தின் இடதுபுறத்தில்
நான் உள்ளேன்
இந்த அமைப்பைச் சீரமைக்க
உரையாடல், விமர்சனம், சுயவிமர்சனம்
என்ற ஆயுதங்களைத் தொடர்ச்சியாக வீசி
சக்தியையும் நேரத்தையும் இழக்கிறேன்
அவர்கள் மொழியில் நான்
காலாவதியான நற்செய்தியை
பிரசங்கம் செய்கிறேன்



மலைகளிலே கைவிடப்பட்ட
மற்றைய பைத்தியக்காரனைப் போல
நானும் முடிவடையப் போகிறேன்

ஆனால் என் போராட்டம்
ஆண்களுக்கு சேவை செய்யும் அரசியல் அல்ல
அவர்கள் என் நாட்குறிப்பை வெளியிட மாட்டார்கள்
அவர்கள் எனது புகைப்படத்துடனான அட்டைகளையோ,
பென்டன்களையோ உருவாக்கமாட்டார்கள்
மக்களைச் சென்றடையும் சின்னமாக
நான் என்றுமே இருக்கப் போவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ண தொறந்து பாரு

ராசாத்தோட்டம் ராமஜெயம்

கண்டிக்கும் கம்பளைக்கும் பதினாறு கட்ட
கஸ்டப்பட்டு ரோட்டு போட்டவன் பேரு கூட இல்ல
இரு நூறு வருசமாச்சி எதனை நான் தான் சொல்ல
இனியாவது கண்ணைத் தொறப்போம் இருக்கிறத காக்க

அம்மாமாரு ரோட்டு போட்ட வரலாறுனக்கு தெரியுமா?
சும்மா இல்ல உயிர் குடுத்து பாதை போட்டார் மறக்குமா?
சுரங்கம் வந்தா விசிலடிக்கும் உனக்கு எதுவும் விளங்குமா?
கரங்களாலே கருங்கல் உடைத்த சக்தி உனக்குப் புரியுமா?

ஓசந்த கட்டிடம் கடக்கும் பாலம் உங்கள் மூளை அறியுமா?
படிகள் காண்கள் செடிகள் மரங்கள் பார்த்து விளக்க இயலுமா?
குறுக்குப் பாத கருத்த ரோட்டு தானா வரல பாரம்மா
படிப்பில் கதையில் நடிப்பில் குறிப்பில் ஒன்றுமில்ல போங்கம்மா

எல்லாம் படைத்த எஞ்சினீரு எங்கு மறைந்தான் எழுதல
காலை வைக்கும் இடங்கள் எல்லாம் கதைகள் சொல்லுது படைப்பில
பெரட்டுக்களம் ஒடைஞ்சி போச்சி தகரம் எல்லாம் கொள்ள
குறிப்பாக சொல்ல போனா தோட்டம் இனி மேல் இல்ல

இரும்பு மேல இரும்பு போட்டு ஸ்டோர் கட்டியதாரு
ஈடு இல்லா மலையகத்தை இயக்கி வைத்தவன்னு கூறு
கஸ்டப்பட்டு ஆன தெல்லாம் கம்பனியால் அழியுது
காண்பதெல்லாம் அழிவு தானே கண்ணீர் தானே வருகுது


எல்லாம் இத்து விழுறதுக்கு எவன் தான் இன்று பொறுப்பு
ஏண்டா இந்த பேரழிவு எனக்கு விளக்கம் கூறு
காடாய்ப் போன தோட்டத்தில காசு வருமா சொல்லு
பாழாய்ப் போன திருடர்களே கண்ண தொறந்து பாரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை வியாபார பிரமிட்டும் புண்பட்டுப் போகும் இளையரும்

சிவ. இராஜேந்திரன்



ஒரு காலத்தில் ஒற்றுமைக்கும் நல்லொழுக் கத்துக்கும் பெயர் போன உப்புராசித் தோட்டம் இன்று போதையினால் நாசமாகும் இடமாக மாறிப்போய் விட்டதைக் கண்டு கவலைப்படுகின்றவர்கள் சிலர் மட்டும் தான். 'ஓலகம் போற போக்கு... நாம என்னா செய்யிறது... என்னமாவது நடக்கட்டும...கலி காலமுனா அப்புடித்தான்' என்று நினைத்தும் பேசியும் வருகிறவர்கள்தான் அதிகம். இந்த நிலமை இந்த தோட்டத்திற்கு மட்டும் தானா?

சரியாக 'பதனஞ்சி' வருசத்துக்கு முன்னர் ஒரு நாசம் தடுத்து நிறுத்தப்பட்டது. கிராமப்பகுதியில் இருந்து 'கேன்' கணக்கில் கொண்டு வந்து தாரளமாக விற்கப்பட்ட கசிப்பு யாவாரத்தை தடுத்து நிறுத்த ஐந்து வருடத்துக்கு மேல் போராடி ஒரு முடிவு எட்டப்பட்டது.

"மேட்டு லயத்துப் பொடியங்க தல எடுக்காம இருந்தா நம்ம ஆளுகளே கசிப்ப குடிச்சி செத்துப் போய் இருப்பானுங்க..."

"அதுன்னா உண்ம தான் மச்சான்... காலயிலேயே ஒரு சொட்டு போடடுட்டுத் தானே வேலைக்கே கௌம்புவானுங்க..."

"கசிப்ப இல்லாம செய்யிறதுக்காக நம்ம புள்ளக எவளவு கஸ்டப்பட்டு போயிட் டாங்க... அடே எங்கப்பா... கசிப்பு விக்கிற வனுங்களுக்கு சப்போட்டா பனிய லயத்துப் பயலுகளும் இருந்தானுங்களே அத மறக்க முடியுமா.... புள்ளக டவனுல அடி வாங் கினது... பொய் வழக்குப் போட்டது.. இதயெல்லாம் மறந்து போயிற முடியுமா..."

"கள்ள ஓட்டு போடுறதுக்கு கசிப்ப குடுத்த நாய்கள்ல மூனு பேரு செத்தே போயிட் டானுங்க... மத்தவனுங்க இப்ப போடுற ஆட்டத்த பார்க்கணுமே... நாசமாதான் போயிருவானுங்க.."

"கசிப்பு விசயம் லேசா முடிஞ்சி போயி இருக்கும்... ஆனா.. பொலிஸ்காரனுங்களும் நாட்டுல இருக்குற கசிப்பு யாவாரிகளுக்குத் தானே சப்போட்டா இருந்தானுங்க... அதுனாலதான் பிரச்சினையே வந்துச்சி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இப்ப மட்டும் என்னா... அதுதானே நடக்குது... தூளு.. டொபி... குலி.. போயல... டப்பா.. அது இதுன்னு என்னா எழவ யெல்லாம் கொண்டு வந்து விக்கிறானுங்க.... விக்க குடுத்தவன உட்டுப்புட்டு விக்கிற வனுங்கள புடிக்கிறானுங்க.. அவனுங்களும் ஒரு கெழமையில் வந்துர்ரானுங்க.. புள்ள களாவது திருந்துவானுங்கன்னு பார்த்தா... அது பெரும் மோசமாதான் இருக்கு... அவன புடிக்கிறேன் இவன புடிக்கிறேன்னு சொல்லூ றானுங்க.. ஆனால் நாளுக்கு நாளு கூடிக் கிட்டுத்தானே போகுது.. "

"ஒலிபோல் கிரவுண்டுல ஒருத்தனயும் காணோம்... பயலுக எல்லாரும் கூட்டுமாரு குச்சி மாதிரி நரங்கி போயி கெடக்கறானுங்க... எழும்பி நடக்கக்கூட முடியல"

"இன்ன ஒன்னு தெரியுமா எத கேட் டாலும் பொடியன்மாரு வாய தொறக்கவே மாட்டேங்கிறானுங்க... நாக்குக்கு கீழ எத யாவது வச்சி தொலைச்சா எத தான் பேசுறது.."

"ராகல பகுதியில என்ன எழவு போதை யையோ குடிச்சிப்புட்டு தாய் தகப்பன் அக்கா அக்காவுட்டு புள்ள எல்லாத்தையம் போட்டு எரிச்சிப்புட்டு போயிட்டான்... நெனச்சாலே பயமா இருக்க இத விட என்னாத்த சொல்லுனும்..."

வேலை செய்யும் மலைகளிலும், வெறகு காட்டிலும் நாளைக்கு ஒரு தடவையாவது தொழிலாளர்கள் பேசிக் கொள்ளும் விசய மாகிப் போய் விட்டது.

"புள்ளகள எப்புடி காப்பாத்துறது?"

அற்ப சலுகைகளுக்கவும் தலவரு பதவி கங்காணி வேலைக்காகவும் சும்மா இருந்து பேரு போட்டுக்கிற 'கோடாலி புடிகளும்' தோட்டங்களில் பெருகி வருவதை சகலரும் அறிவார். அந்த காலத்துலயும் இந்த மாதிரி கூட்டம் இருந்திச்சிதான் தோட்டத்துக்கு ரெண்டு மூனு பேருதான் இருப்பானுங்க.. ஆனால் இப்ப சுய லாபத்துக்காக எதையும் செய்ய தயாராகும் 'மோட' கூட்டம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டுதான் வருகின்றது. இந்த மாதிரி கூட்டத்தில உள்ளவனுங்க கதை வேற மாதிரிதான் இருக்கும்.

"தலவரு... என்னமோ பயலுக எல்லாம் சேர்ந்து நம்ம தோட்டத்த திருத்தி கிழிக்கப் போரானுங்களாமே... அதெல்லாம் நடக்குற காரியமா?... ஒலகம் போகிற போக்கில விட்டுப்புட்டு பொழப்ப பார்க்காம ஊர திருத்துரானுங்களாம்.."

"ஆமாம்... கங்காணி ஏதோ கசிப்பு யாவாரத்த நிப்பாட்டிப்புட்டானுங்களாம்... இனி தோட்டத்துல கள்ள சாராயம் விக்க கூடாதாம்.... பனிய ஒத்த கடையில என்னமோ போத சாமான்கள் விக்கிறாங்கனு... பெட் டிசன் வேற எழுதி போட்டு இருக்கிறா னுங்களாம்...."

"அரசாங்கத்துக்கே ஒன்னும் செய்ய முடி யல.... இவனுங்க பத்து பேரு சேந்துக்கிட்டா.... எல்லாத்தையும் மாத்திபுடுவானுங்களோ... சரி அதயும் பார்த்துப்புடுவோம்... செல்வராசு அண்ணே நம்ம ஆளு... புள் சப்போட் குடுக்க சொல்லிதான் எம்பியும் சொல்லிட்டு போனாரு.."

"எல்லாம் போட்டியும் பொறாமையும் தான் மச்சான்.. பனிய கடை செல்வராசு... முன்ன பெட்டிக் கட தான்.... வச்சி இருந்தாரு ...இப்ப ரெண்டு பெரிய கட... மாடி வீடு... இதெல்லாம் சும்மா வருமா... அவரு அத இத வித்து தான் சம்பாரிக்கிறாரு... இவனுங் களுக்கு தேவ இல்லனா பொத்திக்கிட்டு இருக்க வேண்டியது தானே... நம்மல்ல உள்ள வங்கன்னு விட்டு வெலக வேண்டியது தானே .."

அந்தக் காலத்தில் இருந்து தொழிலாளர் களைக் காட்டிக்கொடுக்கும் சங்கத்தின் தோட்டத் தலைவரும் தோட்டத்துரைக்குப் பந்தம் பிடிக்கும் கங்காணிகளும் வேறு எதை தான் பேசுவார்கள்?

மேட்டு லயத்தில் வாழும் பத்து பொடியங்களும் கோவில் லயத்தில் வாழும் பதினைந்து பொடியன்களும் 'கோட்டசில்' வாழும் இரண்டு சேர்மார்களும் 'பீல்ட் சுப்பவைசர்' மனைவியாக இருக்கும் சிங்கள டீச்சரும் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக கோபமாகத்தான் இருந்தார்கள். சிங்கள டீச்சரின் மூத்த மகன் கண்டி பகுதியிலுள்ள பிரபல பாடசாலையில் படித்துக் கொண்டிருந்த போது போதைக்கு அடிமையாகி இன்று மன நிலை பாதிக்கப் பட்டவனாக இருந்தான். தனது இரண்டாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைக்கும் அந்த நிலை வந்துவிடக் கூடாது என்பதில் தீவிரமாக இருந்தாள்.

தோட்டத்திலும் நகரத்திலும் நடக்கும் போதைப் பொருள் வியாபாரம் பற்றி அதிகாரிகளுக்கு சிங்களத்தில் கடிதம் எழுதி அனுப்புவது அவள்தான் என்பது இரண்டு பொடின்களுக்கு மட்டுமே தெரியும். ரகசியம் காப்பதில் அவர்கள் புலனாய்வு பிரிவினர் போல செயற்பட்டார்கள்.

"இந்த முறை இவனுங்கள ஒரு வழி பன்னனும் மச்சான்... அடங்கவே மாட்டேங் கிறானுங்களே.."

"எங்க மச்சான் பொலிச வளைச்சிப் புடுறானுங்க... அரசியல்வாதிகவுட்டு ஆதரவு போதுமான அளவு இருக்கு... அவனுங்களே போத மாத்திர விக்கிறவனுங்கதான்.... எம்.பி மாரு சப்போட் வேற இருக்கு... அவனுங்கள எதுத்து நிக்கிறது ஏதோ கருங்கல்லோட மோதுற மாதிரிதான்..."

"பத்து மாசமா எத்தன காயிதம் எழுதிப் புட்டோமுனு சொல்லு.. சிங்களத்துல வேற மூனு கடுதாசி போட்டாச்சி... ஒன்னும் நடக்குற மாதிரி தெரியல..."

"அது சரி மச்சான்.. அருளு.. இவளவு பொலிஸகாரனுங்க... சிஐடி மாரு.... அதி காரிங்க எல்லாரும் இருக்கும் போது எப்புடி மச்சான் வெதம் வெதமா சாமான் வந்து சேருது... எனக்குனா வெளங்கவே இல்ல...."

"யாழ்ப்பாணத்துல அடிக்கு ஒரு பொலிசு ஆமி புலனாய்வுன்னு இருக்குறாங்க... கேரள கஞ்சா மூட்ட கணக்குல வந்து எறங்குது... கொழும்பு பத்தி பேச தேவயில்ல.... அங்க கப்பல் கணக்குல இல்ல வருது..."

"எனக்கு என்னவோ... நம்பிக்க இல்ல பன்னீரு... பேய் அரசாங்கம் பன்னுனா.. ஆளுக.. பொணத்த தான் திங்க வேண்டி வருமுனு சொல்லவாங்க... இது போதையில நடக்குற அரசாங்கம்... போதய தான் திங்கணும் குடிக்கணும்..." சிவா நம்பிக்கை இழந்து இருப்பது தெரிந்தது.

"அப்ப போத சாமான் விக்கிறவனுங்கள பாரத்துக்கிட்டு சும்மா இருக்க சொல்லுறியா... எனக்குத் தெரிய ஸ்கூல் பொடியங்க பத்து பேரு கிட்ட போத சாப்பிடுறானுங்க... பெரிய ஆளுக வேற.. தோட்டமே நாசமா போகுது... பொம்பள புள்ளக கூட யாருக்கும் தெரியாம... டொபி.. வாங்கி சாப்புடுது... எனக்கு நம்பிக்க இருக்கு சிவா... முயற்சி பன்னுவோம்... கசிப்ப நிப்பாட்டுனோம் தானே..." பன்னீரு உறுதியாக இருந்தான்.

"உண்மதான் பன்னீரு... கட காரனுக்கு பொலிஸ் சப்போட் இருக்கு.. மந்திரிவுட்டு ஆளு... தேர்தல் வந்தா.. ஒத்த கட செல்வராசும் அவனுங்க கூட்டமும் தானே சாராயம் சப்ளை எல்லாம்.. எம்பிமாரு.. புள் சப்போட் குடுக்குறானுங்க... நானா அவனுங்களான்னு பார்த்துப்படுவோமுனு மோகன் மாமாகிட்ட சொல்லி இருக்கிறான்..." ரவி விளக்கினான்.

"சரி அதயும் பார்த்துப்புடுவோம்...." ஏனையவர்கள் ஒரே நேரத்தில் சொன்னார்கள். இளங் கன்றுகள் பயம் அறிவதில்லை. நம்பிக்கையுடன் வீடுகளுக்குச் சென்றார்கள்.

மூன்றாம் நாள் ஞாயிற்றுக் கிழமை.

போதை ஒழிப்பு போராட்ட நடவடிக் கையில் முன்னணியில் இருக்கும் பன்னீர், பத்மா, அருள் உள்ளிட்ட ஆறு பேர் காற்றுக்கு ஒடிந்து விழுந்த கருப்பந்தேயிலை வாதுகளை விறகுக்காக சேகரித்து கட்டி வைத்து விட்டு உயர்த்தில் இருந்த கொக்கிக் கல் பாறையில் அமர்ந்திருந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

கடைக்குப் போயிருந்த சீலனிடம் இருந்து போன் வந்தது.

"மச்சான்.. பொலிஸ் ஜீப்பு அஞ்சி பாராட்டு சந்தி தாண்டி தோட்டத்து பக்கம் வருது... வழமையா வார வண்டி இல்ல... வேற பொலிஸ் போல..."

:இன்னக்கி செத்தாண்டா செல்வராசு... இனியாவது தோட்டம் உருப்படட்டும்.." பத்மா சந்தோசமாக சொன்னான்.

"வெறகுகள தூக்குங்க... போவோம்... இன் னையோட சனியன் ஒழியுமுனு நெனைக் கிறேன்..." பன்னீர் அவசப்பட்டான்.

"போட்ட காயிதம் வேல செய்யிது போல..." எல்லோரும் பாரமான விறகுடன் வேகமாக லயத்தை நோக்கி நடந்தனர்.

அவர்கள் மேட்டு லயத்துக்கு வருவதற்கும் நாலைந்து பொலிஸ்காரர்கள்... லய வாசலுக்கு வருவதற்கும் சரியாக இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிப்பக்கத்தில் விறகு கட்டுக்களைப் போட்டு விட்டு வாசல் பக்கமாக வந்து சேர்ந்தனர்.

லயத்தில் பீலிக்ரை பக்கமாக இருந்து பார்க்கும் போது மூனறாவதாக இருப்பது தான் பன்னீருடைய வீடாகும். போலிஸ் அந்த வீட்டுக்குள் புகுந்து விட்டனர். அப்பா சிவகுமார் திடுக்கிட்டுப் போனார். ஸ்தோப்பின் முன் பக்கமாக இருந்த 'இளையரின் இதயம்' சே குவேராவின் படம் பொலிஸ்காரனுக்கு நிச்சயமாக மகிழ்வை ஏற்படுத்தி இருக்க முடியாது.

"அதி பன்னீரு யாரு..."

"நம்ம மகன் தானுங்க..."

"இங்க கஞ்சா விக்கிறதா..."

"இல்லிங்க... மகேன்... அதெல்லாம் குடிக்க மாட்டாருங்க... கசிப்பு யாவாரத்த நிற்பாட்டுன பொடியன்ல ஒருத்தரு தானுங்க நம்ம மகேன்."

"பொரு.. (பொய்) பேச வேணாம்.. நீம்ம பெரி மனுசங் தானே... கஞ்சா பொன்ன நே அபேய் விக்குனனவா" (கஞ்சா குடிக்கிறதில்லை ஆனால் விற்கிறது)

நாலைந்து பொலிஸ்காரர்கள் உள்ளே நுழைந்தார்கள். கோப்பை ராக்கை, அடுப்புக்கு மேலே இருந்த விறகு அட்டல், தாத்தா காலத்து ரெங்கு பெட்டி, சாப்பட்டு சாமான்கள் வைக்கும் பலகைப் பெட்டி, பன்னீரின் மேசை எல்லாவற்றையும் கிண்டி கிளறி தேடினார்கள். உள்ளே என்ன நடக்கிறது என்பதை பார்க்க முடியவில்லை.

"மே தியனே படு..." (இந்தா இருக்கு சாமான்) பொட்டலம் ஒன்றை எடுத்து காட்டினான் ஒருவன்.

"இதி என்னா... பாரு... மனுசன்.." சத்தம் அதிர்ந்தது.

"பொய்யிங்க... மகன் அப்புடியான ஆளு இல்லைங்க..." சற்று கோபமாக சொன்னார்.

"நாங் பொழயா...நாங் கொண்டு வந்து வச்சதா..." அடிக்க போவது போல கையை ஓங்கினான். வாசலில் இருந்து நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்த பன்னீருக்கு பொறுக்க முடியவில்லை.

"மங் தமாய் பன்னீர்... எய் தாத்தாட்ட கஹாண்ட யன்னே.."

"மே இன்னே நாயக்கயா.....தமுசே கஞ்சா காரயா நேயத.." (இங்க இருக்கிறான் தலவன்.... நீ கஞ்சா காரன் தானே)

லயத்திலுள்ள அனைவரும் கூடி விட்டனர். விசயம் தெரிந்து பக்கத்து லயத்து பொடியன்களும் வந்து விட்டார்கள்.

"குடு ஜாதி விக்குனான்னே வென கட்டிய.. எய் மே எவிலா கரதர கரன்னே அபி கஞ்சாட்ட மத் குடுவலட்ட விருத வென்ன கட்டிய" (தூள் விக்கிறது வேறு ஆளுக இங்கே வந்து ஏன் கரைச்சல் பண்ணுகிறீர்கள்.. நாங்கள் கஞ்சா தூளுக்கு எதிரானவர்கள்) பலர் சத்தமிட்டார்கள்.

"அபி படு கத்தா... ஹரி கட்ட வாகன இண்ட.... உசாவியேன் பலமு... சப்த கருவோத் ஒக்கம அரஸ் கரனவா" (நாங்கள் சாமானை எடுத்து விட்டோம்.. சரியா.. வாய மூடுங்க இனி கோட்டில் பார்ப்போம். சத்தம் போட்டால் எல்லோரையயும் கைது செய்வோம்) துப்பாக்கியை வைத்திருந்த பொலிஸ் சத்தமிட்டான்.

"சுடுங்க என்ன சுடுங்க... நாங்க அஞ்சி பத்து பேரு செத்துதான் இந்த போதய நிற்பாட்டனுமுனா... சாகுறோம்..." அருள் கோபமாகக் கத்தினான்.

"விக்கறிவன புடிக்காம இங்க வந்து.. வீரத்த காட்டுறானுங்க... த்தூ... செல்வராசு வுட்டு சாராய மூத்துரத்த குடிச்சிருப்பானுங்க போல... அதுதான் வேல செய்யிது போல..." கமலம் பாட்டி வெத்திலை எச்சியைத் துப்பியபடி சொன்னது அவர்களுக்கு விளங்கி இருக்க வாய்ப்பில்லை. மொழி தெரிய வேண்டுமே.

நேரம் செல்ல செல்ல தொழிலாளர்கள் அதிகமாக கூடுவது தெளிவாகியது. வந்தவரில் ஒருவன் சைகை காட்டியான்.

பொலிஸ்காரனில் ஒருவன் பன்னீரின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஜீப்பை நோக்கிச் சென்றான். பாதுகாப்புக்கு ஏனையவர்கள் பக்கவாட்டிலும் பின்னாலும் மக்களை இடித்துத் தள்ளியவாறு சென்றனர்.

"இதுன்னா பெரிய அநியாயம்... சும்மா இருக்குற புள்ளய புடிச்சிக்கிட்டு போறானுங்க


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இதெல்லாம் அந்த குடு மொதலாளிவுட்டு வேலயா தான் இருக்கும்... சரி அதயும் பார்த்துப் புடுவோமே.."

"அவனுக்கு அரசியல்வாதிகவுட்டு சப் போட் இருக்கு... அவனுகளுக்கு மந்திரிமார் சப்போட் அவனுங்களக்கு முழு பணக் காரனுங்க வுட்டு ஒதவி இருக்கு.... இந்த விசயத்துல நீதியெல்லாம் கெடைக்காது.. இப்ப நாட்டுல எல்லா எடத்துலயும் இது தானே நடக்குது.... கேக்க போனா பொல் லாப்பு.." மக்கள் கோபத்துடன் சத்தமாகப் பேசிக் கொண்டனர்.

"குடு செல்வராசு செஞ்ச வேலய பாத்திங்க தானே... அவனுக்குத்தான் மேல் மட்டம் வரைக்கும் சப்போட் இருக்குதே." பக்கத்து வீட்டு சரசு அக்கா பதட்டமாக இருப்பது தெரிந்தது.

ஜீப் வேகமாகப் புறப்பட்டது. ஐந்தாறு இளைஞர்கள் பின்னால் ஓடிப்பார்த்தார்கள்.

"பயப்புடாம போ மச்சான் ஸ்டேசனுக்கு வாரோம்... குடுகாரன நாங்க பார்த்துக் கிறோம்..." மோகன் சத்தமாக சொன்னது பன்னீரின் காதுகளை எட்டி இருக்க வேண்டும். அவன் சோத்தாங்கை பெரு விரலை உயர்த்திக் காட்டினான். முகத்தில் பயம் என்பது இல்லை.

ஏனையவர்கள் கீழே இருந்த குடு விற்கும் 'மூனு கடையை' நோக்கி நோக்கி வேகமாகப் போவது தெரிந்தது.

"வாரது வரட்டும்... நூறு வருசமா வாழப் போறோம்..."

இனியும் சும்மா இருந்தா... லயத்துக்கு ஒரு குடு யாவாரி வந்திருவான்..."

"இவனுக்கு குடுக்கிற குடு.. மத்தவனுங் களுக்குப் பாடமாக இருக்கணும் மச்சான்.."

"அவனுங்ககிட்ட குடு வாங்கி குடிக்கிற வனுங்களுக்கும்.. சப்போட் பன்னுறவனுங் களுக்கும்.. அடுத்து இருக்கு..."

பன்னீர், ஜீப்பிலிருந்து இறங்கி வந்து போக வேண்டாம் என தடை போட்டாலும் அவர்களை நிறுத்த முடியாது என்பது தோட்ட மக்கள் எல்லோருக்கும் தெரியும். ❑

கவிதை

# வாழ்தல் என்பது

*நேசிப்பவர்களின் சிறு புன்னகைக்காக நாள் முழுதும் காத்திருத்தல்,*
*தினமும் வாழ்வைக் கொண்டாடத் தெரிந்திருத்தல்,*
*கிடைக்கும் ஒவ்வொரு நல்ல விடயங்களிலும் மகிழ்ந்திருத்தல்,*
*நித்தம் பார்க்கும் மனிதர்களிடம் கொஞ்சம் அனுசரணை காட்டுதல்,*
*யாரோ தெரியாத முகத்தை நோக்கியும் எப்போதேனும் சிரிக்க முடிதல்,*

*மோசமான நாட்களிலும் மனதை தேற்ற, தோள் கொடுக்க, மனிதர்களை*
*சம்பாதித்து வைத்திருத்தல்,*

*எல்லா உணர்வுகளையும் உண்மையாக வெளிப்படுத்தக்கூடிய*
*சுதந்திரம் நிறைந்த உறவில் வாழ்தல்,*

*என்ன நடந்தாலும் வாழ்வின் எல்லை வரை கைபிடித்து நடக்கக் கூடிய*
*வாழ்க்கைத்துணையுடன் வாழ்தல்,*

*மரணம் கொடுக்கும் வலியும், ஒரு சொல்லில் நொறுங்கும்*
*மனம் அடையும் வலியும் ஒன்றே என அறிதல்,*

*என்னைப் போல் மனிதனே என்னை சுற்றி இருப்பவனும்*
*என்ற புரிதலை அடைதல்,*

*சின்ன சின்ன சந்தோசங்களில் மகிழும் மனதையும்,*
*பெரிய தோல்விகளில் தளராத நம்பிக்கையையும் அடைதல்.*

*வாழ்தல் என்பது வாழ்தலே!*
*வாழாத வாழ்வை எல்லாம் வாழ்ந்து தீர்க்கவே!*

*மாதவி உமாசுதசர்மா*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்புகள்

சரஸ்வதி பிரபாகர்

மருத்துவம் தமிழின் அறுபத்து நான்கு கலைகளில் ஒன்றாகும். தமிழருடைய மருத்துவ விஞ்ஞானம் மருத்துவம் என்றே அழைக்கப்பட்டு வந்தது. ஆயுர் வேதம் போன்ற மாற்று மருத்துவ முறைகளின் தோற்றத்திற்குப் பின் தமிழ் மருத்துவம் என்று தமிழர் களால் பெருமையுடன் அழைக்கப்பட்டு வருகின்றது. இந்தியாவிலிருந்து திருமூலரும் சித்தநாகார்ச்சுனரும் இலங்கை வந்து மருத்துவம் கற்றனர் என கொங்கணர் தெரிவித்துள்ளார். சித்த நாகார்ச்சுனர் தமிழ் மருத்துவ முறைகளை ஆயுர்வேதத்துடன் இணைத்து ஆயுர்வேத மருத்துவம் என அழைத்தனர். இந்திய மருத்துவ முறையில் சித்தமருத்துவம், ஆயுர்வேதம் இரண்டும் கலந்து காணப்படுகின்றன. இந்தியாவில் தமிழ் மருத்துவம் முற்காலத்தில் தனித்தன்மையோடு சிறந்து விளங்கியது.

அங்கே அகத்திய மருத்துவம் சித்தமருத்துவம் என அழைக்கப்பட்டது. ஆயுர்வேதமும் சித்த மருத்துவமும் முற்றிலும் வெவ்வேறான இரு மருத்துவ முறைகள் ஆகும்.

உடலைப் பிணிப்பது பிணி. அதனை மறுப்பது மருந்து. மருந்தை இயற்றுவது மருத்துவம். இவ்வாறு தனித்துவத்தை தன்னகத்தே கொண்டது தமிழ் மருத்துவம். எனவேதான் பின்னர் தோன்றிய மருத்துவ முறைகளை மருத்துவம் என்று அழைக்காமல் ஆயுர்வேதம், அக்குபங்கர், அலோபதி, கோமியோபதி, யூனானி என அழைத்தனர்.

## அறிமுகம்

தமிழரின் மருத்துவ விஞ்ஞானத்திலிருந்து மற்ற மருத்துவ முறைகள் அதிகளவு மூலங்களை பெற்றுக் கொண்டுள்ளன. ஆனால் வேறு மருத்துவங்களிலிருந்து தமிழரின் மருத்துவம் எதனையும் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இருக்கவில்லை. தமிழ் மருத்துவமே ஆதியானது. எல்லா மருத்துவங்களுக்கும் தாய் மருத்துவம். நாடிப் பரீட்சையை தமிழ் மருத்துவத்திலிருந்து 14ம் நூற்றாண்டில் சாரங்கதரர் ஆயுர்வேதத்தில் சேர்த்து எழுதினார். தமிழின் தேவ மருத்துவமான இரச மருந்துகள் 15ம் நூற்றாண்டில் சித்த நாகார்ச்சனரால் ஆயுர்வேதத்தில் சேர்க்கப்பட்டன. ஔஷதிகளிலிருந்து மட்டுமே ஆயுர்வேத மருந்துகள் தயாரிக்கப்பட்டதால் அவை ஔஷதம் எனப்பட்டது. காசி மன்னன் திவோதாசனின் நோய்க்கு அகத்தியர் அறுவைச் சிகிச்சை செய்து குணமாக்கியதால் அவன் அகத்தியரின் மாணவனாகி மருத்துவம் கற்றபின் சித்தர் தன்வந்திரி என்ற பெயரால் அழைக்கப்பட்டார். சித்தர் தன்வந்திரி தமிழில் பல தமிழ் மருத்துவ நூல்களை எழுதினார். வடமொழியில் ஏதும் எழுதவில்லை. தன்வந்திரியும் பதஞ்சலியும் 18 தமிழ் சித்தர் குழாத்தைச் சேர்ந்தவர்கள். தமிழிலுள்ள தன்வந்திரியின் மருத்துவ முறைகளை முதலாவது சுசுருநர் வடமொழியில் தொகுத்து சுசுருத சம்கிதை என பெயரிட்டார். இரண்டாவது சுசுருநர் அதை திருத்தினார். பின்னர் நாகார்ச்சுனர் கடைசி பாகம் உத்தர ஸ்தானத்தை எழுதிச் சேர்த்தார். பிறகு சந்திரடர் திருத்தங்கள் செய்து சில பாடங்களையும் புகுத்தினார். இதுவே இன்றைய சுசுருத சம்கிதையாகும். பதஞ்சலியின் மருத்துவ முறைகள் வடமொழியில் தொகுக்கப்பட்டு சரகசம்கிதை என்ற பெயரில் வழங்கப்படுகிறது.

முத்தாதுக்கள் பருவகாலங்கள், அடிப்படை விதிகள், பிணிகளின் தொகை 1120, நோய்நாடல் 3, மருந்துகள் 20, மருந்தியல், வன்மவிதி, சந்தகவிதி என்று எல்லாவற்றிலும் ஆயுர்வேத மருத்துவம் வேறுபடுகிறது. இந்தியாவில் கன்னியாகுமாரி மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான தமிழ் ஏடுகள் இன்றும் யாழ்ப்பாண ஏடுகள் என்ற பெயரால் வழங்கப்படுகின்றன. இவை ஆதியில் நாகநகர் பல்லவர்களாலும் சிங்கை ஆரியச் சக்கரவர்த்திகளாலும் இந்தியாவில் அவர்களின் ஆட்சியின் போது எடுத்துச் செல்லப்பட்டவையாகும்.

## 1. மூலிகைகளின் பகுப்பாய்வு தனிச்சிறப்பு

மூலிகைகள் தமிழ் மருத்துவத்தில் பிரதான மூலப் பொருட்களாக இருக்கின்றன. தமிழ் மருந்துகள் குறிப்பிடத்தக்களவு நோய்களை சிகிச்சை அளிப்பதற்கு விகிதாசார அடிப்படையில் மிகக்கூடிய பங்கு வகிக்கிறது. இன்றைய அலோபதி மருத்துவத்தின் வளர்ச்சிக்கும் நவீன மருத்துவ விஞ்ஞான ஆராய்ச்சிகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்கோளாக அமைந்தது. அச்சுதன் தொகுத்த இந்திய தாவரங்களின் தாவரவியல் 12 தொகுப்புக்களாகும். ஒவ்வொன்றும் 500 பக்கங்கள் கொண்டவையாக 1676ல் வெளியிடப்பட்டன. டச்சு அரசு மரு.அச்சுதனை நெதர்லாந்திற்கே அழைத்து சென்று விட்டார். மலபாரில் ஆளுநராக பணியாற்றிய ஹென்றிவான் ரெடே பாரம்பரியமாக வைத்தியம் செய்து வரும் குடும்பங்கள் கல்லூரிப்படிப்பு இல்லாமல் மூலிகைகளை சரியாக அடையாளம் காட்டிவிடுகின்றன. ஆனால் படித்த உயர்தட்டு மக்கள் (பிராமணர்களான இந்திய ஆயுர்வேதியர்) ஏட்டில் உள்ளதைதான் திரும்ப திரும்ப சொல்கிறார்களே தவிர நடைமுறையில் அதை மருத்துவமாக மாற்ற முடியவில்லை. தாம் தெளிவாக உணர்ந்துள்ளதாக ஹென்றி தெரிவித்தார். ஆகவே முற்றிலும் வைத்திய மரபில் வந்த இலங்கையைச் சேர்ந்த ஈழவ சமுதாயத்தின் வைத்திய மரபுப் படியே தனது தாவரவகை பட்டியல் உருவாக வேண்டும் என்றார். ஈழ வைத்திய மரபு முறைப்படிதான் இன்று தாவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பிரித்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சி தருகின்றது.

## 2. தமிழ் மருத்துவ சிகிச்சை முறையின் தனிச்சிறப்பு

*"வேர் பார் தழை பார் மிஞ்சினால் கால்*
*பற்ப செந்தூரம் பார்"*

என்று சொல்வதற்கு அமைய சித்தர்கள் முதலில் மூலிகைகளால் சிகிச்சை அளிப்பர். இதன்போது சிகிச்சை வெற்றியளிக்கவில்லை எனில் இரண்டாவதாக உலோகதாது வர்க்க மருந்துகளை பயன்படுத்துவர். அதற்கும் குணமடையவில்லை எனில் இறுதியாக சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படும். ஆனால் சில சத்திரசிகிச்சைக்குரியவர்களுக்கு சத்திர சிகிச்சை உடனடியாக மேற்கொள்ளப்படும். இது நோய்நிலையிலும் நோயின் தீவிரத்திலும் தங்கியுள்ளது.

## 3. சிகிச்சை முன்னரான படிநிலை சிகிச்சை (Preliminarystep before treatment)

1. *நோயாளியை மருத்துவ நீரினால் குளிப்பாட்டல்.*
2. *நோயாளியின் உடுப்பு கட்டாயம் மாற்றப்படல்.*
3. *நோயாளியை சொந்த இடத்தில் இருந்து தனியாக வைத்தியசாலையில் தங்க வைத்தல்.*
4. *நோயாளியின் விடுதிக்கு மஞ்சள்நீர் விசிறப்படல்.*

ஆரம்பத்தில் ஒவ்வொருவரும் சுகாதாரத்தை மேம்படுத்தும் சுத்திகரிப்பு நடைமுறைகளை அவதானிப்பதற்கு இணைக்கப்பட்டுள்ளது. உடல் உள சுத்தம் கட்டாயம் தெளிவாக வைத்திருத்தல் வேண்டும். சுட்டாறிய குடிநீர் குடிப்பதற்கு எடுக்க வேண்டும். ஒழுங்காக தினமும் உணவு உண்ண முதல் குளிக்க வேண்டும். தலைமுடி 15 நாட்களுக்கு ஒரு தடவை ஒழுங்காக்க வேண்டும். ஏனைய சுகாதார அளவீடுகளை அவதானிக்க வேண்டும்.

விபரிக்கப்பட்ட நாளாந்த கடமையும் உடல் உள ஆரோக்கிய மேம்பாடும் கட்டாயம் மிக இறுக்கமாக பின்பற்ற வேண்டும். பருவகால மாற்றத்தின் போது ஒவ்வொரு பருவகால மாற்ற அவதானங்கள் விவரிக்கப் படுகின்ற பருவகால மாற்ற முடிவில் படிப்படியான மாற்றம் கட்டாயம் இருக்கும். இவ்வாறு பொருத்தமான காலநிலை கட்டாயம் இசைவாக்கப்பட்டிருக்கும். பகல் நேரம் நித்திரை செய்வது தவிர்க்கப்பட வேண்டும். எல்லா காலநிலைகளிலும் மேற்குறிப்பிட்டவை கருத்தில் கொள்ளப்படும். போதுமான அளவு நித்திரை இரவில் செய்ய வேண்டும்.

உணவு எடுக்கும் போது சித்தர்களால் கூறப்பட்ட விதிமுறைகளாக பொருத்தமான நேரம், குறிப்பிட்ட காலம், குறிப்பிட்ட இடம், உடல் நிலையும் வகையும் என்பன. அந்த வகையில் முறைப்படி உணவு வகை எடுக்கப்பட வேண்டும் என அவதானித்தல். (மருத்தவரால் பரிந்துரைக்கப்பட்ட உணவுகள்) நோயாளி நோயினால் பீடிக்கப்பட்ட நேரத்தில் உணவுகள் கட்டாயம் எடுக்கப்பட வேண்டும். உணவின் கடைசி பெறுமதி தொற்றுக்குள்ளாகவில்லை. உணவின் பெறுமதி குறைந்திருப்பின் / தொற்று ஏற்பட்டிருப்பின் உணவு அலேஜிக் தாக்கம் கட்டாயம் வேண்டும். முறைப்படி சமைக்கப்பட்ட, பரிந்துரைசெய்யப்பட்ட உணவு மாத்திரம் எடுக்கப்பட்டது. சித்தர்கள் விவாதிப்பது முழு நிறையுணவு சம அளவில் சத்துக்கள் உள்ள உணவு.

## மருத்துவச் சிகிச்சை முறையின் தனி பண்புகள்

"உற்றவன் தீர்ப்பான் மரந்துறைச் செல்வானென்று
அப்பால் நாற்கூற்றே மருந்து"

நோயுற்றவன், நோய் தீர்க்கும் மருத்துவன், மருந்து, மருந்தை அங்கிருந்து கொடுப்பவன் என்ற நான்குவகைப் பாகுபாடுகளை உடையது மருத்துவம். இந்நான்கும் ஒத்திசைந்தால் மட்டும் உரிய முறையில் நோயை தீர்க்க முடியும்.

### 1. மருத்துவம்

மருத்துவமானது மணி, மந்திரம், அவிழ்தம் என்னும் அடிப்படையில் அமைந்தது. மணி என்பது சிவனிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் இறைசக்தியே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரம் என்பது மருத்துவனின் மனதிறம் ஆகும். மந்திரம் செபிக்க மனதிடம் அவசியம். செபம், தவம், தியானம் முதலியவற்றால் மனதை திடப்படுத்தல். மந்திரநீர் தெளித்தல், விபூதியிடல், பார்வை, மருத்துவ சோதிடம் எல்லாம் மந்திரத்துள் அடங்கும். மருத்துவ சோதிடம் என்பதுள் தூதன் குறி, சகுனம், பிணி தோன்றிய காலம், கோள்களின் நிலை, பிணி நாள், சிகிச்சை ஆரம்பிக்கும் காலம் கவனத்தில் கொள்ளப்படும்.

2. அவிழ்தம்

அவிழ்தம் என்பது ஆன்மாவை, உள்ளத்தை, உடலை பிணிக்கும் பிணிகளை அவிழ்ப்பது ஆகும். மூலிகை மருந்துகள் மக்களுறை என்றும் நீறு, செந்தூரம் முதலிய இரச மருந்துகள் தேவுறை என்றும் ஆசுர சிகிச்சைக்கு பாவிக்கப்படும் மருந்துகள் சூளுறை என்றும் அழைக்கப்பட்டன. நோயை மறுப்பது மருந்து எனப்பட்டது. நோயை மறுக்கும் செயற்பாடு மருத்துவம் ஆகும். மருத்துவம் நோக்கத்தைக் கொண்டு மூன்று வகைப்படும். அவையாவன காப்பு, நீக்கம், நிறைப்பு ஆகும்.

காப்புஎன்பது நோய் வராதிருக்க செய்யும் சிகிச்சை ஆகும். நீக்கம் என்பது வந்த நோயை நீக்குவது ஆகும். நிறைப்பு என்பது நோயினால் பாதிக்கப்பட்ட உடலை தேற்றவும், மந்த போசணையை போக்கவும், மகப் பேற்றில் இழந்த இரத்த சக்தியை நிறைவு செய்வதற்கும் செய்யப்படும் சிகிச்சை ஆகும்.

உதாரணமாக, நீரிழிவு நோயை குணமாக்கும் பானங்கள் / மருந்துவகைகளில் மூலிகை மருந்துகள் 3, தேவ மருந்துகள் 12, சூளுறை மருந்துகள் 21 என்பன ஆகும்.

## ஆயுர்வேத மருந்துகள், சிகிச்சை பிரிவுகள்

ஆயுர்வேத மருத்துவத்தில் மருந்துகள் மூலிகைகளை நொதித்தலுக்கு உள்ளாக்குவதன் மூலம் பின்வரும் மருந்துகள் உருவாக்கப்படுகின்றன. அவற்றின் பாகுபாடு வருமாறு: ஆசவம், அரிஸ்டம், குவாதம், குக்குலு, ஸ்வரசம், பாண்டம், குற்றம், கிரிமம், கல்க்கம், சூரணம், லேகியம், கிருதம், தைலம் முதலியன. உலோகம், இரசம் போன்றவற்றில் இருந்து மருந்து செய்வதற்கு ஆயுர்வேத மருத்துவம் அம்மருந்துகளுக்கு இசைவாக்கப்பட்டு மருந்து தயாரிக்க உள்வாங்கப்பட்டது. தெலுங்கு வைத்தியரான நாகா அர்சுணன் தமிழ் மருத்துவ முறைகளை படித்து சமஸ்கிருத மொழியில் 16ம் நூற்றாண்டில் மொழி பெயர்த்தார். சுயமாக ஆயுர்வேத மருத்துவமுறை அறிந்திருக்கவுமில்லை. பஸ்வம், செந்தூரம், சுண்ணம், கட்டு, கற்பம், முப்பு போன்ற உலோக மருந்து தயாரிப்புகளின் பயிற்சி இருக்கவில்லை. பின்னர் சித்த நாகார்சுனர்களின் அறிமுகம் காரணமாக மருந்துகளில் 6 பிரிவுகள் இரசாயன சிகிச்சை சேர்க்கப்பட்டு 7 பிரிவுகள் ஆக்கப்பட்டது. தொடர்ந்து வசீகர சிகிச்சை மிக குறுகிய காலத்தில் சேர்க்கப்பட்டது. பின்னர் கிரேக்க அரசனின் ஆட்சியில் வசீகர சிகிச்சை தனி சிகிச்சையாக சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது. புகழ்பூத்த ஆயுர்வேத சிகிச்சையரான சரக்க சுசுருதர் இரசாயன வசீகர சிகிச்சை தொடர்பாகவோ அதன் மருத்துவ பயன்பாடு தொடர்பாக குறிப்பிடவில்லை.

## தமிழ் மருத்துவ உடற் தத்துவங்களின் தனிச்சிறப்பு

96 உடற் தத்துவங்கள்

96 உடற் தத்துவங்கள் பற்றிய சிவஞான சித்தியார் பின்வருமாறு கூறுகிறது. 96 தத்துவங்கள் 2 வகையாக உள்ளன அவையாவன, அகத் தத்துவங்கள், புறத் தத்துவங்கள் என இரு வகைப்படும்.

### 1. அகத் தத்துவங்கள் வருமாறு

அறைதரு பூதமைந்து மடுத்த விந்திரியம் பத்தும்
நிறைதரு கரண நான்கு நிகழ் தன் மாத்திரைகளைந்தும்
உறைதரு வித்தையேழு முயர் சிவமைந்து மென்று
மறை பகர் முப்பத்தாறு மக மிளிப்புறம் வகுப்பாம்.

உட்கருவிகள் முப்பத்தாறு வகைப்படும் அவை யாவன, சிவ தத்துவம் 5, வித்தியா தத்துவம் 7, தன்மாத்திரைகள் 5, பூதம் 5, ஞானேந்திரியம் 5 கன்மேந்திரியம் 5, அந்தக்கரணம் 4

என மொத்தம் முப்பத்தாறு ஆகும்.

இவை 36 உட்கருவிகள் எனப்படும். இவற்றோடு பின்வரும் புறக் கருவிகள் அறுபதும் சேர்ந்து தத்துவங்கள் 96 ஆகும்.

### 2. புற தத்துவங்கள் வருமாறு

புறத்துறு கருவியைந்து பூதத்தின் கூறையைந்து
நிறத்துறு வாயு பத்து நிகழ்தரு நா பத்து
மறுத்தவின் குணங்கள் மூன்று வசனாதி ஐந்து நான்கு
திறத்துறு வாக்கு மூன்றா மேடணையறுப தோதும்.

பஞ்சபூதம் ஒவ்வொன்றின்; கூறு ஐந்தைந்தாக மொத்தம் 25. வாயுக்கள்- 10, நாடிகள்- 10, குணங்கள் – 03, வசனாதிகள் – 05, வாக்குகள் – 04, ஏடனை – 03 என மொத்தம் 60 ஆகும்.

வேறு சில நூல்களில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

உறுதியாம் பூதாதி யோரைந்தாகும்
உயர்கின்ற பொறியைந்து புலனைந்தாகும்
சுருதியாங் கன்ம விந்திரிய மைந்தும்
கடிதான ஞானவிந்திரியமைந்தும்
திறுதியாத் தீதாய கரணம் நான்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமான அறிவொன்றும் தசநாடி பத்தும்
மறுதியாம் வாயுவது பத்துமாகும்
மகத்தான விசயமஞ்சு கோசமஞ்சே.

அஞ்சவே ஆதாரம் ஆறுமாகும்
அரிய மண்டல மூன்று மல மூன்றாகும்
தொஞ்சவே தோடமூன்றிடனை தான் மூன்று
தோதகமாம் குணமூன்று வினை இரண்டாம்
தஞ்சவேராக மொட்டவத்தை யைந்து
தங்கியதோர் கருவிகள் தான் தொண்ணூற்றாறு
ஓங்கவே ஒவ்வொன்றாய் விரித்துச் சொல்வேன்
உறுதியாம் பூதாதியு ரைக்கக் கேளே.

பூதம் 5 – [மண், நீர், தீ, காற்று, ஆகாயம்]
பொறி 5 – [மெய், வாய, கண், மூக்கு, செவி]
புலன் 5 – [தொடுகை, சுவை, பார்வை, மணம், கேட்டல்]
கன்மேந்திரியம் 5 – [வாய், கால், கை, குதம், குறி]
கன்மேந்திரிய விடயம் 5 –[பேசுதல், நடத்தல், கொடுத்தல், மலம் விடுதல், மகிழ்தல்]
கரணம் 4 – [மனம், புத்தி, சித்தம், அகங்காரம்]
ஆன்மா 1 – [அறிவு]
நாடி 10 – [இடகலை, பிங்கலை, முதலிய பத்துமாம்]
வாயு 10 – [பிராணன், உதானன், வியானன், சமானன், அபானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன்]
ஆசயம் (விசயம்) 5 – [அமர்வாசயம், பகிர்வாசயம், சலவாசயம், மலவாசயம், சுக்கிலவாசயம்]
கோசம் 5 – [அன்னமயகோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம்]
ஆதாரம் 6 – [மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுக்தி, ஆக்கினை]
மண்டலம் 3 – [அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம்]
தோடம் 3 – [வாதம், பித்தம், கபம்]
மலம் 3 – [ஆணவம், கன்மம், மாயை]
ஈடனை 3 – [மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை]
குணம் 3 – [சாத்துவிகம், ராசதம், தாமதம்]
வினை 2 – [நல்வினை, தீவினை]
இராகம் 8 – [காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பை, வேகம்]
அவத்தை 5 – [சாக்கிரம் சொப்பனம் சுழுந்தி துரியம் துரியாதீதம்]
மொத்தம் 96 தத்துவங்கள் ஆகும்.

முத்தோடங்கள் 96 தத்துவங்களுள் அடக்கப்பட்டிருப்பது சித்த மருத்துவத்திற்குரிய சிறப்பாகும். அது மட்டுமின்றி இவற்றின் தோற்ற கிரமத்தைப் பொறுத்து வாதத்தை படைத்தலுக்கும் (இதன் தெய்வம் பிரம்மன்) பித்தத்தைக் காத்தலுக்கும் (இதன் தெய்வம் விஷ்ணு) கபத்தை அழித்தலுக்கும் (இதன் தெய்வம் உருத்திரன்) ஒப்பிடுகிறார்கள். இதனையே

"வாதமாய்ப் படைத்துப் பித்த வன்னியாய் காற்றுச் சேட்ப
சீதமாய்த் துடைத்துப் பாராந் தேகத்திற்குடியாமைந்து"

என்று தேரையர் மருந்துப் பாரதத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

மேலும் சித்த மருத்துவத்தில் ஒருவரின் ஆயுளின் ஆரம்பகாலத்தில் (1–33 வயது வரை) வாத காலம் என்றும், நடுப்பிராயத்தில் (34–66 வயது வரை) பித்த காலம் என்றும், இறுதி பிராயத்தில் (67–99 வயது வரை) கப காலம் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆயுர்வேத மருத்துவத்தில் இதற்கு எதிர்மாறாக முதலில் கப காலம் பிறகு பித்த காலம் இறுதியில் வாத காலம் என்று கூறப்பட்டுள்ளது. எனவேதான் சித்த மருத்துவத்தில் முக்குற்றங்களைப் பற்றிக் குறிப்பிடப்படும் போது வளிமுதலாய மூன்றும் என்று கூறப்படுகிறது.

"மிகினுங் குறையினும் நோய் செய்யும் நூலோர்
வளி முதலா எண்ணிய மூன்று"

என்று திருவள்ளுவரும் வளியையே முன்னிறுத்திக் கூறியுள்ளார். இங்ஙனம் வளியை முன்னிறுத்திக் கூறுவதற்குக் காரணம் என்னவெனில் தோற்ற கிரமத்தில் முதலில் சப்த தன் மாத்திரையும் அதிலிருந்து காயப் பரமாணுவும் பின் ஸ்பரிச தன் மாத்திரையும் அதிலிருந்து வளிப்பரமாணுவும் பின் ரூபதன் மாத்திரையும் அதிலிருந்து தீப்பரமாணுவும் பின் ரசதன் மாத்திரையும் அதிலிருந்து நீர்ப் பரமாணுவும் உண்டாகின்றனவல்லவா? என்பதை அறிய முடிகிறது. பஞ்ச பூத அம்சப்படி வளியில் (வாதம்) வளி காய பூதங்கள் அதிகமுண்டு. எனவே அது முதலில் உருவாகிறது. அழலில் (பித்தம்) தீ பூதம் (தீ +நீர் ) அதிகமுண்டு. எனவே அது அடுத்து உண்டாகிறது. ஐயத்தில் (கபம்) நீர் + நில பூதங்களுண்டு. எனவே இறுதியில் உண்டாகிறது.

## சித்த மருத்துவத்துக்கும் ஆயுர்வேத மருத்துவத்துக்கும் உள்ள வேறுபாடு

- ◇ சித்த மருத்துவமானது முழுமுதற்கடவுளான சிவனிடமிருந்து வந்ததால் சிவ சம்பிரதாயமுடையது என்று வழங்கப்பெறுகிறது. ஆனால் ஆயுர்வேத மருத்துவம் பிரம்மனிடமிருந்து தோன்றியதால் பிரம்ம சம்பிரதாய முடையது எனப்படுகிறது.
- ◇ சித்த மருத்துவமானது ஆறு தரிசனங்களை பொதுவாகவும் சைவ சித்தாந்த தத்துவத்தைச் சிறப்பாகவும் கொண்டு உருவானது. ஆனால் ஆயுர்வேத மருத்துவ மானது ஆறு தரிசனங்களையே அடிப்படையாகக் கொண்டது. மேலும் சித்த மருத்துவமானது தொண் ணூற்றாறு தத்துவங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண் டது. ஆயுர்வேத மருத்துவம் இருபத்து நான்கு (ஆத்மாவையும் சேர்த்தால் இருபத்தைந்து) தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டது.

- ◇ சித்த மருத்துவம் தமிழர் வாழ்வை அடிப்படையாகக் கொண்டது. ஆயுர்வேதம் அதர்வ வேதத்தின் ஒரு பகுதியாக உபவேதமாகக் கருதப்படும்.
- ◇ சித்த மருத்துவத்தில் முக்குற்றங்கள் வாதத்தை முன்னிறுத்தி வளி, அழல், ஐயம் என்று கூறப்படும். "வாதம் வைகறையிற் தோன்றும் மத்தியானத்திற் பித்தம் சீதமார் மாலை தன்னிற் சேடமே பிரவேசிக்கும்." என்கிறது. இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம். ஆனால் ஆயுர்வேத மருத்துவத்தில் வாத, பித்த கபம் என்று பேசப்பட்டாலும் கபமே முன்னிறுத்தப்படுகிறது. ஆயுள், உணவு, நாள் முதலியவற்றில் கபமே முதலில் பலம் பெறுவதாக ஆயுர்வேதம் கூறுகிறது. மேலும் உயிர்த் தாதுக்கள் மூன்றும் தொண்ணூற்றாறு தத்துவங்களுக்குள் அடக்கப்பட்ட விறப்பும் சித்த மருத்துவத்திற்கேயுரிய தனிச் சிறப்பு. புராதன ஆயுர்வேத நூல்களில் நாடி பற்றி எதுவும் கூறப்படவில்லை.
- ◇ ஏழு உடற்கட்டுக்களை (சப்த தாதுக்கள்) பொறுத்த வரையில் ஆயுர்வேத மருத்துவத்தில் இரச தாது, இரத்த தாது, மாமிச தாது, மேதஸ் தாது, அஸ்தி தாது, மஜ்ஜை தாது, சுக்கில தாது, அல்லது சுரோனித்தாது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் சித்த மருத்துவத்தில் சாரம், செந்நீர், ஊன், கொழுப்பு, என்பு, மூளை, வெண்ணீர் அல்லது சுரோணிகம் என்று கூறப்பட்டுள்ளது. இவற்றுள் சாரம் என்பது இரசத்தை அதாவது இரசதாதுவைக் குறிப்பதாக இருந்தாலும் செவ்வணுக்கள் தவிர்ந்த குருதியையே இரசதாது என்று ஆயுர்வேதநூலில் கூறுவர். ஆனால் சித்த மருத்துவம் அன்னரசத்திலிருந்து உண்டாகும் சாரத்தையே முக்கியமாகக் குறிப்பிடுகிறது. எனவே உடலில் உள்ளதிரவ அம்சங்கள் (body fluids) அனைத்தையும் சாரம் என்பது குறிப்பாக கருதலாம். இச் சாரம் உட்கொள்ளும் உணவில் இருந்து உண்டாகிறது.

"அருந்திய வன்ன மவை மூன்று கூறலாம்
பொருந்து முடன் மனம் போமல மௌனத்
திருந்து முடன் மனமாங்கூறு சேர்ந்திட்டு
இருந்தன முன்னாள் இரதம தாகுமே."- திருமந்திரம்

இரச தாது என்பது குருதியிலுள்ள செவ் வணுக்களைக் குறிப்பதாகவே ஆயுர்வேதநூல்கள் கூறும். ஆனால் சித்த மருத்துவத்தில் செந்நீர் என்ற சொல் குருதியை முழுமையாகக் குறிப்பிடுகிறது. அதாவது செவ் வணுக்கள், வெண் அணுக்கள், குருதச்சிறுதட்டுக்கள், அன்னரசம், உடல் தாதுரசம், உப்புக்கள் முதலி யவற்றைக் கொண்டதே சித்த மருத்துவம் கூறும் செந்நீராகும். இதனையே ஔவை குறளில் உதிரம் என்று கூறப்பட்டுள்ளது.

- ◇ மேலும் ஆயுர்வேத மருத்துவத்தில் என்பும் அதனுள் இருக்கும் மச்சையும் (born marrow) தனித்தனி தாதுக்களாகக் கூறப்பட்டுள்ளன. சித்த மருத்துவம் இவ்விரண்டையும் ஒன்றாகக் கருதி என்புத்தாது என்று குறிப்பிடுகிறது. மஜ்ஜை தாதுவுக்குப் பதிலாக சித்த மருத்துவம் மூளை என்பதைக் குறிப்பிடுகிறது. சிலர் மஜ்ஜையும் மூளையும் ஒன்றே என்று கூறுவார். ஆனால் இவை இரண்டும் ஒன்றல்ல. மூளை என்பது நரம்புத் தாதுவைக் குறிக்கும். மூளைத்தாது என்பினுள் அமைந்துள்ளது என்று கூறப்படுவதாலேயே இத் தகைய குழப்பம் பலருக்கு ஏற்படுகிறது. என்பின் ஒரு பகுதியான மஜ்ஜைக்கும் . என்பினுள் அமைந் துள்ள மூளைக்கும் வித்தியாசம் உண்டு. என்பினுள் என்று சொல்லும் போது கபால என்புக்குள் அமைந் துள்ள மூளையையும், முள்ளத்தண்டு என்புக் கால் வாயுள் (spinal canal) அமைந்துள்ள மூளையின் பகுதியையும் (spinal cord) அவற்றிலிருந்து தோன்று கின்ற நரம்புகளையுமே கருத்தில் கொள்ள வேண்டும்;.

ஔவை குறளில் ஏழு உடற் கட்டுக்களின் பெயர் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

"தொக்கு திரத் தோடூன் மூளை நிணமென்பு
சுக்கிலந் தாது களேழு"

அதாவது தொக்கு (தோல்), உதிரம், ஊன், மூளை, நிணம், (கொழுப்பு) என்பு சுக்கிலம் எனத் தாதுக்கள் ஏழாம். இன்றைய விஞ்ஞானத்தோடு இவ்வுடற் கட்டுக் கள், ஓரளவுக்கு ஒத்து வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.

நவீன மருத்துவத்துடன் ஏழு உடற் கட்டுக்களையும் பின்வருமாறு தொடர்பு படுத்தலாம்.

1. சாரம் - Body fluid
   இதற்கு பதில் தொக்கு எனின் skin and connective issue (சாரம்,தொக்கு) இவற்றில் எதைக் கொள்வது என்பது ஆராயத்தக்கது.
2. செந்நீர் - Cardiovascular system
3. ஊன் - Muscular system
4. கொழுப்பு - connective tissues
5. என்பு - skeletal system
6. மூளை - Nervous system
7. சுக்கில/சுரோனிதம் - Reproductive system

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு - அமர்வாசயம், பகிர்வாசயம், மலஆசயம் முதலியன Digestive system எனவும் பிரமாணமய கோசம் Repertory system எனவும் சலஆசம் Renal system எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமை நோக்குதற் குரியது.

◇ மேலும் சோதிடம், அட்டாங்கயோகம், அட்டமாசித்தி முதலியவற்றையும் மருத்துவத்துடன் இணைத்துக் கூறப்பட்டுள்ள சிறப்பையும் சித்த மருத்துவத்தில் காணக்கூடியதாக உள்ளது.

◇ பற்பங்கள், செந்தூரங்கள், கட்டு, களங்கு, முப்பு போன்ற உயர்தர தேவ வைத்திய மருந்துகள் சித்த மருத்தவத்தில் சிறப்பாக கொள்ளப்படுவதும் குறிப்பிடத் தக்கது.

◇ வடமொழி உத்தர தந்திரம் என்னும் நூலின் முகவுரையில் காய சிகிச்சை முறையும் பொதுவான நோய்களைக் குறித்த விடயங்களையும் சித்த நூல் களிலிருந்து திரட்டி எழுதியதாக கூறப்பட்டிருப்பதும் ஆராயத்தக்கது.

"மறுப்பது உடல் நோய் மருந்தெனலாகும்
மறுப்பது உளநோய் மருந்தெனல் சாலும்
மறுப்பது இனி நோய்வராதிக்க
மறுப்பது சாவை மருந்தெனலாம்." - திருமூலர் 8000

அதாவது சா/மரணம் வராமல் தடுப்பதே மருந்து/ மருத்துவம். மரணம் வராமல் தடுத்தல் என்னும் போது இடையில் ஏற்படும் மரணமா? அல்லது ஆயுள் முடியும் போது ஏற்படும் மரணமா? என்று வேறுபாடு உண்டு. சித்த மருத்துவப் படி ஒருவரின் புரண ஆயுட் காலம் நூறு ஆண்டுகளாகும். இரண்டு விதமாக ஏற்படும் மரணத்தை தடுப்பது என்றே பொருள் கொள்ள வேண்டும். ஏனெனில் சித்தர்களின் முக்கிய குறிக்கோள் இப் பிரபஞ்சம் அழியும் பிரளயகாலம் வரை (கல்ப காலம்) இவ்வுடலுடனே [அன்னமய கோசத்தாலான உடல் என்று கருதுவதிலும் பார்க்க சூட்சமமான உடல் என்று கருதுவதே பொருந்தும்] ஈசனுக்கு இணையாக வாழ்தல் வேண்டும் என்பதாம். அவ்விதம் கற்ப காலமளவும் காயமாகிய இவ்வுடலை அழியாது பாது காப்பதற்காகவே காயகற்ப மருத்துவமுறைச் சித்தர்கள் கூறிவைத்துள்ளனர். இவை ஒவ்வொன்றும் ஆன்மாவின் முத்தியை முக்கிய குறிக்கோளாக கொண்டவை. இவ்வுயரிய நிலையை நோக்கியே சித்த மருத்துவம் மக்களை நெறிப்படுத்துகிறது.

## காயகற்பம்

காயம் - உடம்பு, கற்பம் - அழியாமை, காயகற்பம் என்று கூறும் போது உடம்பு அழியாமல் இருப்பதற்காகக் கையாளும் முறைகளைக் குறிக்கும். இவை மூலிகைகள், தாதுப்பொருட்கள், உயிரினப்பொருட்கள் போன்றவற்றை நாள்தோறும் உபயோகிப்பதாலும், இயம நியமங்களைக் கடைபிடிப்பதாலும், யோகப் பயிற்சியாலும் உடம்பின் அழிவை தடுக்கலாம். அதாவது நீண்ட ஆயுளை ஏற்படுத்தலாம்.

மேற்குறிப்பிட்ட மூலிகைகள், தாதுப்பொருட்கள், உயிரினப்பொருட்கள் ஆகியவற்றை எக்காலத்திலும் எடுத்துக் கொள்ளலாம். காயகற்பம் பெரும்பாலும் மூலிகைப் பொருட்களால் ஆனவை. எடுத்துக்காட்டாக தேனூறல், பிட்டு, கற்கம், குடிநீர், வற்றல் என்ற 32 வகையான அகமருந்தில் உள்ள சில வகைக் கற்ப மருந்துகளாகும். இவை தவிர மருந்துகளாக தயாரித்து நாள்தோறும் உண்பதனையும் கற்ப மருந்துகளில் வரும். இதனை பண்டைய வைத்தியர்கள் நடை மருந்து என்றும் கூறுவர். உதாரணமாக அயக்குழம்பு, அயபிருங்கராஜ கற்பம், பூரண சந்திரோதயம் என்பவற்றை குறிப்பிடலாம். கற்பங்கள் உள் மருந்தாக மட்டுமன்றி வெளிப்பூச்சு, முழுக்கு முதலிய வெளியாட்சியாகவும் பயன்படுத்துவதுண்டு. இந்த காயகற்ப மருத்துமானது சித்த மருத்துவத்தின் தனிப் பண்பு ஆகும்.

ஆயுள் என்றால் உயிர். வேதம் என்றால் அறிதல் என்ற கருத்தினடிப்படையில் சித்தர்கள் தமது மருத்துவத்தை ஆயுர்வேதம் என்று கூறியுள்ளனர். அதற்காக வடமொழி ஆயுர்வேத மருத்துவத்தையும் சித்தர் கூறிய தென்மொழி ஆயுர்வேத மருத்துவத்தையும் ஒன்றுதான் என்று எண்ணிக் குழம்பத் தேவையில்லை. இரண்டும் வெவ்வேறு வைத்திய முறைகள் ஆகும். இங்கு ஆயுர்வேதம் என்ற வார்த்தைப் பிரயோகம் பொதுப் பெயராகவே பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனத்திற் கொள்ளவும். ஏனெனில் சித்தர்கள் கூறும் ஆயுள்வேதம் சிவசம்பிரதாயமுடைய மருத்துவ முறை யாகும். இதனைப் பரராசசேகரம் முதல் பல்வேறு மருத்துவ நூல்களில் நாம் கண்டறியக் கூடியதாக உள்ளது.

## சித்த மருத்துவம்

சித்த மருத்துவத்தின் முதற்கால பெயர் சித்தாயுள் வேதமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் உயிரைப் பற்றி அறிதல் அதாவது ஆத்ம ஞானம் பெறுதல் என்பதே சித்த மருத்துவக் குறிக்கோள். தற்காலத்தில் அவ்வுண்மையை விளங்காதோர் சித்த ஆயுள்வேதம் என்பது தமிழ்மொழி சித்த மருத்துவத்தையும் வடமொழி ஆயுள்வேதத்தையும் சேர்த்துக் குறிப்பிடும் ஒரு பொதுப் பெயராக கருதுகின்றனர். இப்பொருள் மயக்கத்தை தவிர்ப்பதற்காக பரராசசேகரம் அங்காதி பாதத்தில் சித்த வேதம் என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பது நோக்குதற்குரியது.

தற்காலத்தில் சித்த மருத்துவம் என்ற பெயர் தமிழ் மருத்துவத்திற்குரியதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே சித்த மருத்துவ நூல்களில் ஆயுள்வேதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல் இடம்பெற்று இருப்பதை மட்டும் கருதி சித்த மருத்துவ நூல்கள் வடமொழி ஆயுள்வேதத்தின் தழுவல் என பிழையான முடிவுக்கு வரக்கூடாது. சித்த மருத்துவமானது வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என்னும் நான்கு பகுதிகளை உள்ளடக்கிய ஒரு விசாலமான பரப்புடைய மருத்துமாகும். இவற்றுள் வாதம், வைத்தியம் இரண்டையும் ஏம வைத்தியம் என்றும் யோகம், ஞானம் இரண்டையும் பிரம்ம வைத்தியம் என்றும் அழைப்பர்.

## இரச வாதம் 1 – Alchemy

வாதம் என்பது இரச வாதம் என்பதைக் குறிக்கும். உலோகங்கள் குறிப்பாக இரும்பைப் பொன்னாக்குவதுதான் இரச வாதம் என்று கருதுவோர் பலர். ஆனால் சித்தர் இரசாயனமாகும். ((siddhers chemisty) தற்கால இரசாயன நூல்கள், மூலகங்கள், சேர்வைகள், உலோகங்கள் முதலியன எவ்விதம் ஒன்றிலிருந்து ஒன்று உருவாகின்றன. அவை பிரியும் போது ஆரம்ப மூலகங்கள் எவ்விதம் உண்டாகின்றன என்பது போன்ற இரசாயனச் சேர்க்கை, இரசாயனப் பிரிகை முதலிய பல விடயங்களை விளக்குவதுடன் அவற்றின் இறுதி வடிவமான அணுக்களைப் பற்றியும் விளக்குகின்றது. அது போலவே சித்த இரசாயனம் என்று கூறப்படும் வாதத்திலும் தாதுப் பொருட்கள் பஞ்சபூத அம்சப்படி சேர்தல், பிரிதல் முதலியன விளக்கப் பெறுகின்றன. இதனை வாத வைத்தியம் என்றும் கூறுவர். இரச வாதம் பற்றித் தெளிவாக அறிந்து கொண்டால்தான் ஒருவன் வைத்தியனாக முடியும் என்பது சித்தர் கூற்று. "வாதி மகன் வைத்தியன்" என்ற பழமொழியும் அதனையே உணர்த்துகிறது.

## வைத்தியம்

இது பிணிகளைக் கண்டறிதல், அதற்கான சிகிச்சை முறைகள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளது.


யோகமானது அட்டாங்க யோகம் முதலிய யோகப் பயிற்சிகளைக் குறிப்பிடுகிறது. ஒரு வைத்தியன் இம் முறைகளால் தன்னை மேம்படுத்தி உயர்நிலைக்கு வந்தால்தான் இவ்வுலகை – பிரபஞ்சத்தைப் பற்றித் தெளிவாக அறிய முடியும். அவ்விதம் அறிந்தால்தான் தன்னைச் சுற்றியுள்ளோரில் உள்ள குறைபாடுகளைச் சரிவர அறிந்து அவற்றுக்குச் சரியான முறையில் சிகிச்சையளிக்க முடியும். அவர்களையும் ஆன்மீக நிலையில் மேலுயர்த்த முடியும்.

## ஞானம்

ஞானம் என்றால் அறிவு. உண்மைப் பொருளைப் பற்றிய அறிவு. உண்மைப்பொருள் என்றால் தத்துவம் அதாவது தத்துவ ஞானம் என்று கூறலாம். எவ்வுண்மை பற்றிய அறிவு என்றால் பிரபஞ்சம் பற்றி அறிவு. மனிதனாகிய நாம் இதன் ஒரு பகுதி என்பதால் பிரபஞ்சம் பற்றி அறிய வேண்டும். மனிதராகிய நாம் இப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகிய பூமியில் வாழ்கிறோம். எனவே நாமும் இப் பிரபஞ்சத்தின் ஓர் அங்கம். பிரபஞ்சத்தில் உள்ளவை யாவும் மனித உடலில் ஏதொ ஒரு வகையில் இடம் பெற்றுள்ளன. ஆதிக்கம் செலுத்துகின்றன. எனவேதான் பிரபஞ்சத்தை பேரண்டமாகவும் மனிதனை அதன் சிற்றுருவமாகவும் கருதுவர். எனவே பிரபஞ்சத்தை தெளிவாக விளங்கிக் கொள்வது மனிதனை மனிதனின் உடல் தத்துவத்தை விளங்கிக் கொள்ள உதவும்.

இன்றைய விஞ்ஞானம் தசை, எலும்பு, நரம்பு, இரத்தம் முதலியவற்றிலான பௌதீக உடம்பு (physical body) பற்றியே தனது ஆராய்ச்சிகளை முன்னெடுத்து வெற்றி கண்டுள்ளது. ஆனால் சித்தர்களோ தத்துவங் களால் ஆக்கப்பட்ட அகவுடம்பு (spiritual body) பற்றி நுட்பமாக ஆராய்ந்தறிந்து கூறியுள்ளார்கள். ஆத்மாவின் வீடு பேறு அல்லது முத்திக்கு உதவும் சாதனமாகவே புற உடம்பை அவர்கள் கருதினர்.

தமிழ் மருத்துவமானது மருந்துகள், சிகிச்சை முறைகள், சிகிச்சை பிரிவுகள், உடற்தத்துவங்கள், இரச வாதம், காயகற்பம், ஞானம், யோகம் என இன்னோரன்ன தனிச்சிறப்புக்களுடன் விளங்குகிறது. எல்லா மருத்துவத் திற்கும் தாய் மருத்துவமாக உள்ளமை தமிழ் மருத்துவத் தின் தனிச்சிறப்பே என பெருமையுடன் கூற முடியும். எனவே தனிச்சிறப்புகளை பெருமையுடன் உலகளாவிய ரீதியில் விளங்க வைக்க நாம் எல்லோரும் அயராது உழைப்போமாக. இதனால் சர்வதேச மயப்படுத்துவதன் மூலம் தமிழ் மருத்துவத்தின் பெருமையை உலகறிய செய்ய முடியும். ❐




*ஒரு சின்னக் கதை*

*வைரமுத்து. திவ்வியராஜன் (திவ்வியன்)*

*விலை:*

*வெளியீடு : காலாலயம் பதிப்பகம் இணைந்து ஜீவந்தி வெளியீட்டகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூல் அறிமுகம்

# ஆதிலட்சுமி சிவகுமார் அவர்களின் "பொன்வண்டு" சிறுகதைத் தொகுப்பு

பூரணி பரராஜசிங்கம்

பொன்வண்டு சிறுகதைத் தொகுப்பினை எழுதிய நூலாசிரியர் இணுவில் ஊரைச் சேர்ந்தவர். மண்ணின் சிறந்த இலக்கியப் படைப்பாளி, மூத்த பெண் எழுத்தாளர், புகழ்பூத்த தமிழ் ஆசிரியர், பேச்சாளர் பண்டிதர் இராசையா அவர்களின் புதல்வியாவார். இவரது எழுத்துப் பணிக்கு ஆரம்பத்தில் தந்தையாரும் பின்பு கணவரும் வழங்கிய ஒத்துழைப்புக்கள் சிறப்பாக அமைந்தன. தந்தை, சகோதரன், இவர் என இவரது குடும்பத்தில் இலக்கியப் பணி நிறைந்து காணப்படுகின்றது. இவர் நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் 1982ல் எழுத்துலகில் பிரவேசித்தார். மூன்று தசாப்தங்களுக்கு முன்னராக 1990ல் இருந்து அவ்வப்போது இவரது படைப்புக்கள் நூல் வடிவம் பெற்று வருகின்றன. முதலாவதாக 1990ல் 'புயலை எதிர்க்கும் பூக்கள்' சிறுகதைத் தொகுப்பும் இரண்டாவதாக 2000ல் 'என் கவிதை' கவிதைத் தொகுப்பும் மூன்றாவதாக 2006ல் 'மனிதர்கள்' சிறுகதைத் தொகுப்பும் நான்காவதாக 2018ல் 'புள்ளிகள் கரைந்த பொழுது' நாவலும் ஐந்தாவதாக 2022ல் 'பொன்வண்டு' சிறுகதைத் தொகுப்பும் என இதுவரை ஐந்து நூல்கள் வெளியாகி உள்ளன. ஆரம்பத்தில் சமூக அடக்குமுறைகள், பெண் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எழுதி வந்தார். 1980களின் முற்பகுதியில் (யுத்தம் முனைப்புப் பெற்ற காலத்தில்) இருந்து போரழிவுகள், இன நெருக்கடிகள் பற்றியும் எழுதி வருகிறார். அத்துடன் சார்ந்த பாடல்கள், பட்டிமன்றங்கள், கவியரங்குகள் என இவரது பங்களிப்பு நீண்டது. தேசத்தின் மிகுந்த ஒழுங்கு கட்டுப்பாடுகள் நிறைந்த புகழ்பெற்ற ஊடக நிறுவனம் ஒன்றில் நிகழ்ச்சித்திட்ட மதிப்பீட்டாளராக / கட்டுப்பாட்டாளராக 17 ஆண்டுகளுக்கு மேலாகப் பணிபுரிந்தவர். இதற்கான அதியுயர் சிறப்பு விருதினையும் பெற்றார். இவர் பாரதியின் கவிதைகளை ஆழமாக நேசிப்பதால் "கண்ணம்மா" என்ற புனை பெயரையும் வரித்துக் கொண்டார். தற்போது சுவிற்சலாந்து தேசத்தில் வாழ்ந்துவரும் இவர் எழுதிக் கொண்டே இருக்கின்றார். போரின் நேரடிச் சாட்சிகளில் ஒருவரான இவர் படைத்த "புள்ளிகள் கரைந்த பொழுது" என்ற நாவல் யுத்த வாடை நிறைந்தது. மிகுந்த வலியுடையது. இது இங்கும் பல ஐரோப்பிய தேசங்களிலும் வெளியிடப்பட்டு பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இனி பொன்வண்டு சிறுகதைத் தொகுப்பு பற்றி.....

❀ முதியோர் நிலமை கூறும் 'மீன் தொட்டி மனிதர்கள்' வாழும் காலத்தில் பணியில் மூழ்கி ஓய்வுக் காலத்தில் மனதை அழுத்தும் துன்பத்துக்குள் ஆழ்ந்துவிடும் இன்றைய மூதாளர்கள் பலரின் கதையாக உள்ளது. (அண்மையில் 'தொட்டி மீன்கள்' என்ற குறும்படக் கதைக்கரு ஒன்று சமூக வலைத்தளம் ஒன்றில் பார்வைக்கு வந்திருந்தது. அதில் சிறுவர்களின் உளநிலை ஒடுக்கப்படுவது கருத்தாக இருந்தது. 'கொரோனா' காலத்தில் இது அதிகம். முதியோர் சிறுவர் சார்ந்த விடயங்களில் அதிக அக்கறை கொண்ட ஐ.நா. மனித உரிமைகள் நிறுவனம் இவர்களின் உளப்பாங்கைக் கருத்தில் கொண்டு ஒரே தினத்தில் இவர்களைக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. இங்கும் தலைப்புக்கள் இருவகையினருக்கும் சிறப்பாகப் பொருந்தியுள்ளது.)

❀ 'நிறம் மாறும் உறவுகள்' என்ற கதை அடிக்கடி தம்மை உருமாற்றி சமூகத்தில் விதம் விதமாய்க் காட்டும் மனிதர்களைப் பற்றி கூறுகின்றது.

❀ வெளிநாட்டில் குடும்பத்திற்காக தன்னை வருத்தி உழைக்கும் உணர்வுடைய இளைஞனின் கதையாக 'அகதியானவன்' உள்ளது. இதே போன்று அவர்களின் வலிகள் பற்றி 'முகாமில் இருப்பவன்' கதையும் சொல்லி நிற்கின்றது.

❀ பேதைத் தாயின் நெஞ்சுணர்வில் ஆழமாக பாசப் பதிவை ஏற்படுத்தும் பொறுப்புள்ள மகளின் கதையாக 'ஈன்ற பொழுதிலும்' உள்ளது.

❀ 'செருப்புக்காரி' என்னும் கதை வெளிநாட்டில் வாழ்ந்தாலும் தாய் நாட்டின் பழைய நினைவுகளை கிளர்த்தி நிற்கின்றது.

❀ மீன்தொட்டி மனிதர்கள் கதை போன்றே 'நத்தையாய் நகர்தல்..' என்னும் சிறுகதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயோதிபர்கள் வாழும் காலத்தில் முகம் கொடுக்கும் சில பிரச்சினைகளை சித்தரிக்கின்றது.

❀ வெளிநாட்டில் பெண்ணொருவர் பம்பரமாகச் சுழன்று கடமைகளைச் செய்யும்போது உண்டாகும் அழுத்தங்கள் பற்றிய கதையாக 'முள்முடி தரித்த மாதாக்கள்' அமைந்துள்ளது.

❀ வெளிநாடுகளில் விசா பெற கஸ்ரப்பட்டு வெய்யில்- குளிர் பாராது, பசி ஒறுத்து உழைத்து அனுப்பும் ஒருவரின் பணம், அதன் வரவின் வழி தெரியாது, அவர்களின் வலியினைப் புரியாது இங்குள்ள உறவுகள் அள்ளிச் செலவழித்துக் கொண்டாடுவதை குறிக்கும் 'காசு, பணம், துட்டு' மற்றும் 'வெளிநாட்டுக்காரன்' கதைகள் இன்றைய யதார்த்தத்தைக் கூறுகின்றன.

இவைகள் புலம் பெயர்ந்தவர்களைக் கதை மாந்தர்களாகக் கொண்ட சிறுகதைகள் ஆகும்.

❀ பிள்ளைகளுக்காக தன்னை உருக்கி வாழ்ந்த தாயின் நிலை கூறும் 'அம்மாவின் மரணம்' கதை வெளிநாட்டில் வாழும் பிள்ளைகளை நினைத்து ஏங்கும் பல அன்னையரின் நிலையைக் கூறுகின்றது.

❀ யுத்தம் தாண்டவம் ஆடிய சில பிரதேசங்களில் நடைபெற்ற சிலரின் கள்ளத்தனங்களை கூறுகின்றது 'சின்னத் தாயி' என்ற கதை.

❀ புரிந்து கொள்ளமுடியாத புதல்வனை நெஞ்சில் சுமக்கும் அக அழுத்தத்துடன் கூடிய அன்னை ஒருவரின் கதையாக 'புத்தகப் பூச்சியின் தாய்' உள்ளது.

❀ காணாமல் போனவர்களின் நினைவை மீட்டுகிறது 'பொன்வண்டு' கதை. அத்தகைய தாய் ஒருவரின் வலி கூறும் இக்கதையே தொகுப்பின் தலைப்பாக அமைந்தது சிறப்பு.

❀ பிள்ளைகளின் கஸ்ரத்தின் முன்னால் பெற்றவர்களின் இறுக்கம் உடைந்துவிடும் என்பதைக் காட்டுகிறது 'கோவக்காரி' கதை.

❀ பிள்ளைகளின் வளர்ச்சியில் ஏற்படும் சில மாற்றங்களானது அவர்களே உலகம் என ஏங்கி எதிர்பார்க்கும் பெற்றோரை சிலசமயங்களில் வருந்தச் செய்து விடுகிறது என்பதனை 'தாய்' கதை சுட்டுகிறது.

❀ யுத்த காலத்தின் சில நிதர்சனமான பக்கங்களை ஒரு முகமூடி அணிவு மூலம் வெளிப்படுத்துகின்றது 'மனோரஞ்சிதம்' கதை.

❀ போர் பலரை ஊமைக் காயங்களை ஏற்க வைத்துள்ளதை எடுத்துக் கூறும் கதையாக 'காலத்தைச் சுமப்பவள்' அமைந்துள்ளது.

❀ மண்ணையும் மக்களையும் நேசித்தவர்கள், அளப்பரிய தியாகங்கள் செய்தவர்கள் மக்களின் பொது உறவு என கோடிட்டுக் கூறுகின்றது 'உறவு' கதை.

❀ பல்நோக்குப் பணிபுரியும் பரந்த செயற்பாடுகள் கொண்ட பெண்களின் பொறுப்புப் பற்றி கூறுகிறது 'மனைவி எனும் பெண்' கதை

❀ யுத்த மண்ணின் சாட்சிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் பலருள்; ஒருவரின் வலிகூறும் கதையாக 'காலத்தின் சாட்சிகள்' பதியப்பட்டுள்ளது.

❀ சீரிய வாழ்வில் அடக்கமான ஈதல் என்பது அவர் சார்ந்தவர்களையும் உள்ளார்ந்து உயர்த்தும் எனும் கருத்துடையது 'கொடை' எனும் கதை.

❀ இடப்பெயர்வு வாழ்வில் ஆதரிப்பாளர் ஒருவரின் சிறந்த நடவடிக்கை பற்றி கூறுகிறது 'வேனிற்காலப் பறவைகளும் ஒரு விருட்சமும்' கதை.

❀ முன்னைய கால பழக்கவழக்கங்களுடன், கட்டுக்கோப்பான ஒரு தாயின் வாழ்க்கை யைச் சித்தரிப்பதுடன் இவரது ஒரு சொத்துப் பிரிப்பில் பிள்ளைகளின் மனநிலை எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை கூறுகின்றது 'ஆச்சியின் வீடு' கதை.

❀ போர்க் காலத்திலும் பின்புமாக காலத்திற்கு காலம் மாறும் சிலரின் 'நாணல் தன்மையினைக் காட்டுகின்றது 'மாற்றங்கள்'- சிறுகதை.

❀ காணாமல் ஆக்கப்பட்ட தகப்பனை நினைந்து வருந்தும் ஒரு சிறுவனின் உள்ளம் பற்றிக் கூறுகின்றது 'கடல் மனம்' சிறுகதை.

❀ விடுவிக்கப்படாத பிரதேசத்தில் வீடு இருந்தும் வாடகை வீடு தேடும் ஒருவருக்கு கிடைக்கும் வினாக்களின் வடிவமாக அமைந்துள்ளது 'வாடகை வீடு' கதை.

❀ மூன்று தசாப்தங்களுக்கு முன்பு எழுதிய வெளிநாடுகளுக்கு திருமணப் பெண்களை அனுப்புவது பற்றிய 'விட்டில்கள்' கதை இன்றும் பொருந்தியே உள்ளது.

❀ இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு எழுதிய 'தாய் மனம்' கதை அன்றைய இருள் சூழ்ந்த காலத்தை நினைவூட்டுகின்றது.

❀ சிறந்த இலட்சியங்களே உயர்ந்த விருதுக்கு வழிகோலும். ஒருவர் இருக்கும்போது மதிப்புடைய அவரது செயல்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்பது பற்றி 'விருது' கதை கூறுகின்றது.

இந்தக் கதைகள் மண்சார்ந்த நிகழ்வுகளையும் அவலங்களையும், நிலவரங்களையும் உணர்த்தியவை களாக அமைந்துள்ளன. கதைகளுக்குள் சென்று பார்க்கும்போது மேலும் அதன் கனதிகள் தெளிவாகும். ❒

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம் மலையகம் 200 சிறப்பிதழை முன்னிறுத்தி...

சு. முரளிதரன்

மலையக மக்களின் 20 தசாப்த வருட வரலாற்றில் தாயகம் சஞ்சிகை 4 தசாப்தங்களாக அம்மக்கள் மீதான தார்மீக அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் பயணித் திருக்கின்றது என்பதை எவ்வித தயக்கமுமின்றி கூறலாம். அந்த பயணத்தில் இன்று மலையகம் குறித்த பூரண பதிவுகளோடு ஒரு சிறப்பிதழை வெளிக் கொணர்வதற்கு தேசிய கலை இலக்கிய பேரவைக்கு பூரண தகுதி இருக்கின்றது என்பதை விட உரிமையும் கடமையும் இருக்கின்றது என்றே கருத வேண்டியிருக் கின்றது. அந்த கடமையை காத்திரமாக செய்த தேசிய கலை இலக்கிய பேரவையின் செயற்பாட்டுக்கு முதற்கண் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த இருநூறு ஆண்டு பயணத்தில் வேதனைகளுக்கு மத்தியில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளும் பதிவாக வேண்டும் என்பது என்னுடைய கருத்தாகும். அதுவே எதிர்கால நம் தலைமுறைக்கு படிப்பினையை ஊட்டுவ தாக இருக்கும். என்றாலும் பட்ட வேதனைகளை அவ்விதமாகவே பதிவு செய்ய வேண்டியதும் காலத்துக் கேற்ற கடமையாகும். அந்த கடமையை செய்வதற்கான தகுதிப்பாடு கலை இலக்கியவாதிகளுக்கும் பதிப்பாளர் களுக்குமே உள்ளது. அந்த கடமையை சரிவர செய்பவர்கள் மலையக வரலாற்றெழுதியலுக்கு பங்களித்த அர்ப்பணிப்பாளர்களாக அடையாளம் பெறுவார்கள். பதிவுகள் சிறிதாக இருந்தாலும் கூட அது உணர்வும் உண்மையும் கலந்ததாக இருந்தால் அதன் ஆயுட்காலம் நெடிதாக இருக்கும். இந்த மலையகம் 200 நினைவு தாயகத்தின் பதிவுகள் மலையக வரலாற்றை பிரதிபலித்து நெடுங்காலம் நிலைத்திருக்கக்கூடிய பண்புகளை கொண்டதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அந்த வகையில் தாயகத்தின் அட்டைப்படம் உணர்த்தும் செய்திகள் வலிமையானவை. ஒரு தேயிலைத் தோட்ட பின்னணியில் காட்சி தரும் பெருந்தோட்ட குடியிருப்பானது படம் பிடிக்கப் பட்டிருப்பதானது லயக்குடியிருப்பு சுயசரிதையை சொல்வதற்கு ஒப்பானதாக அமையப் பட்டிருக்கின்றது. வெறுமனே ஏகவினமான அறைகளை கொண்ட வரிசையாக லயன் ஒரு காலத்தில் இருந்தது இப்போது திரிபு பட்டு போயிருப்பதை காணலாம். எட்டடி காம்புரா வரம்பினை மீறத்துடிக்கும் உயிர்ப்பு படிந்திருக்கின்றது. ஒவ்வொரு குடும்பமும் தனித்துவமானவை என்பதை நிருபித்துக்கொள்ள லயக்காம்பராவின் முகப்பின் அமைப்பை உடைத்து வீட்டின் அமைப்பை மாற்றிக்கொள்வதற்காக போராடுவதாக எண்ணத் தோன்றுகின்றது. வீட்டு முகப்புகள் கவர்ச்சிகரமாக காட்சி அளிக்க முனைப்பு கொண்டிருந்தாலும் கூரைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கற்களும் மரக்குற்றிகளும் விரிக்கப்பட்டிருக்கும் பொலித்தீன்களும் நெஞ்சின் மீது பாரத்தை ஏற்றுவதாக இருக்கின்றது. ஆனால் லயத்துக்கு அப்பால் தாமாக கட்டியெழுப்பும் காம்புராக்கள் மக்கள் மண்ணின் மீதான உரிமையை வலிதாக்கிக்கொள்ள மேற்கொள்ளும் எத்தனிப்பாக பார்க்கலாம். அவ்வாறு கட்டியெழுப்பப்படுபவைகளிலும் செங்கற்கள் கொண்டவை, சீமேந்து புளொக் கற்கள் கொண்டவை, தாமே உருவாக்கிய கனவடிவ களிமண் கட்டிகள் கொண்டவை, மரவரிச்சிகளை கட்டி அதில் களிமண் குழைத்து இட்டு நிரப்பியவை காணப்படுகின்றன. முகப்பு அமைப்பதிலும் புதிய காம்பிராக்களை கட்டுவதிலும் காணக்கூடிய மாறுபாடுகள் அவ்வவ் குடும்பத்தின் வருமானங்களில் வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். அது மட்டுமல்லாமல் புகைப்படம் குடியிருப்பில் எத்தனை குடும்பங்கள் தமக்கென மலசலகூடத்தை கொண்டிருக்கின்றன என்ற எழுவினாவையையும் ஏற்படுத்திவிடுகின்றது. இன்னும் ஒரு தசாப்பத்துக்கு பின்னர் இதே குடியிருப்பை இதே கோணத்தில் புகைப்படம் எடுத்தால் காட்சி மாற்றம் எப்படியிருக்கும் எனவும் சிந்திக்க வைக்கின்றது. அதனையொட்டி இதழில் எழுதப்பட்டிருக்கும் மலையக மக்களின் வரலாறு- புகைப்படங்களின் பதிவுகளும் போதாமையும் என்ற தலவாக்கலை யுவராஜனின் கட்டுரையும் நோக்கப்பட வேண்டியிருக்கின்றது.

72 பக்கங்களை கொண்ட இந்த இதழின் ஆக்கங்கள் ஒவ்வொன்றையும் நுணுகி நோக்கி பதிவுகளை இடுவது கட்டுரையை நீட்சியடையச் செய்துவிடுமென்பதால் மேலெழுந்த ஒரு பார்வையை செலுத்தி இதழின் காத்திரத்தை பதிவு செய்யலாம்.

இடம் பெற்ற 12 கவிதைகள் ஒவ்வொன்றும் கவிஞர்களின் அனுபவ முதிர்ச்சி ஆற்றலின் எழுச்சி என்பவற்றை பிரதிபலிக்கின்றன. சி. சிவசேகரத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிமிர்வு எனும் கவிதையின் வரிகள் ஒவ்வொன்றும் நிமிர்ந்து நிற்பதோடு முழுமையாக வாசித்த பின்னர் வாசிப்பவனையும் நிமிர வைத்துவிடுகின்றது. கடனால் சூழ்ந்துள்ள தேசத்தின் வாசிகளின் ஏக்கத்தையும் மீட்சிக்கான மார்க்கத்தையும் துழாவும் சந்திரலேகாவின் கவிதை, இருநூறு வயது கிழவியானாலும் இன்னும் இளமையாகவும் அழகாகவும் இருக்கும் மலைமகளை பார்க்கும் மலையூரானின் கவிதையும் மற்றும் ஏனைய கவிதைகளும் சிறப்பாக இருந்தாலும் மனதுக்குள் மீண்டும் மீண்டும் மீட்டிப்பார்க்க வைக்கும் வீச்சையும் வேதனையையும் சுமந்ததாக காட்சி தருகின்றது ரட்னஜோதியின் றப்பர் தோட்ட மண்வாசனை கவிதை. அவரிடமிருந்து 'கத்தி பட்ட றப்பர் மரமுமானேன்' என பாடிய முன்னோடி பால்மரக்காட்டு கவிஞனின் தொடர்ச்சியை எதிர்பார்க்கலாம்.

இதழின் 12 கட்டுரைகளில் சடகோபன், ஜெயசீலன், சற்குருநாதன், சிவ. இராஜேந்திரன், முத்துவேல் ஆகியோரின் கட்டுரைகள் சிறப்பிதழின் தொனிப் பொருளோடு வெகுவாக ஒட்டியிருப்பதோடு புதிய தலைமுறை வாசகர்களுக்கு சரியான பொருத்தப் பாடானவை என்றாலும் ஹிர்சானின் மலையக பல்கலைக்கழகம் குறித்த கட்டுரை உள்ளடக்கத்தை அதனை பேசு பொருளாகவும் பேசா பொருளாகவும் கொண்டிருப்போரின் கவனத்துக்குள் செருகிவிடுவது எப்படி என மனம் அல்லாடுகின்றது. மொழிவரதன் மலையகத்துக்கான தொலைகாட்சி அலைவரிசை பற்றிய கனவு சுமந்ததாக இருக்கின்றது. ஆனால் அப்படி தொடங்கப்பட்டால் இந்த வர்த்தகமய தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் தொடுதிரையில் காந்தமாய் ஒட்டியிருப்பவர்களை எப்படி வேறாக்கி எடுத்த பார்க்க வைப்பது என்பது பற்றி சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

கிங்ஸ்லி தனது கதைக்கருவை இன்னும் மனதில் ஊறவைத்து பிரசவித்திருப்பாராயின் ஒரு கலாநிதிக்கு சமர்ப்பணமானதை இன்னும் பலருக்கு வியாபித் திருக்கலாம்.

படைப்புகளை முன்வைப்பதை விட அந்த படைப்பு முன்னிருத்தும் யதார்த்;தத்தை பின்பற்றி செயற்படுவ தென்பது தான் இன்றைய தலைமுறையினருக்கு தலையாய பிரச்சினையாக இருக்கின்றது. 21 ஆம் நூற்றாண்டில் வாழ்க்கையை முன்னெடுத்து செல்லும் போது நம்மோடு கலந்திருக்கும் 4 வது கைத்தொழில் புரட்சியோடு தொடர்பான இலத்திரனியல் புரட்சி மற்றும் செயற்கை நுண்ணறிவு என்பனவற்றை தவிர்த்து வாழ்க்கைக்கு முகங்கொடுப்பது ஒரு பாமரனுக்குக்கூட இயலாத காரியமாகியிருக்கின்றது. இறக்குமதியாகும் திணிக்கப்படும் இந்த தொழினுட்ப புரட்சியோடு உடல் உழைப்பு சேவையாளருக்கான எதிர்காலம் கேள்விக் குறியாகி இருக்கின்றது.

பெருந்தோட்ட தொழிற்றுறையில் மலினமான முறையில் உழைப்பை உறிஞ்சிக்கொள்ள பலரும் உதவும் சூழ்நிலையில் அத்துறையை கைக்குள் வைத் திருப்பவர்கள் தொழில்நுட்பங்களுக்கான முதலீடுகளில் தங்கள் லாபங்களை முதலீடு செய்யமாட்டார்கள் என நம்பலாம். ஆனால் வருங்காலத்தில் தொழிநுட்பத்தில் முதலீடு செய்வது லாபகரமானது என அவர்கள் கருதும் போது தொழிலாளர்கள் வயிற்றிலடிக்க தயங்க மாட்டார்கள் என்பதோடு அவர்களின் இருப்புக்கும் வேட்டு வைக்க தவறமாட்டார்கள். என அத்தகைய ஓர் எதிரகாலத்தை நோக்கி சிந்தித்து அதற்கு முகம் கொடுக்கும் விதத்தை நமது கல்வியும் இலக்கியங்களும் உணர்த்த வேண்டும்.

எனவே படைப்பாளர்களும் கடந்த காலத்தைப் போல இயற்பண்புவாத இலக்கிய முயற்சியில் ஈடுபடுவதை விடுத்து விஞ்ஞானபூர்வ சிந்தனைகளோடு வாசிப்பவர்களுக்கு வலுவூட்டும் பணியில் ஈடுபட்டு ஓர் உருப்படியான தலைமுறையை உருவாக்க வேண்டும். இன்றைய இளைய தலைமுறையினரின் பிறழ்வு நிலைகளை படம் பிடித்து ஊடகங்கள் காட்டுமளவுக்கு அவ்வாறன ஒரு தலைமுறை உருவாகாமல் தடுக்கும் முயற்சிகளில் அவைகள் ஈடுபடுவதாக இல்லை. வணிக சந்தையில் படைப்புகளை மலினப்படுத்தி விற்று மக்களை மூளை சலவை செய்வதில் நாளுக்கு நாள் புதிய உத்திகளை தந்திரோபாயங்களை வகுத்துக்கொள்ள பெரும் பணத்தை செலவு செய்து கொண்டிருக்கும் போது சமுக அக்கறையோடு ஒரு சஞ்சிகையைக் கூட வெளியிட முடியாத சூழமைவு ஏற்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதிலே தாயகம் போன்ற சஞ்சிகைகளும் பலியாக வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

எனவே சஞ்சிகைகளின் வெளியீடுகளின் தடைச் சூழல் என்பது காத்திரமான படைப்புகளுக்கு ஆணி அடிக்கப்படுவதை மேலும் இறுக்கும். இதனால் மக்கள்சார்ந்த எழுத்தாளர் தங்கள் படைப்புகளுக்கு களமில்லாது போவதை தாங்கிக்கொள்ள மாட்டார்கள். ஏனென்றால் அத்தகையவர்கள் வாயிருந்தும் ஊமை களாக வாழத்தயார் இல்லாதவர்களாவர். எனவே அத்தகைய எழுத்தாளர்களின் செயல் தொடர்ச்சியை நிலை நிறுத்த வேண்டிய பங்களிப்பு மற்றும் பொறுப்பு சஞ்சிகை வாசகர்களுக்கு உண்டு. அத்தகைய வாசகர்கள் தாங்கள் மட்டும் விலை கொடுத்து சஞ்சிகையை வாங்கிப்படிக்காமல் ஏனையவர்களையும் வாங்கிப் படிப்பதை ஒரு சமுதாயக் கடமையாக உணர்ந்து செயற்படுத்த வேண்டும்.

❐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் கைலாசபதியின் 90வது பிறந்தநாள் நினைவாக

# ஈழத்தமிழ்ச் சமூகத்தின் இயங்கியலின் வழிகாட்டி

தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### தொடக்கக் குறிப்புகள்

ஈழத்து இலக்கியப் பரப்பிலும் சமூகப் பரப்பிலும் பேராசிரியர் க.கைலாசபதியின் செல்வாக்கும் தடமும் மிகப்பெரியது. அவரது சமூக இயங்கியல் ஈழத்தமிழ்ச் சமூகத்திற்கு பல வகைகளில் முன்னோடியானது. ஒரு ஊடகவியலாளராக, ஆசிரியராக, பல்கலைக்கழக நிர்வாகியாக, பேச்சாளராக, சமூகப் போராளியாக, அரசியல் விமர்சகராக எனப் பன்முகப்பட்ட பங்களிப்பை அவர் வழங்கியுள்ளார். அவரது இலக்கியப் பங்களிப்பு பேசப்பட்ட அளவுக்கு அவரது சமூகப் பங்களிப்பு பேசப்படவில்லை. யாழ்ப்பாண சமூக அசைவியக்கத்தில் அவரது தாக்கம் முக்கியமானது. அவரது காலப்பகுதியில் கட்டமைக்கப்பட்டிருந்த கற்பிதங்களை புனைவுகளை உடைத்தவர் கைலாசபதி. சமூக நீதிக்கான நீண்ட நெடிய போராட்டத்தில் தனது பங்களிப்பை வழங்கியவர். அரசியலில் இருந்து ஒதுங்கி இராது சமகால உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் நடப்புகள் தொடர்பில் தனது கருத்துக்களைத் தொடர்ச்சியாகப் பேசியும் எழுதியும் வந்தவர். அடுத்த தலைமுறை ஆய்வறிவாளர்களை பல்கலைக்கழகத்துக்கு உள்ளேயும் வெளியேயும் உருவாக்குவதில் கரிசனையுடன் செயற்பட்டவர்.

கைலாசபதி மீதான விமர்சனங்கள் அவரது சமூகப் பார்வையினதும் அரசியல் நிலைப்பாட்டினதும் விளைவிலானவை. கைலாசபதி விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவரல்ல. அவ்வாறு தன்னைக் கருதிக் கொண்டவருமல்ல. மாற்றுக் கருத்துக்களை, எதிர்க் கருத்துக்களை, விமர்சனங்களை தயங்காமல் கேட்கவும் ஏற்கவும் தயாரான ஒருவராகவே அவர் இருந்தார். அவருடன் பணியாற்றிய பலரின் நினைவுக்குறிப்புகள் இது குறித்த பல செய்திகளைச் சொல்கின்றன. கைலாசபதி உயிரோடு இருந்தபோதும் பின்பும் முன்வைக்கப்பட்ட விமர்சனங்களில் பெரும்பாலானவை அவதூறுகள். அதில் குறிப்பிடத்தக்க அவதூறு அவரை சாதி வெறியராகக் காட்ட முயன்ற செயல். இச்செயலுக்குத் துணை போனவர்கள் பலர். முன்னோடி முற்போக்கு எழுத்தாளர் என்.கே. ரகுநாதனின் "நிலவிலே பேசுவோம்" என்ற சிறுகதை சாதியத்துக்கு எதிரான வலுவான ஒரு சாட்டையடி. அக் கதை நூலுருவான பின்பு அக்கதையில் குறிப்பிடப்படும் சாதி வெறியர் கைலாசபதி என்ற வதந்தி எஸ்.பொன்னுத்துரையால் முதலில் பரப்பப்பட்டு வந்தது. இக்கதையைப் பரப்ப இடதுசாரி எதிர்ப்பு முகாமில் இருந்த இலக்கியக்காரர் பலர் கடுமையாக முயன்று வந்தார்கள். இந்த விஷமம் தமிழ்நாட்டிலும் பரவியது. முற்போக்கு எழுத்தாளர்கள் என்றறியப்பட்ட சிலரும் இக்கதையைக் காவினர். இந்நிலையில் என்.கே. ரகுநாதன் தினக்குரலில் பனுவல் என்ற பகுதிக்கு எழுதிய கடிதம் 12-09-2004 பத்திரிகையில் வெளியானது. டொமினிக் ஜீவா முதல் தமிழகத்து அ. மார்க்ஸ் போன்றவர்கள் மறைமுகமாக கைலாசபதி மீது சுமத்த முயன்றுவந்த சாதிய உணர்வுக் குற்றச் சாட்டுக்களையெல்லாம் தகர்த்து எறியும் விதமாக கைலாசபதியின் நடத்தை பற்றிய தனது தனிப்பட்ட அனுபவத்தையும் ரகுநாதன் எழுதியிருந்தார். இக்கட்டுரை ரகுநாதம் என்ற என்.கே. ரகுநாதனின் தொகுப்பிலும் இடம்பெற்றுள்ளது. ரகுநாதன் தனது கடிதத்தில் குறிப்பிட்ட முக்கிய ஒரு விடயம் கவனத்திற்குரியது. "கைலாசபதியை அவருடைய வீட்டில் சந்தித்தது 1962இல். என்னுடைய நிலவிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுவோம் சிறுகதைத் தொகுதி வெளிவந்ததும் 1962இல் தான். ஆனால் அந்தக் கதை 1951இல் சுதந்திரனில் பிரசுரமானது. சிறுகதைத் தொகுதியில் வெளிவந்த கதைகளினடியில் கதை பிரசுரமான ஆண்டுகளை இணைத்திருக்கிறேன். நிலவிலே பேசுவோம் கதை யினடியில் 1951 என்று பிரசுரமாகியுள்ளது. 40 ஆண்டு களுக்கு மேலாக நிலவி வரும் ஒரு அபத்தப் பிரசாரத்திற்கு முத்தாய்ப்பு வைக்கப்படுகிறது" இவ்வாறு ரகுநாதன் தெளிவுபடுத்தினார். ஆனால் இந்த விஷமத்தைக் காவியோர் இதுவரை தம் தவறுக்கு மன்னிப்புக் கோரவில்லை. கைலாசபதி அதை எதிர்பார்க்கவில்லை.

இந்தவிதமான அவதூறுகளை விடக் கெடுதலானவை கைலாசபதியின் அடையாளத்தைச் சிதைக்கிற வேறு விதமான முயற்சிகள். இவை வேறுபட்ட நோக்கங்கட்காக மேற்கொள்ளப்படுகின்றன. கைலாசபதியினுடைய பேருடன் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு தங்களது அடையாளத்திற்கு ஏற்றபடி கைலாசபதியை அடையாளப்படுத்த முயலுகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தாங்கள் விரும்புகிற விதமான அடையாளத்தை வழங்க வாய்ப்பே இயலாத போது அதற்கு முரணான எந்தத் தடயத்தையும் மறைத்து விடுவார்கள். கைலாசபதியின் அரசியற் சார்பையும் ஆக்கங்களையும் மறைக்கிற முயற்சிகள் இத்தகையவை. இன்னொரு வினோதமான முயற்சி கைலாசபதி இப்போது உயிரோடு இருந்தால் பேராசிரியர் சிவத்தம்பி போல தமிழ்த் தேசியவாதத்துக்குச் சார்பாக மாறியிருப்பார் என்பது. இக்கருத்து முன்வைக்கப்பட்ட கூட்டத்திலேயே இக்கருத்துக்கு சொல்லப்பட்ட பதில்; "அது உண்மையாக இருந்தால் கைலாசபதி நம்மிடையே இல்லாமலிருப்பதே நல்லது" என்பது.

கைலாசபதி ஆற்றிய பணிகளை எவ்வாறு வளர்த்து முன்னெடுப்பது என்பதே நமது அக்கறையாக இருக்க வேண்டும். இதுவே சமூகத்திற்கு நற்பணி ஆற்றிய ஒவ்வொரு நல்ல மனிதர் தொடர்பாகவும் நமது அணுகுமுறையாக இருக்க வேண்டும். இதை நாம் கைலாசபதியிடமிருந்து கற்பது என்று சொல்லலாம். கற்பதில் முக்கியமான பகுதி அறிவது. அடுத்தது அதிற் பெறுமதி வாய்ந்தவற்றை அடையாளங் கண்டு அவற்றை மேலும் விருத்தி செய்வதும் குறைபாடானவற்றைச் செம்மைப்படுத்தி நிறைவு செய்வதுமே. கைலாசபதியின் சிந்தனைகளை விளங்கிக் கொள்ள அவரது அணுகுமுறையையும் வேலை முறையையும் விளங்கிக் கொள்ளுவது அவசியம். அவர் எவ்வாறு ஈழத்தமிழ்ச் சமூகத்தின் இயங்கியலின் வழிகாட்டியாக இருந்தார் என்பதை அவரது அணுகுமுறையும் வேலை முறையும் காட்டி நிற்கின்றன.

கந்தன் கருணை நாடகம் ஈழத்து நாடகவுலகில் மிகவும் முக்கியமானது. சாதியமைப்புக்கெதிரான "சாதியமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற பதாகையின் கீழ் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் விடுதலைப் போராட்ட வீரத்தில் விளைந்ததே கந்தன் கருணை நாடகமாகும். இதை 1969 இல் வசன நடையில் நாடகமாக எழுதியவர் என்.கே. ரகுநாதன். தாழ்த்தப்பட்டதாக அவர்கள் கருதிய மக்களை மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலுக்குள் அனுமதிக்காத நிகழ்வின் பின்னணியில் இந்நாடகம் எழுதப்பட்டது. பின்னர் இது கூத்தாக மாற்றப்பட்டு அம்பலத்தாடிகளின் நாடகமானது. பின்னர் இது நடிகர் ஒன்றியத்தினால் இன்னொரு வடிவில் மாற்றங் கண்டது. இந்நிலையில் இந்நாடகத்திற்கு பலர் உரிமை கோரியதாகவும் இந்நாடகத்தை எழுதியவர் என்.கே. ரகுநாதனே என்று கைலாசபதி எழுதி இது தொடர்பான ஐயங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் என்று பேராசிரியர் சி. தில்லைநாதன் கைலாசபதி பற்றி நினைவுகூர்கிறார்.

கைலாசபதியை, கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன் என்ற பாரம்பரியத்தில் வந்தவர் என்று சொல்பவர்கள் உண்டு. இது வெறுமனே ஒரு வரிசை மட்டுமே, பாரம்பரியமல்ல. விபுலானந்தர், கணபதிப் பிள்ளை போன்றோர் மிக முற்போக்கான சிந்தனை கொண்டவர்கள் என்பதுடன் தமது கருத்துக்களிலும் நிலைப்பாடுகளிலும் தெளிவாக இருந்தவர்கள். பேரும் பதவியும் பணமும் வேண்டித் தடுமாறியவர் அல்ல. அவர்களுடைய வழியில் வேண்டுமென்றால் அடுத்த வராகக் கைலாசபதியைக் கொள்ளலாம். கைலாசபதியின் சாதனைகளை விடவும் அவர் வகித்த பதவிகளை விடவும் முக்கியமானவை அவரது உலக நோக்கும் சமுதாயச் சார்பான தடம்புரளாத அவரது சிந்தனையு மாகும். அது பேசப்படுவதில்லை. இப்பின்னணியில் இக் கட்டுரை அவரது சமூக இயங்கியலையும் பங்களிப்பையும் நோக்க விளைகிறது.

## சமுகத்தை நவீனமாக்கும் சிந்தனைகளை விதைத்தல்

ஈழத்தமிழ்ச் சமூகத்தில் நவீனமான சிந்தனைகளைக் கொணர்ந்தவர்களில் கைலாசபதிக்குத் தனித்துவமான இடமுண்டு. இலக்கியங்கள் சமூகத்தில் முக்கிய பங்காற்றுகின்றன என்பதை தெளிவாக உணர்ந்தவர் அவர். தமிழ் இலக்கியங்களும் அதன் செல்நெறியும் எவ்வாறு பண்பாட்டின் பேரால் பலவற்றை எதுவித விமர்சனமுமின்றி ஏற்றுக் கொள்கின்றன என்பதை தனது ஆய்வுகளின் ஊடும் திறனாய்வுகளின் வழியும் தொடர்ச்சியாக வெளிப்படுத்தினார். தமிழரின் பழைமை குறித்த மாயைகளைக் களைந்து இலக்கியத்தையும் சமூகத்தையும் விமர்சனப் பாங்கான புத்தாக்க சிந்தனைகள் நோக்கி நகர்த்தும் பணியை இடைவிடாது செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திறனாய்வுத் துறையில் முக்கிய கவனம் செலுத்தத் தொடங்கிய காலம் முதல் இலக்கியம் முதலியவற்றை அவற்றுக்குரிய வரலாற்றுப் பின்னணியிலும், சமுதாயச் சூழலிலும் வைத்தே ஆராய்ந்து வந்திருக்கின்றேன். மார்க்சியத்தை தழுவிக் கொண்ட நாள் முதலாக அதன் முனைப்பான கூறுகளில் ஒன்றாகிய சமூகவியலை எனது பல்வேறு ஆய்வுகளுக்குப் பற்றுக்கோடாகக் கொண்டு வந்துள்ளேன். சமூகவியலில் உண்டாகிய ஈடுபாடே ஒப்பியல் ஆய்வுக்கு என்னை இட்டுச் சென்றது. இவற்றின் பயனாக இலக்கியத்தை அறிவியல் அடிப்படையிலே அணுகக் கற்றுக் கொண்டேன்" என்று சொல்லும் கைலாசபதி தனது தமிழியல் ஆய்வுகளின் ஊடு இயங்கியல் நோக்கில் தமிழர் வரலாற்றையும் பண்பாட்டையும் இலக்கியத்தையும் நோக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

சமூகத்தை நவீனமயமாக்குவதற்கு அச்சமூகத்தின் பழம் பெருமைகளின் நெருக்கடிகளைச் சுட்டிக் காட்டவேண்டியதன் தேவையையும் சொல்லப்பட்ட வரலாற்றுப் பெருமிதங்களின் பின்னால் உள்ள சொல்லப்படாத செய்திகளையும் எழுப்பபட வேண்டிய கேள்விகளையும் முன்வைத்தார். அவரது கருத்துக்கள் தமிழ்ச் சமூகத்தில் கட்டியெழுப்பப்பட்டிருந்த பெருமைகள் எனும் காகிதச் சிகரங்களைச் சரித்தன. இது ஈழத்தமிழ்ச் சமூகத்தில் முக்கியமான திசைமாற்றமாகியது. "சங்ககாலம் என்ற வாய்ப்பாட்டை ஒருகணம் நாம் கருதுகோளாகக் கொண்டு இருபதாம் நூற்றாண்டு வரை வரலாற்று அடிப்படையில் நோக்கினால் பல மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருப்பது கண்கூடு... தனியுடைமைச் சமுதாயத்தின் வளர்ச்சியை நாம் சங்க இலக்கியங்கள் என்று விபரிக்கப்படும் சான்றோர் செய்யுள்களிலே தெளிவாகக் கண்டு கொள்ளலாம். புராதன சமுதாயத்தின் மீதமிச்சங்களாக இருந்த கிளைகளும் குடிகளும் மூலங்களும் குழுக்களும் வீரயுகத்திலே நடைபெற்ற மாடுபிடி, நாடுபிடி சண்டைகளின் ஊடே அழிவுற்று உறுதியான அரசுகளும் பெரு நிலப்பரப்புகளும் உதயமாகிய காலகட்டத்தைச் சான்றோர் செய்யுள்கள் நமக்குக் காட்டுகின்றன. அந்தக் காலகட்டத்திலிருந்து அடிமைச் சமுதாயம், நிலமானிய சமுதாயம், முதலாளித்துவ சமுதாயம் என்ற மாபெரும் வரலாற்றுக் கட்டங்களுக்கூடாக, தமிழர் சமுதாயம் வந்து இன்று சோசலிச சமுதாயத்தின் அமைப்புக்கான போராட்டத்தின் மத்தியில் இருப்பதையும் காண்கின்றோம். இது நீண்ட வரலாற்றுப் பயணமாகும்." என்று எழுதியதனூடு தமிழர் வாழ்வியல் வரலாற்றுக்கு ஒரு வர்க்கப் பார்வையை வழங்கினார். இப்புதிய வெளிச்சம் ஈழத்தமிழ்ச் சமூகத்தை நவீனமயமாக்கும் நீண்ட போராட்டத்தின் பகுதியாகியது. இப்போராட்டத்தில் மூன்று முக்கிய திசைவழிகளுக்கு கைலாசபதி பங்களித்தார்.

முதலாவது, தமிழ் இலக்கியங்களின் சமூகவியல் கூறுகளை ஆராய்ந்து தமிழரின் பெருமிதங்களாக அதுவரை போற்றிப் புகழப்பட்ட இலக்கியங்களின் பிற்போக்குத்தனத்தையும் அதன் மீதான வர்க்கப் பார்வையின் அவசியத்தையும் முன்மொழிந்தார். அதன் பகுதியாக, தமிழரின் பெருமையாகக் கொள்ளப்பட்ட சங்க இலக்கியங்கள் குறித்து இதுவரை காலமும் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் மீதான ஆழமான விமர்சனத்தை – கைலாசபதியின் மொழியில் திறனாய்வில் – துணிச்சலாக முன்வைத்தார். "தொன்மை என்ற காரணத்திற்காகவும், வர்க்க முரண்பாடுகளை மூடி மறைத்து, பழம்பெருமைக்குள் பிரச்சினைகளை மடக்கி அடக்கிவிடுவதற்காகவும் நம் முன்னே நிறுத்தப்படும் சங்க காலம் மற்றைய வர்க்க சமுதாயங்களைப் போலவே சுரண்டலும், அடக்குமுறையும், சூறையாடலும், அதிகாரத்துவமும் நிறைந்திருந்தது என்பதை நாம் மறந்துவிட முடியாது. இருபதாம் நூற்றாண்டுக் கவிஞரும் எழுத்தாளர்களும் அதற்கு எத்தனையோ வகையில் பொன்முலாம் பூசி பூலோக சுவர்க்கமாக-இன்பலோகமாக விபரித்து வந்திருக்கின்றனர்" என்ற அவரின் விமர்சனம் தொன்மையை அறிவியல் நோக்கில் விமர்சனரீதியாக நோக்க வேண்டியதன் கட்டாயத்தைக் காட்டி நின்றது.

இரண்டாவது, தமிழ் இலக்கிய வரலாற்றினூடு இலக்கியத்திற்கும் மதத்திற்கும் இடையிலான உறவினையும் அதன் பின்னணியில் மறைந்திருக்கின்ற நிகழ்வுகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார். கைலாசபதி வாழ்ந்த ஈழத்தமிழ்ச்சூழலில் இந்துமதச் செல்வாக்கும் அதன் அதிகாரமும் சமூகத்தின் பிரதான திசைவழியாக இருந்தது. ஆறுமுகநாவலரின் செல்வாக்கும் சைவ-வெள்ளாள ஆதிக்கமும் கோலோச்சிய காலகட்டத்தில் பக்தி இலக்கியங்கள் முக்கிய கருவிகளாகப் பயன்பட்டன. வரலாற்று வழிப்பட்டு அவற்றின் பின்னாலுள்ள வர்க்க நலன்களை நோக்க வேண்டிய அவசியத்தை கைலாசபதி முன்வைத்தார். இதை பல்லவர் கால முரண்பாட்டின் வழிநின்று விளக்கினார். "பல்லவர் காலத்திலே சமயத்துறையில் எழுந்த பக்தி இயக்கம், கலை இலக்கியங்களில் வீறார்ந்த முறையில் வெளிப்பட்டது. பக்தி இயக்கம் தனித்தன்மை வாய்ந்த வழிபாட்டு வடிவத்தையும் அதற்கியைந்த கவிதை உருவங்களையும் தோற்றுவித்தது. ஆயினும் அவ் வியக்கத்தின் பௌதீக அடிப்படையாக வணிக வர்க்கத்தினருக்கும் நிலவுடைமையாளர்களுக்கும் இடையில் நடந்த போராட்டமே அமைந்திருந்தது. இலக்கிய மூடுதிரையைக் கிழித்துவிட்டு, பக்தி இயக்கத்தின் சமூக, பொருளாதார, தத்துவார்த்தக் காரணிகளைக் கண்டறிந்தாலன்றி அவ் இயக்கத்தின் காரணமாயும் காரியமாயும் காட்சியளிக்கும் ஆற்றல்மிக்க கவிதைகளை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாது" என்ற அவரது விமர்சனம் சமணம் பொருளாதார அடிப்படையில் வலிமைமிக்கதாக விளங்கிய காலகட்டத்தில் இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறியடிக்கும் போக்கிலேயே நிலவுடைமையாளர் சைவத்தின் பேரிலே சமணத்திற்கு எதிரான பேராட்டத்தை முன்னெடுத்து தோற்கடித்து சைவமும் பெரும் நிலவுடைமை ஆட்சியமைப்பும் எவ்வாறு தோற்றுவிக்கப்பட்டன என்ற வரலாற்றிற்கான திறவுகோலானது.

ஈழத்தமிழ்ச் சமூகத்தை நவீனமயமாக்குவது நோக்கிய பயணத்தில் கைலாசபதியின் மூன்றாவதும் அதிமுக்கிய மானதுமான பங்களிப்பு ஈழத்தமிழ்ச் சமூகத்தில் ஊடுருவியிருக்கும் சாதிய முரண்பாடு பற்றியும் அது உருவாக்கியிருக்கும் கற்பிதங்கள் பற்றியும் கருத்துரைத் தமையாகும். "சாதிப் பிரச்சினை பற்றிப் பேசுகின்ற சிலர் பழந் தமிழ் இலக்கியங்களிலே ஆங்காங்கு கூறப் பட்டுள்ள சில 'மனிதாபிமானக்' கருத்துக்களைச் சுட்டிக் காட்டி, பெரும் புலவர்கள் எல்லாம் சாதிமுறையை யெதிர்த்தே வந்திருக்கின்றனர் என்று தமக்குத் தாமே ஒரு வகையான மன அமைதியைத் தேடிக்கொள்வதைக் காணலாம். சங்கச் சான்றோர் தொடக்கம் வள்ளலார் வரை 'சாதி வழக்குகளை' கண்டித்துப் பாடியவர் பலர் உள்ளனர் என்பது உண்மையே. ஆனால் அக் கண்டனத்தின் தன்மையே கூர்ந்து நோக்கத்தக்கது. சாதிமுறை கூடாது என்பதை எடுத்துக் கூறுவதற்கும் பெரும் புலமையோ பேரறிவோ தேவையில்லை. நிலைமையை மாற்றுவதற்கு ஏற்ற வழிவகைகளைக் கூறுவதிலேயே முந்தையோர் பெரிதும் வேறுபடுகின்றனர்" என்று எழுதினார். தேவார திருவாசகங்களில் உள்ள சாதி மறுப்புப் பாடல்கள் எவ்வாறு, ஏன் தோற்றம் பெற்றன என்ற வினாவுக்கான விடையை பின்வருமாறு அளித்தார்: சைவ நிலவுடைமையாளர்களுக்கும் சமண வணிக வர்க்கத்தினருக்கும் இடையிலான கடும் போராட்டத்தில் வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாகப் பொதுமக்களே இருந்தார்கள். நிலவுடைமையாளர்களுக்கு மக்களை அணிதிரட்ட சைவம் உதவியது. அதன் வெளிப்பாடே இவ்வகைப்பட்ட சாதி மறுப்புப் பாடல்கள். இதை "போர்க்கால இசைவு நடவடிக்கை" என்று கைலாசபதி குறிப்பிடுகிறார். இக்காலப்பகுதியின் தொடர்ச்சியாக வந்த சோழர்காலப்பகுதியைப் பொற் காலம் என்று சொல்வது தவறானது என்று வாதிடும் அவர் வர்க்க வேறுபாடுகளும், அடக்குமுறையும், சுரண்டலும் நிறைந்த காலம் எவ்வாறு மக்களுக்குப் பொற்காலமாக இருக்கவியலும் என்ற வினாவை எழுப்பி கூர்மையடைந்த சாதியப் படிநிலைகளின் தன்மை பற்றியும் அதில் சோழப்பேரரசின் பங்கையும் எடுத்துக்காட்டினார்.

1960களில் ஈழத்தில் சாதியத்திற்கெதிரான போராட் டங்கள் கூர்மையடைந்த வேளையில் அவர் ஒடுக்கப் பட்ட மக்களின் பக்கத்தில் நின்றார். இப்போராட்டங்களுக்கு ஆதரவு கொடுத்தார். 1969ம் ஆண்டு நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் இரண்டாவது மாநாட்டு மலரில் 'போராட்டமும் வரலாறும்' என்ற தலைப்பில் மிகவும் தீர்க்கமான ஒரு கட்டுரையை எழுதியிருந்தார். இக்கட்டுரையில் திருவள்ளுவர் மீதான ஒரு விமர்சனத்தையும் முன்வைத்திருந்தார்:

*"மனிதனை மனிதன் அடக்கி அடிமைப்படுத்தும் எல்லாவிதமான முயற்சிகளும் பல்வேறு காலங்களில் போராட்டங்களினாலேயே மாற் றப்பட்டுள்ளன என்பது வரலாற்று உண்மை. மனமாற்றத்தால் அடிப்படை மாற்றம் எதுவும் ஏற்படாது, மந்திரத்தால் மாங்காய் விழாதது போல. சாதிக்கொடுமையைப் பற்றியும் சாதி முறையைப் பற்றியும் எமது பழைய இலக்கி யங்களிலே எடுத்துரைத்தவர்கள் ஆகக் கூடிய பட்சம் மனமாற்றத்தையே எதிர் பார்த்தனர். உடையவனும் இல்லானும் இருந்த - வணிக வர்க்கச் செல்வாக்கு ஓங்கிய சமுதாய அமைப்பிலே - 'வறியார்க்கு ஒன்று ஈவது' பற்றி விரிவாக எடுத்துரைத்துப் 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும்' இணக்க முறையை வகுக்க முயன்றார் வள்ளுவர். வறுமையை அதிகப்பட விடாது அதனைக் குறைக்க முயன்றால் செல்வனுக்கு அதுவே உதவியாயமையும் என்று உபதேசம் பண்ணினார் வள்ளுவர். "அறம்" உரைத்த வள்ளுவர் எவர் பக்கம் நிற்கிறார் என்பது வெளிப்படை. ஆனால் சமூகசிந்தனையாளனாகிய அவர் வர்க்கப் போராட்டத்தைத் தடுக்கவும் கூர்மழுங்கச் செய்யவும் முயன்றார். பிறப்பால் பெறும் பேதத்தை பேச்சளவில் மறுத்த பொய்யா மொழியார் செய்தொழில் வேற்றுமையை அடிப்படையாக ஏற்றுக் கொண்டு, மனிதரிடையே ஏற்றத் தாழ்வை அமைத்து அமைதி கண்டார். வள்ளுவர் புத்துலகு அமைக்க முயன்றவர் அல்லர். பழைய உலகை புத்திசாலித்தனமாக நடக்கும்படி புத்தி கூறியவரே. தனது காலத்துச் சமூக முரண்பாட்டிற்கு 'அமைதியான' நிவாரணம் காண முயன்றார் வள்ளுவர். ஆனால் அவர் அதில் எள்ளளவும் வெற்றிபெறவில்லை என்பது சரித்திரச் செய்தி."*

இதே கட்டுரையில் சமய அடிப்படையில் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவியலாது என்பதை அக்காலச் சூழலோடு பொருத்திப் பேசுகிறார். "சமயப் போர்வையிலேயே இதுகாலவரை சாதிப் பிரச்சினை நோக்கப்பட்டு வந்தமையால், மிகச் சமீப காலம் வரை அதாவது நவீன காலப் பகுதியிலும் பலர் சமய அடிப்படையில் இப்பிரச்சினைக்கு விடிவுகாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணினர். கிறித்துவம், பௌத்தம் முதலிய சமயங்களைச் சேர்வதால் சாதிப் பிரச்சினைக்குத் (தம்மளவிலே) தீர்வு காண்பதாகப் பலர் கருதியிருக்கின்றனர். பிரச்சினை என்பது ஒரு முரண்பாட்டின் உருத்தோற்றமாகும். அம்முரண்பாட்டை இயக்கத்தினால், அதாவது செயலினால் - போராட்டத்தினால் தீர்க்கலாமேயன்றி - அதிலிருந்து நழுவுவதால் தீர்க்கவியலாது. அவ்வாறு வேறு மதங்களைச் சார்ந்த பின்னரும் வேறு வகையான ஏற்றத் தாழ்வுகளும் முரண்பாடுகளும் தோன்றக் காண்கின்றோம். எனவே நிவாரணம் தவறாக இருந்திருக்கிறது என உணர்கிறோம்" என்றார்.

இக்கட்டுரையில் ஈழத்தமிழ்ச் சமூகத்தில் நிலவும் பிற்போக்குத்தனங்கள் பற்றிய தனது காட்டமான எதிர்ப்பைப் பதிவு செய்கிறார். 'பழைய சமூக அமைப்பில் சிலர் 'தீண்டாதார்' என ஒடுக்கப்பட்டது போலவே பெண்கள் பின் புத்தி உள்ளவராகவும் பேதைகளாகவும் ஒதுக்கி வைக்கப்பட்டனர். இளைஞரோ அநுபவம் அற்றவராகவும் பெரியோர் பின் செல்லவேண்டியவராகவும் குறைத்து மதிக்கப்பட்டனர். இங்கெல்லாம் ஏற்றத் தாழ்வும், பேதமும் 'தீண்டாமையும்' வெவ்வேறு அளவில் உள்ளன. இவை யாவற்றுக்கும் அடிப்படையாக பொருளா தாரக் காரணிகள் இருக்கின்றன. தேசத்துக்கு உள்ளே, சமூக அமைப்புச் சம்பந்தமானது. பொருளாரம் சம்பந்தமானது. அரசியல் சம்பந்தமானது. சாதி முறையைப் பாவித்துப் பல உரிமைகளை மறுத்து மக்களை அடக்கும் அதே வர்க்கந்தான், அந்நிய ஏகாதிபத்தியத்தின் ஆசீர் வாதத்துடன் பாட்டாளிகளையும் உண்மையான விடுதலை வீரர்களையும் அடக்கி ஒடுக்குகிறது" என்று எழுதினார். இவ்வரிகள் சமகாலத்திலும் ஈழத்தமிழ்ச் சூழலுக்குப் பொருந்திப் போவன என்பது வருந்தத்தக்க உண்மை.

சாதிப்பிரச்சினையை எவ்வாறு நோக்கவேண்டும் என்று இக்கட்டுரையின் இறுதியில் குறிப்பிடும் கைலாசபதி, "முற்றிலும் புதிய நடைமுறையில் இப்பிரச்சினையை அணுகும் தேவை இப்பொழுது உணரப்பட்டு வருகிறது. இப்பிரச்சினையைத் தனித்தெடுத்து சாதிப் பிரச்சினை யாகவும், சமயப் பிரச்தினையாகவும் மாத்திரம் நோக்காது, பொதுவான தேசப் பிரச்சினையாகவும், வர்க்கப் பிரச்சினையாகவும் கருதிச் செயலாற்றும் நிலைமை தோன்றியுள்ளது" என்றார்.

## எழுத்தும் எழுத்தாளனின் பணியும்

எழுத்துப் பற்றியும் எழுத்தாளன் பற்றியும் கைலாசபதியின் பார்வை முக்கியமானது. எழுதுவது எதற்காக என்ற வினாவை தனது உரைகளில் பொதுமக்களிடமும், நண்பர்களிடமும், மாணவர் களிடமும், எழுத்தாளர்களிடமும் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தார். எழுத்தாளனின் பணி பற்றிய தனது கருத்துக்களை அவர் பலமுறை பல்வேறு கட்டுரைகளில் முன்வைத்திருக்கிறார். அவரது சமூக வியலும் இலக்கியமும் என்ற நூலில் இடம்பெற்றுள்ள "இங்கிருந்து எங்கே" என்ற கட்டுரையில் இதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் பின்வருமாறு சொல்கிறார்:

*"காலங்காலமாக எழுப்பப்படும் வினாக்களில் ஒன்று இலக்கியம் எதற்காக என்பதாகும். தனிப்பட்ட ஓர் எழுத்தாளன் காதல் புகழ் பணம் சமய நம்பிக்கை அரசியல் ஈடுபாடு முதலிய வேறு காரணங்களில் ஒன்றோ பலவோ உந்துவதால் எழுதுகிறான். எழுத்தாளன் தனித்து இருந்து வாழும் ஒருவன் அல்லன். அவன் சமூகப் பிராணி சமுதாயத்தில் எல்லாக் காலங்களிலும் முரண் பாடுகளும் போராட்டங்களும், இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன. வர்க்க வேறுபாட்டினால் இவை எழுகின்றன. இவற்றின் மத்தியிலே எழுத்தாளனும் வாழ்கின்றான். எழுத்தாளர்களிடையே ஒரு பிரிவினர் பிரச்சினை களையும், முரண்பாடு களையும் துன்ப துயரங்களையும் எதிர் நோக்காத வராய், இவற்றுடன் சம்மந்தப்படாமல் இன்பமூட் டுவதையே மையமாகக் கொண்டு எழுதுவோர். இவர்கள் வணிக எழுத்தின் வியாபாரிகள்.*

*இன்னொரு பிரிவினர் சமுதாய முரண்பாடுகளை யும் பிரச்சினைகளையும் ஓரளவுக்கு நோக்கி அவற்றைத் தமது எழுத்தின் பொருளாகக் கொள்பர்கள். சமுதாயத்திலே பரவலாய்க் காணப்படும் துன்ப துயரங்களை உணர்ச்சியின் அடிப்படையிலே அநுதாபத்துடன் பார்க்கும் இப்பிரிவினர் முந்திய பிரிவினரோடு ஒப்பு நோக்குமிடத்து தம்மைச் சுற்றியுள்ள யதார்த் தத்தை எதிர்நோக்குகின்றனர் என்பதில் ஐய மில்லை. எனினும் சமுதாய நிலமைகளைப் பிரதிபலித்தாலே போதும் என்னும் எண்ணம் இவர்களில் பெரும்பாலானோரைப் பற்றிக் கொண்டிருக்கிறது.*

*அதாவது முதற்பிரிவினர் பிரச்சினைகள் இருப் பதையே எழுத்தில் பிரதிபலிக்கவில்லை, அத னால் அப்பிரச்சினை இலக்கியத்துக்கு உகந்த உரிய-பொருள்கள் அல்ல என்னும் கருத்தைக் கொண்டவராய் உள்ளனர். இரண்டாவது பிரிவி னரோ இதற்கு மாறாக, சமுதாயப் பிரச்சினைகள் இலக்கியத்தில் இடம் பெறுவதை ஏற்றுக் கொள்கின்றனர். எனினும், தமது கடமை அல்லது பொறுப்பு அவற்றைத் தத்ரூபமாகச் சித்திரித்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதே என்று கருதுகின்றனர். காலப்போக்கில் சமுதாயம் திருந்தும் என்ற நம்பிக்கை இவர்களுக் குண்டு.

ஆனால், அடுத்து என்ன? என்னும் வினா எழுதல் இயல்பே. அது மட்டுமன்று பிரச்சினைகளை மேலும் மேலும் கூர்ந்து நோக்கி ஒவ்வொன்றினதும் காரண காரியத் தொடர்புகள் விளங்கிக் கொண்டு எழுதும்போது அவற்றை நீக்க வேண்டிய அவசியத்தையும் அதற்கான வழி வகைகளையும் விவரித்தலும் தவிர்க்க இயலாததே. நோயை நுணுக்கமாக விளக்கி விவரித்தால் மட்டும் போதுமா? நோயாளியின் மீது இரக்கப்பட்டால் மட்டும் போதுமா? நோயின் வரலாற்றை ஆதியோடந்தமாய்க் கூறினால் மட்டும் போதுமா? நோய் தீர மருந்தும் மார்க்கமும் வேண்டாமா? இன்னும் ஒரு காரணமும் உண்டு. ஒரு காலகட்டத்தில் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த எழுத்தாளர்கள் புதுமையின் பெயரிலும் புரட்சி யின் பெயரிலும் இலக்கியத்தில் புகுத்திய பொருள்களும் சித்தரிப்பு முறைகளும் இன்று வர்த்தக வெளியீடுகளிலும் சாதாரணமாக இடம் பெறத்தக்கவையாகி விட்டன. இந்நிலையில் சமுதாயத்தில் காணப்படும் முரண்பாடுகளையும், துன்ப துயரங்களையும், போராட்டங்களையும் உதிரியான தனி மனிதர்களின் பிரச்சினைகளாக மாத்திரம் கண்டு காட்டாமல் அவற்றை வர்க்கங்களுக்கிடையே நிகழும் போராட்டத்தின் வெளிப்பாடுகளாகக் காண்பது இன்றியமையாத தாகிறது. இரண்டாவது பிரிவிலே தொடங்கிய போதும், விசேஷமான தனிப் பிறவிகளை இலக்கிய மாந்தராகக் கொண்டமையாலேயே ஒரு காலத்து "முற்போக்கு" எழுத்தாளர் ஜெயகாந்தன், பின்னர் 'பிரம் மோபதேசம்' செய்பவராக உரு மாறியுள்ளார். இது ஒரு குறிப்பிட்ட எழுத்தாளனது தனிப்பட்ட பலவீனம் மட்டுமன்று; அவன் பற்றிக்கொண்டிருந்த இலக்கியக் கோட்பாட்டிலே உள்ளார்ந்த பலவீனமாய் இருந்த அமிசத்தின் பரிணாமம். ஜெயகாந்தனை விதிவிலக்கான வில்லனாக நாம் விவரிக்க வேண்டியதில்லை. பல எழுத்தாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எடுத் துக்காட்டு என்றே கொள்ள வேண்டும். வர்க்க ஆய்வின் அடிப்படையில், தூலமான சந்தர்ப் பங்களில் பாத்திரங்களைச் சித்திரிக்கத் தவறும் எந்த எழுத்தாளனும் ஜெயகாந்தன் ஆவதற்கு அதிக நாள் பிடிக்காது."

இக்கருத்துக்கள் எழுத்தும் எழுத்தாளனும் தொடர்பான கைலாசபதியின் பார்வையை விளக்கப் போதுமானவை. அவர் தனது பல்கலைக்கழகக் கல்வியை முடித்துவிட்டு அதியுயர் பதவிகளைத் தேடி ஓடவில்லை. அவர் பத்திரிகைத் துறையைத் தேர்ந்தெடுத்தார். அவர் தினகரன் பத்திரிகையில் இணைந்த போது அதில் தமிழ்நாட்டு எழுத்தின் தாக்கமே இருந்தது. தமிழகத்து எழுத்தாளர்களும் அறிஞர்களும் பெருமளவில் தினகரன் பத்திரிகைக்கு எழுதி வந்தனர். இந்திய இலக்கியங்களுக்கும் எழுத்துக்குமான சந்தையாக இலங்கை இருந்ததேயன்றி அது இலங்கை எழுத்துக்கும் எழுத்தாளர்களுக்குமான களமாக இருக்கவில்லை. இதை மாற்றியவர் கைலாசபதி. 1959ம் ஆண்டு அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்றது முதல் ஈழத்து இலக்கியத்துக்கும் படைப்பாளிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததோடு அவை மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படுவதை உறுதி செய்தார். ஈழத்து இலக்கியம் மக்கள் இலக்கியமாக விரிவடைந்ததில் கைலாசபதியின் பங்களிப்பு முக்கிய மானது. தினகரனில் பல புதிய முயற்சிகளை அவர் அறிமுகப்படுத்தினார். வாசகர்களின் பங்களிப்பையும் தொடர்ச்சியான பங்குபற்றலையும் உறுதிப்படுத்த திங்கட் கிழமைகளில் திங்கள் விருந்து, புதன்கிழமைகளில் புதன் மலரும், வெள்ளிக்கிழமைகளில் முஸ்லீம் மஞ்சரியும் சனிக்கிழமைகளில் மாணவர் உலகமும் அறிமுகப்படுத்தப் பட்டன. ஐந்து எழுத்தாளர்கள் ஆளுக்கொரு அத்தி யாயமாக எழுதிய "மத்தாப்பூ" நாவலும் தினகரனில் வெளியானது. மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் இந்த நாவல் தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்தது. வெவ்வேறு எழுத்தாளர்கள் எழுதுவதால் இதைத் தொடர முடியுமா என்ற வினா ஒருபுறமும் நான்கு பேர் எழுதிய நாவலை எவ்வாறு ஐந்தாமவர் நிறைவு செய்யப் போகிறார் என்ற வினா பலரிடம் இருந்தது. ஆனால் இந்நாவலை மிகவும் திறமையாக என்.கே. ரகுநாதன் நிறைவு செய்தார். நாட்டின் எந்த மூலையில் இலக்கியக் கூட்டம் நடந்தாலும் அச்செய்தி தினகரனில் இடம்பெற்றது. அறிவியல் கட்டுரைகள் இலகு தமிழில் தொடர்;ச்சியாக வெளிவந்தன.

சாதிய ரீதியால் ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட பல எழுத்தாளர்களுக்கான வாய்ப்பை வழங்குவதற்கான துணிவு அவருக்கு இருந்தது என்றும் இது பல புதிய திறமையான எழுத்தாளர்களை ஈழத்தமிழ் இலக்கியவுலகு பெறுவதற்குக் காரணமானது என்றும் இதுவே கைலாசபதியின் முக்கியமான பத்திரிகைத்துறைப் பங்களிப்பு என்று பேராசிரியர் நந்தி குறிப்பிடுகிறார். ஒரு பத்திரிகையாளனுக்கு அவசியமான, நிதானமும் பொறுமையும் கைலாசபதிக்கு இருந்தன. அவர் தன்னுடன் பணியாற்றியவர்களை மிகுந்த மரியாதையுடனும் நட்புடனும் நடாத்தினார். எழுத்தின் முக்கியத்துவம் பற்றிய அவரின் பார்வை அவரது மார்க்சிய அரசியற் கோட்பாட்டின் வழிப்பட்டது என்று அவருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிய எஸ். அகஸ்தியர், நடா என்றறியப்பட்ட செல்லப்பா நடராஜா ஆகியோர் கூறுகின்றனர். தனது இறுதிக்காலம் வரை பத்திரிகையாளர்களுடனும் எழுத்தாளர்களுடனும் நட்புடன் இருந்தவர் கைலாசபதி. எழுத்துக்கு உரிய மதிப்பையும் அது மக்களுக்கானது என்ற நிலைப்பாட்டில் உறுதியையும் கொண்டிருந்தவர். பேராசிரியர் சி. தில்லைநாதன் அவரது பங்களிப்பின் ஆழத்தையும் அவரது சமூக இயங்கியலின் ஒரு பகுதியையும் இவ்வாறு நினைவுகூர்கிறார்:

*"கல்வியைப் பொறுத்தவரையில் தனிப்பட்ட முறையில் அதனை ஈட்டிப் பெருக்குவதிலும் அதன் வழி உயர்நிலைகளை எய்துவதிலும் கைலாஸ் குறியாக இருக்கவில்லை. அன்று பொது மக்களிடைப் பிரபல்யம் பெற வாய்ப்பாக அமைந்த வள்ளுவன், கம்பன், சேக்கிழார், கச்சியப்பர் முதலான புலவர்களுள் ஒருவரையோ அல்லது சைவமும் தமிழும், பகுத்தறிவு, தமிழ்ப் பாதுகாப்பு முதலான பெயர்களில் நடைபெற்ற இயக்கங்களுள் ஒன்றினையோ பற்றிக் கொண்டு பிரசித்தி பெறக் கைலாஸ் முனையவில்லை. மனித வாழ்வோட்டங்களைப் புரிந்துகொள்வதிலும், புரிந்தவற்றைப் பிறரோடு பகிர்ந்து கொள்வதிலும், ஏனையவர்களிடம் பெறும் அனுபவங்களின் அடிப்படையில் தன் பார்வையை விசாலப்படுத்திக் கொள்வதிலும் துடிப்பு மிக்கவராகக் கைலாஸ் விளங்கினார். இயக்கரீதியாக இணைந்து செயற்படும் தன்மை அவரிடம் இளமை முதற் காணப்பட்டது. அந்த வகையில் ஓர் இலக்கிய ஆர்வலராக இருந்து பத்திரிகையாசிரியராகவும் தமிழ்ப் பேராசிரியராகவும் ஒரு பல்கலைக்கழக வளாகத் தலைவராகவும் உயர்த்த காலங்களிலும் எழுத்தாளர் பத்திரிகையாளர்களுடன் அவர்கொண்ட உறவு இறுகியதே தவிரத் தளர்ந்துவிடவில்லை."*

## யாழ் பல்கலைக்கழகத்தின் தளகர்த்தா

ஒரு கல்வியியலாளராகவும், விரிவுரையாளராகவும் பின்னர் பேராசிரியராகவும் கைலாசபதி மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு நின்றார். சமூக மேம்பாட்டிலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தியவராக அவர் இருந்தார். தன்னை சமூகத்தின் ஒரு பகுதியாகக் கண்டார். ஆகாய அரியணைகளில் ஏறியமர்ந்து கொள்ளும் ஒருவராக அவர் இருக்கவில்லை. பல்கலைக்கழகங்களுக்கு வெளியேயும் அவர் சமூக மாற்றத்திற்கான பங்களிப்பை கல்விப் புலத்திலும் ஆய்வுப் புலத்திலும் இறுதிவரை நல்கிறார். இந்த அணுகுமுறையே பல்கலைக்கழகத்திற்கு வெளியே அரசு சார்பானதும் அரசு சார்பற்றதுமான பல கல்வி, பண்பாட்டு நிறுவனங்களில் அங்கம் பெற்று தமது கல்வித்துறைசார் பங்களிப்புக்களையும் வழங்கி நின்றார். இலங்கைப் பாடநூல் ஆலோசனைச் சபை, யுனெஸ்கோவிற்கான இலங்கை தேசிய ஆணைக்குழு, சமூக விஞ்ஞானிகள் சங்கம், இலங்கைக் கலைக்கழகம், இலங்கை வானொலி தமிழ் நிகழ்ச்சி ஆலோசனைக்குழு, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வெகுஜனத் தொடர்பு ஆய்வுக் கழகம் எனப் பலவற்றில் முதன்மையானதும் முன்னோடியானதும் பங்களிப்பு இவருடையது. இவரது உலகப் பார்வையும் வரித்துக் கொண்ட தத்துவமுமே அதை அவருக்குச் சாத்தியப்படுத்தின.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உருவாக்கத்தில் அவரது பங்களிப்பு அளப்பரியது. அதை விளங்கிக் கொள்ள அது உருவான சூழலைப் புரிந்துகொள்ளல் வேண்டும். தமிழ்ப் பகுதிகளில் ஒரு பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கோரிக்கை 1942ம் ஆண்டு இலங்கைப் பல்கழைக்கழகம் தோற்றம் பெற்றதிலிருந்து வலுப்பெறத் தொர்டங்கியவொன்றாகும். குறிப்பாக கொழும்பு மற்றும் பேராதனை வளாகங்களுடன் தொடங்கிய இலங்கைப் பல்கலைக்கழகம் 1950களில் பௌத்த குருமாருக்கான பிரிவேனாக்களாக இருந்த வித்தியோதய மற்றும் வித்தியாலங்கார என்பவற்றை வளாகங்களாக மாற்றியதைத் தொடர்ந்து வலுப்பெற்றது. தமிழ் மக்களின் பொதுவான கோரிக்கையாக இருந்த "தமிழ் பகுதிகளில் ஒரு பல்கலைக்கழகம்" என்பதை தமிழ்க் காங்கிரசும் தமிழரசுக் கட்சியும் ஒரு அரசியல் கோஷமாக மாற்றின. இவ்விரு கட்சியினருக்குமிடையிலான அரசியல் முரண்பாடு பல்கலைக்கழக விடயத்திலும் எதிரொலித்தது. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழருக்கான "இந்துப் பல்கலைக் கழகம்" என்று கோர எஸ்.ஜே.வி. செல்வநாயகமோ "தமிழருக்கான தமிழ்ப் பல்கலைக்கழகம்" என்று கோரினார். ஒரு சாரார் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று கோரினர். இன்னொரு சாரார் அது யாழ்ப்பாணத்தில் அமைய வேண்டும் என்று கோரினர். இந்த வேறுபட்ட நிலைப்பாடுகள் இக் கோரிக்கையை அரசாங்கங்கள் தொடர்ச்சியாகத் தட்டிக் கழிக்க வழியேற்படுத்திக் கொடுத்தது.

இந்நிலையில் தமிழரசுக் கட்சி திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றைச் சுயாதீனமாக உருவாக்கப் போவதாக மக்களிடமிருந்து நிலங்களையும் பணத்தையும் கோரியது. நிதி சேர்ப்பு இயக்கம் ஒன்றும் நடைபெற்றது. தமிழரசுக் கட்சியால் நடாத்தப்பட்ட சுதந்திரன் பத்திரிகையில் 1960களில் இது தொடர்பான செய்திகள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமிருந்தன. இன்றுவரை இவ்வாறு சேர்க்கப்பட்ட பணத்திற்கும் வாங்கப்பட்ட காணிகளுக்கும் என்ன நடந்தது என்ற உண்மை சொல்லப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1965இல் உருவான ஐ.தே.க அரசாங்கத்தில் இவ்விரு கட்சிகளும் அங்கம் வகித்தன. தமிழ்க் காங்கரஸின் மு. சிவசிதம்பரம் துணை சபாநாயகராகவும் தமிழரசுக் கட்சியின் மு. திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரா கவும் பதவி வகித்தனர். ஆனால் பல்கலைக்கழகம் தொடர்பில் எதுவித செயற்பாடுகளையும் இவ்விரு கட்சிகளும் முன்னெடுக்கவில்லை. இவ்விரு கட்சிகளின் ஆதரவின்றி அரசாங்கத்தை நடாத்துவதற்கான பெரும் பான்மை ஐ.தே.க அரசுக்கு இருக்கவில்லை. ஆனாலும் பல்கலைக்கழகம் தொடர்பிலோ தமிழ் மக்களுக்குத் தீர்வு தொடர்பிலோ எதுவித அழுத்தத்தையும் கொடுக்கவில்லை.

1970களில் பதவிக்கு வந்த சிறிமாவோ பண்டாரநாயக்க அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் வளாகம் ஒன்றை அமைப் பதற்கான வேலைகளில் இறங்கியது. அரசாங்கத்தின் இம்முயற்சிக்கு யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் பலத்த ஆதரவு இருந்தது. ஆனால் இது நடைபெற்றால் தங்களது அரசியல் எதிரிகளான இடதுசாரிகளும் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பாவும் வெற்றிபெற்று விடுவார்கள். தம்மால் இயலாததை இன்னொருவர் செய்வதை அனுமதிக்கக் கூடாது என்பதில் தமிழரசுக் கட்சியினரும் காங்கிரஸ்காரர்களும் கவனமாக இருந்தனர். இதைத் தடுக்க பல்வேறு கட்டுக்கதைகள் கட்டப்பட்டன. ஆனாலும் பல்கலைக்கழகத்தைத் ஆரம்பிக்கும் வேலை கள் வேகமெடுத்த நிலையில் இதன் தலைவராக பேராசிரியர். க. கைலாசபதி நியமிக்கப்பட்டார். இக்காலப் பகுதியில் தமிழரசுக்கட்சியின் ஆதரவாளரான பேராசி ரியர். சு. வித்தியானந்தனை தலைவராக நியமிக்குமாறு தமிழரசுக்கட்சி அரசாங்கத்தைக் கோரியது. ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதனைத் தொடர்ந்து இச்செயற்பாட்டைக் குழப்பும் நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கினர்.

கைலாசபதி யாழ்ப்பாணத்திற்கு வந்த முதல்நாள் இரவு அவர் தங்கியிருந்த வீட்டின் மீது வெடிகுண்டு வீசப்பட்டது. வீட்டிற்கு சிறிது சேதம் ஏற்பட்டதே தவிர யாருக்கும் காயம் ஏற்படவில்லை. உறுதி குலையாத கைலாசபதி மறுநாள் காலை தன்னைச் சந்திக்க வந்தவர் களிடம் "பனங்காட்டு நரி இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்சாது" என்று சிரித்துக் கொண்டே சொன்னாராம். யாழ்ப்பாணம் வந்த கைலாசபதி பல்கலைக்கழக உருவாக்கப் பணிகளை அங்கு வேலைபுரியும் பணி யாட்களோடு சேர்ந்து தானும் ஒருவராக இணைந்து பணியாற்றினார். எல்லா வேலைகளையும் முன்னின்று கவனித்தார். பல நாட்கள் தலைமுழுக்கத் தூசியோடு ஒரு தொழிலாளியைப் போல், அவர் இரவு நேரத்தில் பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறுவதைக் கண்ட தாக பல்கலைக்கழகத்திற்கு அருகில் இருந்தவர்கள் நினைவுகூருகிறார்கள். கைலாசபதியின் இச்செயல் அங்கு பணியாற்றிய பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஒரு பேராசிரியர், அதுவும் வளாகத் தலைவராக நியமிக்கப் பட்டவர் தொழிலாளர்களோடு வேலை செய்வது, உதவுவது, அவர்களுடனேயே தேநீர் அருந்துவது போன்றன சாதியரீதியில் படிநிலைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்கும் யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய மாற்றமாக இருந்தது. இக்காலப்பகுதியில் அங்கு பணியாற்றிய தொழிலாளர் ஒருவர் இந்நிகழ்வு குறித்து இவ்வாறு பகிர்ந்து கொண்டார்:

*"பேராசிரியரின் நடத்தை எங்களுக்குத் தொடக் கத்தில் மிகவும் விநோதமாகவும் பயமாகவும் இருந்தது. ஒருபுறம் இவர் ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறார் என்ற கேள்வியும் மறுபுறம் நாங்கள் ஏதாவது பிழையாகச் செய்கிறோமா என்ற சந்தேகமும் ஒருங்கே எழுந்தது. எங்கள் வாழ் நாளில் எஜமானர்கள் எம்மோடு சேர்ந்து வேலை செய்ததைக் கண்டதில்லை. இது புது அனுபவம். சில நாட்களிலேயே அவர் எப்படிப்பட்டவர் என்றும் அவர் எங்களுக்கானவர் என்பதையும் புரிந்து கொண்டோம். எங்களது பிள்ளைகள் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு நம்பிப் போகலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியவர் பேராசிரியர். அந்த நம்பிக்கை அவர் பதவியிலிருந்து அகற்றப் படவுடனே போய்விட்டது. இன்று சாதியச் சுடுகாடாய் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இருக்கிறது."*

பல்கலைக்கழகம் தொடங்கப்படுவதை நிறுத்துவதற்கு ஏராளமான திருகுதாளங்களை தமிழரசுக் கட்சி செய்தது. இதை அனைத்தையும் முறியடித்து யாழ்ப்பாண மக்களின் ஆதரவுடன் 1974ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகம் திறக்கப்பட்டது. கைலாசபதி முன்னுதாரணமாக இருந்தார். தனது சைக்கிளில் பல்கலைக்கழகத்திற்கு வருவார். அனைத்து விடயங்களிலும் அக்கறையாக இருப்பார். ஒரு தனித்துவமான தரமான பல்கலைக்கழகத்தை உருவாக்குவதற்கான பணிகளில் அவர் ஈடுபட்டார். அவருக்குப் பல்கலைக்கழகம் தொடர்பான தெளிவான நீண்டகால நோக்கு இருந்தது. 1974ம் ஆண்டு ஆனி மாத தாயகம் இதழில் பரமன் என்ற புனைபெயரில் 'வடக்கில் ஒரு பல்கலைக்கழகம்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை இதை மிகத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. இன்றைய காலப்பகுதியிலும் தமிழ்ச் சமூகத்திற்கான பல்கலைக்கழகம் என்றால் என்ன என்ற வினாவுக்கு பதில்தரும் கட்டுரையது. இலங்கையின் ஏனைய வளாகங்களில் என்ன நடக்கிறது, எவை கற்பிக்கப்படுகின்றன போன்றவற்றைப் பற்றிய ஒரு குறுக்குவெட்டுப் பார்வையையும் புதிதாக உருவாகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கவனம் செலுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய துறைகள் பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் எடுத்துக்காட்டியுள்ளார். குறிப்பாக மூன்று துறைகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கவனம் செலுத்த வேண்டும் என்று இக்கட்டுரையில் கைலாசபதி எழுதுகிறார்.

முதலாவது, இலங்கை ஒரு தீவாகையால், மீன்வளம், மீன்பிடி தொடர்பான ஆய்வுகள் அவசியமாகின்றன. யாழ்ப்பாணம் ஒரு குடாநாடாக இருப்பதால் இவ்வகையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான களச்சூழல் வாய்ப்பாக இருக்கிறது. இரண்டாவது, யாழ்ப்பாணத்தில் நீர்ப்பிரச்சினை கவனிப்புக்குரியது. உவர்நீர்நிலைகள் அதிகமுள்ளன, அதற்கு அண்மித்த பகுதிகளில் விளைநிலங்கள் இல்லை. அவற்றை விளைச்சல் நிலங்களாக மாற்றவும் நீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காண்பதற்கான ஆய்வுகள் இடம்பெறல் வேண்டும். மூன்றாவது, வடபகுதியின் விவசாயமுறை ஏனைய பகுதிகளில் இருந்து வேறுபட்டது. அத்தகைய விவசாய முறைகளை மேலும் விரிவாக்குவதற்கான ஆராய்ச்சி முயற்சிகளும் சிறுகைத்தொழிலை ஊக்குவிக்கும் செயல்களும் இப்புதிய பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படுவது பயனுள்ளது.

இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் தனது பொன்விழாவை நெருங்குகிறது. ஆனால் ஆய்வியல் நோக்கில் வடபகுதிக்கான ஒரு பல்கலைக்கழகமாக மிளிர்ந்துள்ளதா என்ற வினா நியாயமானது. தனது கட்டுரையை பின்வருமாறு, ஒரு எச்சரிக்கைக் குறிப்புடன் கைலாசபதி நிறைவு செய்தார். அது இன்றும் பொருந்தி வருகிறது.

*"வடபகுதியில் அமையும் வளாகம், தமிழர்களுக் கான அகதி முகாமாகவோ, பழம்பெருமை பேசுவதற்கான நூதனசாலையாகவோ அமையக் கூடாது. தத்தமது குறுகிய அரசியல் நோக்கங் களுக்குப் பயன்படுத்தும் ஒரு பெயர்ப் பலகைப் பல்கலைக்கழகமாகவோ அமைந்துவிடலாகாது."*

வளாகத் தலைவராக இருந்த குறுகிய காலத்தில் ஒரு வளாகமாக அதை உருமாற்றுவதில் கைலாசபதியின் பங்களிப்பு அளப்பரியது. தனது நூல்களை வழங்கி பல்கலைக்கழக நூலகத்தை உருவாக்கினார். பல ஆய்வறிவாளர்களின் துணையுடனும் துறைசார் நிபுணர்களின் உதவியுடனும் தரமான பாடத்திட்டங்களை உருவாக்கினார். உயர்கல்வி, யாழ்;ப்பாணத்தில் உயர்ந் தோருக்கும் கற்றோருக்குமானதாக மட்டுமே கருதப்பட்ட சூழலில் அனைவருக்குமான பல்கலைக்கழகம் என்ற நிலையை உருவாக்க அயராது உழைத்தார். யாழ்ப் பாணத்தில் பல்கலைக்கழகம் உருவாவதை எதிர்த்த தமிழரசுக் கட்சியினர் 1977இல் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட வுடன் ஓடோடிச் சென்று புதிய பிரதமரான ஜே.ஆர். ஜெயவர்த்தனவிடம் கைலாசபதியை நீக்கி வித்தியானந் தனை தலைவராக நியமிக்கும்படி கேட்டுக்கொண்டனர். 1977 யூலை மாதம் 23ம் திகதி ஜே.ஆர் பிரமரானார். யூலை 31ம் திகதிவரையே கைலாசபதி தலைவராக இருந்தார். இந்நிகழ்வை அக்காலப்பகுதியில் ஜெயவர்த்தன விடம் பணியாற்றிய அரசநிர்வாகி இவ்வாறு நினைவு கூருகிறார்:

*"தேர்தலில் இரண்டாவது அதிகூடிய ஆசனங் களைப் பெற்று எதிர்க்கட்சியாக தமிழர் விடுதலைக்கூட்டணி இருந்தது. அவர்கள் பிரதமரைச் சந்திக்க வந்திருந்தனர். அக் கூட்டத்தில் 'உங்களுக்கு என்னால் என்ன செய்ய முடியும்' என்று ஜே. ஆர். கேட்டார். அமிர்தலிங்கத்தின் பிரதான கோரிக்கைகளில் ஒன்றாக யாழ்ப்பாண வளாகத் தலைவரை மாற்றுவது இருந்தது. நான் இதை எதிர் பார்க்கவில்லை. ஜே.ஆரும் தான். வேறும் பல விடயங்கள் பேசப்பட்டன. ஆனால் ஜே.ஆர். இலகுவில் கைக்கெட்டுவதைப் (low hanging fruit) பற்றிக் கொண்டார். அவரது பிரதமர் பணியில் மேற்கொண்ட முதற்கட்ட நிய மனங்களில் சு. வித்தியானந்தனை நியமித்ததும் ஒன்று. அக்காலத்தில் யாழ்ப் பல்கலைக் கழகம் கைலாசபதியின் தலைமையில் நல்லதொரு திசைவழியில் வளர்ந்து கொண்டிருந்தது. இந்த மாற்றம் தேவையற்றது என்று எனக்குத் தோன்றியது. இது குறித்து என்னோடு கூட்டத்தில் இருந்த இன்னொரு மூத்த அதிகாரி சொன்னதே நினைவுக்கு வருகிறது: They always get the priorities mixed up".*

பதவியில் இருந்து அகற்றப்பட்ட கைலாசபதி, அமெரிக்காவின் அயோவா பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று ஓராண்டுகால கல்விவிடுப்பு எடுத்துக் கொண்டு அமெரிக்கா சென்றார். கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் வருகைதரு விரிவுரையாளராகப் பணியாற்றினார். அதைத் தொடர்ந்து இலங்கை வந்தார். அதைத் தொடர்ந்து நடந்தவற்றைப் பற்றிச் சொன்ன பேராசிரியர் சி. தில்லைநாதன், கைலாசபதி கொழும்பிலோ அல்லது பேராதனையிலோ தான் கற்பிப்பார், யாழ்ப் பாணம் வரமாட்டார் என்பதே பொதுவான எண்ணமாக இருந்தது என்கிறார். வளாகத் தலைவராக இருந்தவர் எவ்வாறு ஒரு பேராசிரியராகப் பணியாற்ற முடியும் என்பதே யாழ்மையவாத சிந்தனையாக இருந்தது. ஆனால் கைலாசபதி யாழ்ப்பாணம் வந்து, துறைத் தலைவராகப் பதவியேற்றது தமிழ்த்தேசிய வாதிகளுக்கு உவப்பானதாக இருக்கவில்லை என்றும் சொன்னார்.

1978இல் யாழ்ப்பாணம் மீண்ட கைலாசபதியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்புக்கள் பலதுறைகளில் பல்கிப் பெருகுகின்றன. குறிப்பாக அரசியல் சார்ந்து தனது கருத்துக்களை தொடர்ச்சியாக வீரியமுடன் எழுதவும் அமைப்புகளில் பங்களிக்கவும் தொடங்கினார்.

## அரசியலும் அமைப்பாக்கமும்

கைலாசபதி தன்னை அரசியலுக்கு அப்பாற்பட்டவராகவோ, நடுநிலையாளராகவோ காட்டிக் கொள்ள முனைந்ததில்லை. தனது எழுத்திலும் செயலிலும் தனது அரசியல் நிலைப்பாடு பற்றிய தெளிவை இறுதிவரை வெளிப்படுத்தினார். சர்வதேச அரசியல் குறித்தும் உள்நாட்டு அரசியல் குறித்தும் நிறையவே எழுதினார். தனது பேச்சுக்களிலும் கலந்துரையாடல்களில் இவ் விடயம் குறித்துத் தொடர்ந்து கதைத்தார். அரசியல் ஈழத்தமிழர் வாழ்வியலில் பிரிக்கவொண்ணாத அம்சம் என்பதை வலியுறுத்தினார். அரசியலுக்கு அப்பாற்பட்ட ஒரு புத்திஜீவியாகவோ, சிந்தனையாளராகவோ தன்னை அவர் முன்னிறுத்தவில்லை. அரசியல் கடந்த பேராசிரியராக அவர் இருக்கவில்லை. அதேவேளை அமைப்பாக்கத்தின் அவசியத்தை நன்கு அறிந்திருந்த கைலாசபதி இலக்கிய அரசியற் தளங்களில் அமைப்புகள் கட்டி வளர்க்கப்படுவதை வலியுறுத்தி வந்ததோடு அதுசார்ந்த தனது பங்களிப்புகளையும் வழங்கினார்.

முனைவர் பட்ட ஆய்வுக்காக பிரித்தானியாவுக்கு செல்லும்வரை சண்முகதாசன் தலைமையில் இயங்கிய இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வெள்ளவத்தை கிளையில் உறுப்பினராக இருந்து செயற்பட்டார். அவரது இடதுசாரிச் சார்பு வெளிப்படையானதாக இருந்தது. நாடு திரும்பிய பின்னர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான தொழிலாளியில் அபேதன் என்ற பெயரில் கட்டுரைகளை எழுதினார். கலாசார ஊடுருவல் பற்றிய விரிவானதும் விளக்கமானதுமான கட்டுரைகளையும் அக்காலத்து பூகோள அரசியலின் தன்மைகள், இந்தியாவின் நிலைப்பாடு, முதலாளித்துவத்தின் வருகை எவ்வாறு ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் மூன்றாமுலக நாடுகளை நகர்த்துகிறது போன்ற பலவற்றைப் பற்றித் தொடர்ச்சியாக எழுதினார். தொழிலாளியில் கைலாசபதியால் எழுதப்பட்ட கட்டுரைகள் இன்னமும் தொகுக்கப்படவில்லை. இவை தொகுக்கப்பட வேண்டும்.

1978ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு சீன மக்கள் குடியரசில் இருந்து அழைப்பை ஏற்று சீனாவுக்குச் சென்றார். அப்பயண அனுபவங்களைத் துணைவியார் சர்வமங்களத்துடன் இணைந்து 'மக்கள் சீனா: காலமும் கருத்தும்' என்று நூலாக வெளியிட்டார். யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழில் வெளிவந்த "செம்பதாகை" இதழிலும் ஆங்கிலத்தில் வெளிவந்த "றெட்பனர்" பத்திரிகையிலும் தொடர்ச்சியாக எழுதினார். செம்பதாகையில் ஜனமகன் என்னும் புனைப்பெயரில் "கருத்தும் கண்ணோட்டமும்" எனும் தலைப்பில் எழுதினார். தமிழ்த் தேசிய அரசியலின் திசைவழி, தமிழ்த் தேசியவாதிகளின் மீதான கடுமையான விமர்சனம், தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் போன்றவற்றைப் பற்றி எழுதினார். இக் கட்டுரைகளும் இன்னும் தொகுக்கப்படவோ நூலுருப் பெறவோ இல்லை.

இதே செம்பதாகையில் "உலக அரங்கில் அங்கும் இங்கும்" எனும் தலைப்பில் உதயன் எனும் பெயரில் சர்வதேச நிலைமைகளை எழுதினார். அதேபோல ரெட்பெனரில் சர்வதேச விடயங்களை எழுதினார். சர்வதேச நிலைமைகள் குறித்து செம்பதாகையிலும், ரெட்பெனரிலும் கைலாசபதி எழுதிய கட்டுரைகள் "சர்வதேச அரசியல் நிகழ்வுகள் பற்றி: 1979 – 1982 என்ற தலைப்பில் புதிய பூமி வெளியீட்டகம் 1992ம் ஆண்டு நூலாக வெளியிட்டது. அவரது அரசியல் நிலைப்பாடுகளை விளங்கிக்கொள்ள இந்நூல் உதவுகிறது. இந்நூலில் தமிழ் மக்களும் சர்வதேச அரசியல் பற்றியும் கைலாசபதி சொல்கிற விடயங்கள் இன்றும் கவனிப்புக் குரியன:

*"அநேகமாக மக்கள் சர்வதேச விவகாரங்களில் அக்கறை கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதனைப் பற்றிய உறுதியான தரவுகளையோ ஆழமான ஆய்வுகளையோ பெறுவதற்கு ஒரு போதும் அவர்களுக்கு வாய்ப்புக் கிட்டுவதில்லை. செய்தித் துறையில் காலமும் பத்திரிகைத்தாளில் இடமும் வரையறைக்குட் பட்டதாக இருந்த போதிலும் பாரிய உலகளாவிய செய்தி ஸ்தாபனங்கள் உலகச் செய்திகளை வாசகர்களுக்கு வழங்குவதில் கட்டுப்படுத்தலும் சுய செல்வாக்கிற்குட் படுத்தலும் செய்வதனால் பெரும்பாலான முக்கிய செய்திகளைப் பற்றி பல அறிவுசால் பெருமக்களும் கூட மேலோட்டமான கருத்துக்களையே பெறுகின்றனர்.*

*மேலாதிக்க வல்லரசுகள் தங்களுடைய பிரச்சாரப் பீரங்கி வீச்சுக்களை நடத்துகிறார்கள். இதனால் அடிக்கடி பிரச்சினைகள் மறைக்கப்பட்டு விடுகின்றன. திரிபுபடுத்தப் பட்டவை உண்மைகளாக மாறுகின்றன. பிழையானவை புனிதமான உண்மைகளாக நிலை நிறுத்தப்படுகின்றன. இதில் உள்ள ஆளுமை சக்திகள் பெரும்பாலான செய்திகளை உருவாக்கி நெறிப்படுத்துகின்றன. இவர்கள் இவ்வாறு செய்வதன் மூலம் உலக விவகாரங்களில் ஒரு பக்கப் போக்குப் பாணியை ஏற்றுக் கொள்ளத் தூண்டுதல் செய்கின்றனர். இது உலகின் அனைத்து மக்களினதும் நலன்களுக்கு எதிரானதாகும்."*

கைலாசபதி எழுதுவதுடன் மட்டும் நிறுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவரல்ல. அவர் இயக்கத்திலும் அமைப்பாக்கத்திலும் மிகுந்த கவனம் செலுத்தினார்;. குறிப்பாக தான் எழுதிய பத்திரிகைகளின் விநியோகம், மக்கள் மத்தியிலான ஆதரவு, கிடைக்கின்ற விமர்சனங்கள் என்பன பற்றியெல்லாம் அக்கறை கொண்டார். ஆரம்பத்தில் ஆயிரம் பிரதிகள் விற்பனையான செம்பதாகை 1979 அளவில் ஐயாயிரம் பிரதிகள் வரை விற்பனையானது. இதற்கு முக்கிய காரணம் பத்திரிகையின் வெகுஜனத் தன்மை. தனது எழுத்துக்களின் ஊடும், ஆலோசனைகளின் ஊடும் செம்பதாகை சாதாரண மக்களுக்கான பத்திரிகையாக இருக்க வேண்டும் என்பதில் கைலாசபதி கவனமாக இருந்தார். இந்த அனுபங்கள் பற்றி தோழர் சி.கா. செந்திவேல் பின்வருமாறு பகிர்ந்து கொள்கிறார்.

*"பேராசிரியர் கைலாசபதியின் இறுதிக்கால ஆண்டுகளிலே அவருடன் மிக நெருக்கமாகி அரசியல் பத்திரிகைப் பணியிலே ஈடுபட சந்தர்ப்பம் கிடைத்த தோழர்களில் நானும் ஒருவன் என்பதையிட்டு மன நிறைவு கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவருடன் இணைந்து நின்று செயற்படுவதே தனிச் சிறப்பு என்றே கூறுதல் வேண்டும். சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பல்வேறு விஷயங்கள் மத்தியிலும் பத்திரிகையின் வளர்ச்சி பற்றியும் அதனால் உருவாகியுள்ள அரசியல் தாக்கங்கள் பற்றியும் அவர் பேசுவதற்கு தவறுவதே இல்லை. அவரது அக்கறையை பத்திரிகைக்கான இரண்டு பக்க விடயங்களை எழுதி அனுப்புவதில் கடைப்பிடித்த ஒழுங்கு முறையில் தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது. சில வேளைகளில் தானே பத்திரிகைக் காரியாலயத்திற்கு நேரில் வந்து விடயங்களை கொடுத்துச் செல்வார். அவர் தனக்கு ஏற்பட்ட நோய்க்கு வைத்தியம் செய்வதற்காக கொழும்பு செல்வதற்கு ஓரிரு நாட்கள் முன்பாக கலந்து கொண்ட பாரதி ஆய்வரங்கு நிகழ்ச்சிக்குப் பின் உரையாடும் போது பத்திரிகையின் ஒரு பக்கத்திற்கான விடயத்தையே எழுத முடிந்தது என்றும் அடுத்த பக்கத்தை எழுத முடியாதளவிற்கு உடல் நிலை இடம் தரவில்லை எனவும் கூறி இருவாரத்தில் சிகிச்சை முடித்து கொழும்பில் இருந்து திரும்பிவிடுவேன். அதன் பின் தொடர்ந்து எழுத முடியும் என்றும் கூறிச் சென்றார். அன்றைய சந்திப்பே அவருடன் இறுதிச் சந்திப்பாகவும் அமைந்தது."*

அரசியல் ரீதியாகவும் இலக்கிய ரீதியாகவும் அமைப்பாக்கத்தின் முக்கியத்துவத்தை கைலாசபதி தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். தனது 50வது ஆண்டை இவ்வாண்டு நிறைவுசெய்யும் தேசிய கலை இலக்கியப் பேரவையின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் கைலாசபதி முக்கிய பங்காற்றினார். பேரவையின் இதழான "தாயகம்" தோற்றம் பெறுவதற்கு முக்கிய காரணியாக அமைந்தவரும் அவரே. தாயகம் முதலாவது இதழில் "இங்கிருந்து எங்கே" என்ற தலைப்பில் ஈழத்திலக்கியத்தின் திசைவழிகள் குறித்தான பயனுள்ள கட்டுரையை எழுதினார். தாயகம் வெளியீட்டு நிகழ்வில் அமைப்பாக்கத்தின் அவசியமும் பயனும் குறித்து வலியுறுத்தி உரையாற்றினார். மனிதர்கள் தனியாக அன்றி அமைப்பாகின்ற போது அதன் பயனும் திசையும் அதிகரிக்கும் என்பதை உணர்ந்தவர். வலியுறுத்தியவர், இறுதிவரை அமைப்பாக்கத்திலும் அமைப்புக்களில் உறுப்பினராகவும் செயற்பட்டவர்.

## நிறைவாக

ஈழத்தமிழ்ச் சமூகத்தில் ஒரு மனிதராக கைலாசபதியின் பங்களிப்பின் முக்கியத்துவம் அவரது கொள்கை நிலைப்பாட்டால் வழிநடாத்தப்பட்டது. மார்க்சிய லெனினிச நிலைநின்று அவர் சமூகத்தையும் மக்களையும் அணுகினார். இதனால் சாதிய-வர்க்க ரீதியில் இறுகிப் போயிருந்த ஒரு சமூகத்திற்கு மாற்றுச் சிந்தனையைக் கொண்டு வந்ததோடல்லாமல் அதைத் தன் செயலிலும் காட்டினார். வளாகத் தலைவராக அவருக்கிருந்த அதிகாரமும் பேராசிரியராக அவர் கொண்டிருந்த செல்வாக்கும் அதிகார உயர் பீடக் கதிரைகளில் இருந்து கட்டளையிடும் ஒருவராக அவரை மாற்றவில்லை. மாறாக எளிய மனிதர்களுடன் இயல்பாகப் பழகவும் சமூக அசைவியக்கத்தில் பங்கெடுக்கவும் திசைமாற்றப் பங்களிக்கவும் விமர்சனங்களை முன்வைக்கவும் ஏற்கவும் அவருக்கு இயலுமாயிற்று. அது கைலாசபதியை ஏனையோரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டிற்று. அவரது முன்னவர்களினதும் பின்னவர்களினதும் நடத்தை கைலாசபதியை தனித்துவமானவராகக் காட்டி நின்றது. ஈழத்தமிழ்ச் சூழலில் ஒரு பல்பரிமாணச் செயற்பாட்டாளராக அவரது பணி முன்னோடியானது. ஜனநாயகம் மிக்கதான, மாற்றுக்கருத்துக்களை வரவேற்கின்ற, ஏற்கின்ற, உரையாலுக்கான வாய்ப்பைத் தருகின்ற ஒன்றாக ஈழத்தமிழ்ச் சமூகம் இருக்கவேண்டும் என்று விரும்பியவர் கைலாசபதி. அதைப் பல்கலைக்கழகத்திலும் அதற்கு வெளியிலும் சொல்லிலும் செயலிலும் சாத்தியமாக்கியவர். அவர் மறைந்து நாற்பதாண்டுகள் கடந்துவிட்ட நிலையில் அவர் விரும்பிய ஜனநாயகம் மிக்க மாற்றுக்கருத்துக்களுக்கு மதிப்பளிக்கின்ற சமூகமாக ஈழத்தமிழ்ச் சமூகம் இருக்கின்றதா என்ற வினா பதிலை வேண்டியபடி காற்றில் கலக்கிறது, எதிர்காலம் குறித்த நம்பிக்கையோடு.

❐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்புறமும் குடிபெயர்ந்து செல்லும் புத்தன்

மா.ஜீவன்ராஜ்

எங்கும் துக்கத்திற்கு
அடையாள சின்னமாய் விளங்குவது கருப்பல்லவா ?
ஏன் இங்கு மட்டும்
ஒரு சேர ஆரஞ்ச் நிறமாக
மாறிப்போனது

வயிற்றுப் பசியில்
நொந்து சுமந்திங்கு
வாழும் நூற்றாண்டில்
சிலரின் சுகபோகத்திற்காக
உடைந்து கிடக்கும் தேசத்தில்
இனவாத துண்டுகளை
எங்கும் நட்டு வைத்து
பாத செருப்புகளே படாது
நிர்வாணமாய் கிடந்த நிலங்களில் இப்போதெல்லாம்
சுதந்திரத்தைத்
குழைத்து - பூசி மெழுகும் நினைவுத்தூபிகளை
அடக்குமுறையோடு நிறுவி
அதற்கும் புது வரலாறுகள் படைத்து எங்கும் பௌத்தத்தின்
காற்றை திணிப்பதையா புத்தன் சொல்லித் தந்தான் ?

அங்கே விழிகள் சிந்திய
அருவிகள் வற்றி உலர்ந்து
போவதற்கு முன்னே
காயம் சுமக்கும் நிலங்களில்,
நிலம் மட்டுமே கருணைக்கொண்டிருந்த வடக்கில்
புத்தனை போர்த்திக் கொண்டிருக்க!!
இவர்களின் அற்ப
இன நல்லிணக்கத்தின்
பாசாங்கில்
கிழக்கிலே
முஸ்லிம் சனங்களின் காணிகள்
துப்பாக்கிகள் கொண்டு
இராணுவ மயமாக்கப்படுகிறது.

இருநூற்றாண்டாய்
இங்கே
நிலமற்ற சமுகமாய் திரியும்
சனத்திற்கு கொடுக்கப்படாத
நிலச் சுதந்திரம்

நான்கிலிருந்து நாற்பதடி
கல் சிலைகளுக்காக
எங்கள் நிலங்கள் தாரைவாக்கப்பட்டு
குத்தகைக்குகூட எமக்கில்லாத
இந்த நிலம்
அவர்களுக்கு மொத்தமாக
இவ்வினத்தின் உழைப்பும்
சேர்ந்து கொடுக்கப்படுகிறது.

ஒருவேளை நாமும் இம்மண்ணில் புத்தனின்
பிள்ளைகளாக இருந்திருந்தால்
இருநூறு கடந்தும்
காத்திருந்திருக்க தேவையில்லை
போலும்....

தேசங்களையெல்லாம் சுற்றிவரும் புத்தனே!
வேற்றினத்தவர் எங்களுக்கு இந்நிலைமை வந்து
எங்களை
கொன்றழிப்பதோ புதிதல்ல!
ஆனால்
உன் காலடியில்
உன் மௌன மொழிகளிலேயே சிறந்தவற்றை
தெரிந்து
அறிந்து - உன்னையே போற்றும்
இருண்ட இந்நாட்டில்
உம்மின மக்களுக்கு இன்னும் கிடைக்காத
சுதந்திரங்கள்
பலவுண்டய்யா.

உனக்கோ சிலையேற்றி
ஒளியாக உன்னை ஏற்று
உழைக்கும்
அடித்தட்டு வர்க்கத்திற்கு,
இந்த பெரும்பான்மையே
கண்ணீர் துடைக்க
கைக்குட்டைகள் கொடுக்கச்
சொல்லி ஏன்
போதனைகளை போதிக்கவில்லை??

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே புத்தனின் சீடர்களுக்கு
இதுவரை யாரின்
அழுகுரல்களும்
ஓலங்களும்
பிதற்றல்களும்
இனவாத பதற்றங்களும்
செவிகளை எட்டவேயில்லை!
எட்டப் போவதுமில்லை.

உலோக தகடுகளில்
பௌத்த வரலாற்றை
பொறிக்க வேண்டும்
காவி வேட்டிகள் பறக்க வேண்டும்
பிற இனத்தின் எச்சங்கள்
இவர்களின் வரலாறுகளாக
மலர வேண்டும்,
உயர்ந்த மலைகளிலும்
நகரங்களிலும்
பெரிய பாறைகளிலும்
ஏன் சிறிய முச்சந்திகளிலும்
கூட புத்தன்- தன் காதுகளை
அடைத்துக் கொண்டு
கால்களை மடக்கிக் கொண்டோ
நின்று கொண்டோ
புது வரலாற்றைப் படைக்க
கட்டப்பட்டுக்கொண்டிருப்பார்.

புத்தனே!!!
உன் பெயர் கொண்டு
அத்தனை அராஜகமும்
இங்கே அரங்கேறிக் கொண்டிருக்கிறது, இதை நீ
கற்பிக்கவில்லையென்று
நாம் அறிவோம்!
மோகன புன்னகையில்
மூழ்கி இருக்கும் உன்
முட்டாள் சீடர்களுக்கு எப்போது
புரிய போகிறது
உன்னுடைய சிரிப்பின் அர்த்தமும் போதனைகளின்
ஆழமும்...

உன் புன்னகைக்கு பின்னால்
உள்ள அமைதியின்
பொருள் புரியவில்லை.
உன்னுடன் சேர்ந்து சிரிக்கவும்
இந்நாட்டில் சுதந்திர இல்லை
நீ(நீங்கள்) எங்களுடன் சேர்ந்து அழுவதற்கும் அனுமதி
இல்லை...




வானம் எங்கள் வசம்
(பிள்ளைப் பாடல்கள் )
இசைப்பா அரங்கு
யானைத்தாத்தா தேவன்பூதனார்
விலை: ரூபா 250/=
வெளியீடு : காலாலயம் பதிப்பகம் இணைந்து
ஜீவந்தி வெளியீட்டகம்




சாதனா ஆடுறா...
(பிள்ளைப் பாடல்கள் )

யானைத்தாத்தா தேவன்பூதனார்
விலை: ரூபா 250/=
வெளியீடு : காலாலயம் பதிப்பகம் இணைந்து
ஜீவந்தி வெளியீட்டகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளின் உபத்திரவங்கள்

வள்ளியம்மை சுப்பிரமணியம்

சந்திரன் இரண்டு வருடங்கள் கழித்து ஓமானிலிருந்து ஊருக்கு வந்து விட்டார். பயணப் பொதிகளுடன் மருதனாமடச் சந்தையில் வாங்கி வந்த பழங்களுடன் இராசவள்ளிக் கிழங்கையும் மனைவி மீனாவின் கையில் கொடுத்து "இதை நன்றாக அவித்து தேங்காய்ப் பால், சீனி சேர்த்து செய்யுங்க. பிள்ளைகள் பள்ளிக்கூடத்தால் வந்தபிறகு எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்" என்று கூறினார்.

'அண்ணன் பயணத்தால் வந்து விட்டார்' என்று அறிந்த தங்கைமார் இருவரும் தமையன் வீட்டிற்கு வந்து சேர்ந்தனர். மச்சாள்மாரைக் கண்டதும் மீனா "தேவி, பாமா இருவரும் வீட்டிலே இருங்க. நானும், அம்மன் கோவிலுக்குப் போய் ஒரு அர்ச்சனை செய்வித்துக்கொண்டு ஓடி வாறன்" என்று கூறிவிட்டு அரிச்சனைத் தட்டுடன் கோவிலுக்குப் புறப்பட்டாள்.... மச்சாள்மார் இரண்டுபேரும் தங்கள் வீடுகளுக்குப் புறப்படுகிற நேரம் மீனாவும் கோவிலில் இருந்து திரும்பினாள். தனது கணவன் சுகமே திரும்பி வந்ததனால்... அம்பாளுக்கு தனது காணிக்கையை திருப்தியாகச் செய்து முடித்துவிட்ட திருப்தி அவளுக்கு .வீபூதிப் பிரசாதங்களைப் பெற்றுக் கொண்ட அவர்கள் தங்கள் வீட்டுக்குப் போய்விட்டார்கள்.

பட்டுப்புடவையைக் கழற்றி வைத்துவிட்ட மீனா... சமையற் கட்டுக்குள் நுழைந்தாள். இராசவள்ளிக்கிழங்கு பக்குவமாக அவித்துக் கடைந்து வைத்த சில்வர் சட்டி... வெறும் சட்டியாகக் காட்சியளித்தது.

மீனாவுக்கு தலை சுற்றியது. தலையில் கைவைத்த அவள்... 'இரவுக்கு சாப்பிட நன்றாக இருக்கும்' என்ற நினைப்பில் ... அடுப்பிலிருந்து இறக்கியவுடன் கொஞ்சம் ஒரு கிண்ணத்தில் போட்டு... ஆவி போக ஒரு பெட்டியால் மூடி வைத்திருந்தாள். அது சாப்பாட்டு மேசையின் மேலே ஒளித்து வைத்திருந்தாள். ஓடிப்போய் அந்தக் கிண்ணத்தையாவது எடுத்துச் சந்திரனுக்கு கொடுக்கலாம் என்ற ஆவலுடன் போனவளுக்கு பெட்டி திறந்து.... உள்ளே வைத்த கிண்ணமும் காணாமல் போயிருந்தது. மீனாவுக்கு கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை.

பசியோடு வரப்போகும் கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் சமையல் செய்ய ஆரம்பித்தாள். கணவன் கேட்டால் நாளைக்குச் செய்து தருகிறேனப்பா. இன்று கோவிலுக்குப் போனதால் செய்ய முடிய வில்லை' என்று சொல்லிச் சமாளித்து விடலாமென்று தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொண்டு மரக்கறிகளை வெட்டுகிறாள்.

'ஓ... பெரியமச்சாள் தான் எடுக்கிறா...'

"ஹலோ... சொல்லுங்க..."

மறுபுறத்திலிருந்து "மீனா... தம்பி வாங்கி வந்த இராசவள்ளிக் கிழங்கு ஒரு சாக்குக்குள்ளே இருப்பதைக் கண்டோம். அதை நீங்க அவருக்குச் செய்து கொடுங்க. நல்ல ருசியாக இருந்த படியால்... நாங்களும் சாப்பிட்டு... வீட்டிற்கும் எடுத்துவந்தோம்..."

'நல்ல காலம் அவர் வாங்கி வந்த பெர்பியூம், கைக்கடிகாரங்கள் அவரது சூட்கேசுக்குள் இருந்தபடியால் அவை தப்பிவிட்டன' என்று தனக்குத் தானே கூறிக்கொண்ட மீனா..... தான் முன்பு ஒரு முறை வாசித்த 'உறவுகளின் ஊழல்கள்' என்ற சிறுகதையை நினைந்தபடி தனது

சமையலை விரைவாகச் செய்கிறாள்......

❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகம் 200 தாயகம் சிறப்பிதழ் சில எண்ணங்கள்

மொழிவரதன்

'மலையகம் 200' எனும் விடயம் தற்பொழுது ஊடகங்களிலும், அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியிலும் பரவலாக பேசப்படுகின்றமையை நாம் அறிவோம். இப்பின்னணியில் இலக்கிய சஞ்சிகைகளும் இவ்விடயம் பற்றி தமது கவனத்தை திருப்பி உள்ளன.

மலையகம் 200 என்று வெறும் ஆர்ப்பாட்டம் செய்யாது. இவ்வேளையில் சஞ்சிகைகள் என்ற ரீதியில் என்ன செய்யலாம் என்றொரு வினா எழுகிறது. சில சஞ்சிகைகள் இவ்விடயம் பற்றி ஏதும் அறியாதுள் எமையைக் காணலாம் அல்லது அதில் பெரிய ஈடுபாடு கொள்ளாது இருப்பதும் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால், தாயகம் ஆசிரியர் குழு மலையகம் 200 என்ற தொனிப்பொருளில் 72 பக்கங்களில் வெளிக்கொணர்ந்து இந்த 200 வருட உழைப்பாளரின் வியர்வைக்கும், அட்டை கடிகளில் இழந்த இரத்தத்திற்கும், கண்ணீருக்கும் கவலைகளுக்கும் ஓர் அர்த்தத்தைத் தந்துள்ளது அது கணிப்பில் கொள்ளப்பட வேண்டியதே.

மேகமும் பனியும் படர்ந்த இந்தக் குளிர் தேச மக்களின் வரலாறு, வரவு, முக்கிய வரலாற்றுத் தடங்கள், போராட்டங்கள் எனப் பல்வகைப்பட்ட விடயங்களையும் இந்த தாயக இதழ் தந்துள்ளது. மலையகம் பற்றியும் இம்மக்கள் பற்றியும் மிக விரிவான விடயங்கள் உள்ளடக்கத்தில் பொதிந்து கிடக்கின்றன. பாராட்டுக்கள். இந்த வகையில் அடுத்த கட்ட நகர்வு பற்றியும் குறிப்பிடப்படுகின்ற. இவை பற்றிப் பார்ப்போமா?

எம். முத்துவேல்- 'மலையகத் தமிழ் சமூகம்' எனும் கட்டுரையில் மலையகம் அதன் எல்லைப் பிரதேசம், காலநிலை, வழங்கப்படும் பெயர்கள் பற்றிய விளக்கங்களையும் முதலில் கூறுகிறது. பின்னர் அவர்களின் வருகை பற்றியும் அவர்களது வசிப்பிடங்கள், சாதிய அமைப்பு முறைமை, அதேவேளை, பிரித்தானியரின் அருகருகே அமைந்த லயன் வீட்டு முறைமையால் ஏற்பட்ட சில நல்ல மாற்றங்கள் பற்றியும் கூறியுள்ளார்.

தோழர் சி சிங்கராயர் கட்டுரையும் மலையகம் 200 வரலாற்றின் சில பக்கங்களையே பெருமளவில் கூறுகின்றது. மொழிவரதனின் தனியான ஒரு தொலைக்காட்சி அலை வரிசையின் அவசியம் எனும் கட்டுரை மலையகம் 200 லிருந்து அடுத்த கட்ட நகர்வுக்கான முன்னோடியான ஒரு விடயத்தைத் தொட்டுச் செல்கின்றது. மலையகத் தேசிய இனத்துக்குரிய அடையாளமும் வளர்ச்சியும் எனும் ஜெ. சற்குருநாதனின் கட்டுரை மலையகம் 200 ஐ கடந்துள்ள நிலையில் இம் மலையகச் சமூகம் பெற வேண்டிய தேசிய ரீதியான அடையாளம் பற்றிப் பேசுகின்றது. காத்திரமான, கனதியான விடயங்களைத் தேடி, உள்வாங்கி எழுதியுள்ள ஜெ. சற்குருநாதன் பாராட்டப்பட வேண்டியவரே. தாயகம் 200 இதழுக்கு ஆரோக்கியமான, அதேவேளை எதிர்கால இவ்விடயம் தொடர்பான தேடலுக்கு வழிகாட்டி உள்ளது எனில் தவறில்லை.

மலையகம் 200 இல் மலையக பல்கலைக்கழகம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான பல பரிந்துரைகளையும் சிந்தனைக்கான கிளரல்களையும் கட்டுரை தருகிறது. இரா. ஹிர்சான் இதனை தந்துள்ளார். எனினும், இது ஒரு புனைபெயராக இருந்திட வாய்ப்புகள் உள்ளன. மலையகத்தின் சுய இருப்பு பயணத்தில் இளைஞர்களின் பங்களிப்பு எனும் கட்டுரை ஜே. மு. புவனேஸ் என்பவரால் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து எழுதப்பட்டுள்ளது.

இக்கட்டுரை சர்வதேச ரீதியாக இளைஞர்கள் எவ்வாறு தமது இளம் வயதில் போராட்டங்களில் ஈடுபட்டார்கள் என்பதனை சேகுவேரா வயது (27) ஐயன் பெருமாள் வேலாயுதம் (24) வெள்ளையன் (30) என உதாரணங்கள் ஊடாக இளைஞர்களின் இளமைப் பருவத்தின் வீர உணர்வுகளைச் சுட்டிக்காட்டி சுய இருப்பின் அவசியம் பற்றி எடுத்துக்காட்டி உள்ளார். நல்ல பல தகவல்களைத் தந்துள்ள ஒரு கட்டுரை எனலாம். இன்றைய இளைஞர்களுக்கு ஒரு செய்தியை கூறுகின்றது.

'மலையக மக்களின் வரலாறு புகைப்படங்களின் பதிவுகளும் போதாமையும்' எனும் தலவாக்கலை யுவராஜன் கட்டுரையில் கோப்பிச் செய்கை, தேயிலைச் செய்கை காலப் புகைப்படங்கள் சில உள்ளன. மேலும், புகையிரத பாதைகள் (Road) நிர்மாணம், றப்பர் தேயிலைச் செய்கை படங்கள் காணப்படுகின்றன. போராட்டங்களில் ஈடுபட்டோர் என அது தொடர்கின்றது. எவ்வாறாயினும் இக்கட்டுரையும் எமது வரலாற்றினையே உள்ளடக்கமாய் கொண்டுள்ளது. எனலாம்.

'மலையக மக்களுக்கான கலைகளும் இலக்கியமும் இயங்குதளத்தின் தேவைகளும் சவால்களும்' எனும் சிவ. இராஜேந்திரனின் கட்டுரை ஒரு பெரிய கட்டுரை எனலாம். பத்து பக்கங்களில் இக்கட்டுரை தொடர்கின்றது.

கட்டுரை பற்றிய அறிமுகத்துடன் தொடங்கும் இக் கட்டுரை மலையக மக்கள் என்போர் யார்?, இந்திய அடையாளம், மலையக மக்களுக்கான கலைகளும் இலக்கியமும், கலை இலக்கிய தாபனங்களின் அவசியம், முடிவுரை என உப தலைப்புகளின் கீழ் எழுதப்பட்டுள்ளது. சீன எழுத்தாளர் லூசுன் அவர்களின் கூற்றுக்களை மேற்கோள் காட்டி விளக்கிச் செல்லும் கட்டுரையாளர் இந்திய நலன் சார்ந்து இயங்கும் சில அமைப்புகள் பற்றியும் இம்மக்களின் போராட்டங்கள், பொருளாதார வாழ்வியல் பற்றியும் விரிவாக கூற முனைந்துள்ளார். மேலும், மக்களுக்கான இலக்கியம், முன்னெடுப்பு பற்றி பேராசிரியர் க. கைலாசபதி போன்றோர்களின் கூற்றுகளோடு சமூக விஞ்ஞான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டத்தில் வர்க்க சிந்தனை இலக்கியம் பற்றிப் பேசியுள்ளார்.

அடிக்குறிப்புகளின் பல நூல்களைத் தேடிப் பெற்று கட்டுரையை முழுமை பெற முயன்றுள்ளார். பாராட்டுக்கள். இலங்கை மலையகத்திலிருந்து வரிசையில் ஒருத்தி ஆவணத் திரைப்படம் பற்றி சை. கி. கோமஸ் எழுதியுள்ளார். இலங்கையில் மலையக மக்கள் மண்ணெண்ணெய், கோதுமை மாவு என்பனவற்றுக்காக வரிசைகளில் நின்று பட்ட துன்பங்களை இந்த ஆவணத் திரைப்படம் கூறுகின்றது. பொதுவாக தேசிய ரீதியாக இலங்கை மக்கள் பெண்கள் பல உபாதைகளுடன் வரிசைகளில் பட்ட அவஸ்தைகளைக் காட்டுவதாகவே இந்த ஆவணத் திரைப்படம் சை. கிங்ஸ்லி கோமஸ், சந்திரலேக்க கிங்ஸ்லி ஆகியோர்களின் படைப்பாக இவ் வெளியீடு வந்துள்ளதை அறிய முடிகின்றது.

'மலையகத் தேசியம், மலையக மக்கள் இயக்கமும் மலையக வெகுஜன இயக்கமும்' எனும் எம். எம். ஜெயசீலனின் கட்டுரை மலையகத் தேசியம் தொடர்பாக பல வரலாற்றுத் தடங்களை தொட்டுச் செல்கின்றது எனலாம். கோ. நடேசய்யர் மீனாட்சியம்மாள் தம்பதியினரின் செயற்பாடுகளிலிருந்து தொடர்ந்து ஏ. இளஞ்செழியன் அவரது திராவிடர் கழகம் முதல் பின்னரான பல மலையக அமைப்புகளின் மலையக தேசியம் பற்றிய செயற்பாடுகளை கட்டுரை கூறுகின்றது. விசேடமாக மலையக தேசிய எண்ணக்கருவை மற்றொரு தளத்திற்கு இட்டுச் சென்ற சாந்தகுமார் பி. மரியதாஸ் மலையக மக்கள் இயக்கம், பி. ஏ. காதர் ஆகியோரினதும் செயற்பாடுகள் சற்று விதந்தே கூறப்பட்டுள்ளதை காணலாம்.

மார்க்ஸிய கண்ணோட்டத்தில் தேசிய இனம் பற்றிய ஸ்டாலினது சிந்தனை லெனின் மதிவாணம் அவர்களது கூற்றுக்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இதற்கிடையே ஜே.வி.பி யினர் இம்மலையக மக்களை பார்த்தவிதம் பின்னர் இதற்கு ஏ. இளஞ்செழியன் அளித்த பதில் என்பன இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

எம். எம். ஜெயசீலனின் இக்கட்டுரை தாயகம் இதழுக்கு ஒரு போஷனையைத் தந்துள்ளது எனத் துணியலாம். இரண்டு நூற்றாண்டுகளாக மலையக மக்கள் இந்த நாட்டுக்குச் செய்த பாரிய பங்களிப்பு என்ற சட்டத்தரணி இரா. சடகோபனின் கட்டுரை மலையக வரலாற்றையும் அதன் பின்னணியையும் இம் மக்கள் பற்றிய இலங்கை அரசின் மனப்பாங்கையும் விளக்குவதாக அமைந்துள்ளது. 200 வருட பூர்த்தியான நிலையில் இக்கட்டுரை 'மலையகம் 200' எனும் தாயகத்தின் ஜனவரி- மார்ச் 2023 இதழுக்கு ஒரு நுழைவாயில் போல் அமைந்துள்ளது.

சந்திரலேக்கா கிங்ஸ்லியின் 'இப்படியாக்கப்பட்ட என் இரவுகள்' கவிதை இலங்கையின் இன்றைய நிலைமையினை அழகாக சொல்கின்றது. அவரது கவிதை உத்தி, கவிதை அமைப்பு தாயகத்திற்கும் அவருக்கும் பெருமை சேர்க்கின்றது எனலாம்.

'வெறும் ஐநான்கு தசாப்தங்கள்' எனும் ஜெப்ரி தங்கராஜ் கவிதை மலையகத்தின் உழைப்பு, சுரண்டல், 200 வருட வரலாற்றுத் தடங்கள் பற்றியதாக உள்ளது. கவிதையின் தலைப்பில் ஏதோ ஒரு நெருடல் தெரிகின்றது. 'கழிந்தது சனி' இறப்பர் மரத்தோட்டத்தின் ஒருநாள் வாழ்வை ஒரே மூச்சில் கூறி முடிக்கின்றது. அவர்களின் பரபரப்பு வாழ்வு கவிதையாகி உள்ளது. அஸ்க் வெளியூர் ரட்ண ஜோதி மேலும் செழுமை பெறுதல் வேண்டும்.

அப்பாவிகளது கோரிக்கை மலையக மக்களை 'அப்பாவிகள்' என்றழைப்பதை இடித்துரைத்தெழுந்துள்ளது. உக்குவளை உதயசூரியனது கவிதைகள் வளர்ந்து மலர்ந்திட வேண்டுவோம். மலையூரனின் மலைமகள் (1823-2023) சற்று வேறுபட்ட அமைப்பில் எழுதப்பட்டுள்ளது. அதுவும் 200 வருட வரலாற்றினைக் கூறியுள்ளது. புதியதொரு அமைப்பு, இயக்கம் தோற்றம் பெறுவதான ஒரு கற்பனை கவிதையின் இறுதியில் வருகின்றது.

ராசாத்தோட்டம் இராமஜெயத்தின் இருபாடல்கள் மலைப் பிரகடனம், தியாகிகளுக்குப் புகழ்மாலை என்ற தலைப்புகளில் வெளிவந்துள்ளது. இரண்டு சிறுகதைகள் இம்மலரில் வெளிவந்துள்ளன. செம்மலர் மோகனின் 'சக்கர சுழற்சி' 'மலையகக் கலாநிதியின் வாக்குமூலம்' (சை. கிங்ஸ்லி கோமஸினது) கிங்ஸ்லி கோமஸின் கருப்பொருள் மேல்கொத்மலைத் திட்டம் மற்றும் மலையக அபிவிருத்தி, மலையகம் எனும் அடையாளம் பற்றியதான கலாநிதியின் தவறான பார்வை, முடிவுகள் பற்றியதாக உள்ளது. நோய்வாய்ப்பட்ட நிலையில் புதிய சந்ததியினருக்கு தனது தவறுகளைப் பற்றிக் கூறுவதாக கதை செல்கின்றது.

குறிப்பாக, பணத்துக்கான இம்மலையக கலாநிதி அவ்வாறு செயற்பட்டதாகவே கதைக்கரு கூறுகின்றது. தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பணத்திற்காகவும் சலுகைகளுக் காகவும் சில தொழிற்சங்கங்களின் திருப்திப்படுத்துவதற்காகவும் இவ்வாறு நடக்கின்றனர். ஆனால், தன்னார்வ தொண்டு நிறுவனங்களினால் சில நல்ல அறுவடைகளும் இல்லாம லில்லை.

அடுத்த சிறுகதை செம்மலர் மோகனது. புத்தரைப் பற்றியதே அது. அவரது போதனைகள், சிந்தனைகள், தர்ம உபதேசங்களின் நடைமுறைகளின் பிரதிபலிப்பை கௌதம புத்தர் காணுகிறார். ஆம் எமது இலங்கையில் புத்தர் சிலைகள் நாடெங்கும் நகரமெங்கும் காணப்படுகின்றன. ஆனால், ஏனோ தர்மம், அன்பு, கருணை, பரிவு அருகிவிட்டது. சி. சிவசேகரம் அவர்களின் கவிதை 'நிமிர்வு' எனும் தலைப்பில் வெளியாகி உள்ளது. தாயகம் இதழின் நோக்கத்தை அது பிரதிபலிக்கின்றது எனலாம். மயக்கமின்றி, தெளிவுடன் தனது கவிதையில் சொல்ல வந்ததை சொல்வதில் அவர் வல்லவர் எனலாம்.

இறுதியாக சிவ. இராஜேந்திரன் அவர்களின் உழைப்பு இவ்விதழில் உள்ளது என்பதனை கூறுவது எமது கடன் எனலாம். ஆம்! கட்டுரைகள், கவிதைகள், ஆய்வுகள் என பலதரப்பட்ட விடயங்களையும் பலமுறை கேட்டு, நினைவூட்டி பெற்று இம்மலர் ஆக்கத்திற்கு உறுதுணை புரிந்துள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

இறுதியாக மற்றொன்று, மலரை வெளியிட்டதோடல்லாமல் எல்லா மாவட்டங்களிலும் அதனை அறிமுகம் செய்துவரும் மலர்க்குழுவினருக்கு எமது பாராட்டுக்கள். ஆம்! நூறு மலர்கள் மலரட்டும். மாற்றுக்கருத்துக்களும் எழட்டும். சரியானவை நிலைக்கும். ❐

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் ஆக்கம்:

# போதைப்பொருள் பாவனையும் அதன் பாரிய பாதிப்புகளும்

அருணன்

மதுவை மதுவாக எண்ணி அருந்தினால் நீ மேதையாக இருப்பினும் பேதையாவாய், போதையை பேதையாக எண்ணி கைவிட்டால் நீ பேதையாக இருப்பினும் மேதையாவாய். ஆம், இன்றைய வளர்ச்சி யெய்தி வரும் உலகினுள் போதைப்பொருள் பாவனையும் அதன் பாதிப்புக்களும் பாரியளவு மக்களின் அன்றாட வாழ்க்கையில் செல்வாக்கு செலுத்துகின்றன. இன்று நாம் எந்தவொரு ஊடகத்திலேயாவது போதைப் பொருட்கள் பற்றிய பரபரப்பான செய்திகளை படிக் காமலோ கேட்காமலோ விட்டிருக்கின்றோமா? இவற் றுக்கு உதாரணமாக மதுபான வகைகள், புகையிலை, கஞ்சா, அபின் போன்றவற்றை குறிப்பிடலாம். கஞ்சா, அபின் போன்றவற்றை உபயோகிப்பது உலகளாவிய ரீதியில் தண்டனைக்குரிய குற்றமாக கூறப்படினும் மக்கள் இவற்றுக்கு அடிமையாகி அவற்றை பயன் படுத்துகின்றனர் நாம் அன்றாடம் செவிப்படும் செய்திகளிலும் வேறு நிகழ்ச்சிகளிலும் இதை நொடிக்கு நொடி அறிந்து தெளிந்து கொண்டுதான் உள்ளோம்.

அவ்வாறு இருந்தும் நமக்கேன் அது பற்றிய பூரண தெளிவினை பெற முடியவில்லை? ஏனெனில் அதற்கு நாம் அடிமையாகி விட்டோம். அடிமையாகி பேதைமைப் பட்டுவிட்டோம். அதுதான் இதற்கு முக்கிய காரண மாகும். அன்று சொத்துடையவர்கள் மட்டுமே பாவித்த போதைப்பொருட்களை இன்று கூலித் தொழிலாளர்களும் இதற்கு அடிமையாகி பாவிக்கின்றனர்.

இன்றைய இளம் சமுதாயத்தினர் எதிர்நோக்கும் மிகப் பெரிய சவால்களில் ஒன்றாக இப்போதைப்பொருள் பாவனை திகழ்ந்து வருகிறது. பொழுது போக்கின் பொருட்டும் சிறு அற்ப சந்தோசத்தின் பொருட்டும் பயன்படுத்தப்படும் இது உலகத்திற்கு பேரச்சுறுத்தலாக மாறியுள்ளது. இவை நாளைய தலைவர்களான இளையோரை திசை மாற்றி தடம் புரள வைக்கின்றது. பலர் போதைப்பொருட்களை இன்றியமையாத தேவை யென்று கருதி தமது சுயசிந்தனையை சிதைத்து விட்டார்கள்.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் நம் நாடு அவர்களின் ஆதிபத்தியத்தின் கீழிருந்த காலகட்டத்தில் இதை(மது) விற்பனை செய்ய ஆரம்பித்தனர். உடல் சோர்வினால் அதிகளவில் களைப்புற்றிருந்த மக்கள் அதை அதிகளவு விலை கொடுத்தேனும் பெற்று அருந்த ஆரம்பித்தனர். இதையறிந்த அவர்கள் மேலும் மேலும் அதை கேள்விக்கேற்றாற் போல் நிரம்பல் செய்து கொள்ளை இலாபம் பெற்றனர். இதனால் எமது நாட்டுக் குடும்பங்கள் பல்வகைப்பட்ட வறுமைநிலைகளையும் கலாசாரச் சீர்கேடுகளையும் எதிர் கொண்டன. இதை யெதிர்த்து எமது நாட்டுத் தலைவர்கள் பலர் இன வேற்றுமை பாராது ஒன்றிணைந்து எதிர்த்தனர். நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கலகங்கள் வெடித்தன. இதன்பிறகு பிரித்தானியர் போதைப்பொருட்களை விற்பனை செய்வதை குறைத்துக் கொண்டார்கள். ஆனால் அவை இப்போது வேறு பல வழிகளால் நாட்டை ஆக்கிரமிக்கின்றன.

சங்க கால மக்கள் தாம் போர் நிகழ்ந்து முடிந்தவிடத்து பரத்தையர் ஒழுக்கம், மது, உண்டாட்டு, வெறியாட்டு போன்ற பல்வகையான சீர்கேடுகளை கடைப்பிடித் தொழுகினர். அதனால் சங்க மருவிய காலத்தில் அவ்வகையான சீர்கேடுகளை எதிர்த்து அறநெறி இலக்கியங்கள் பல எழுந்து மக்கள் வாழ்க்கையை ஒழுங்கமைத்தன, அதில் திருக்குறள், நாலடியார் மிக முக்கியத்துவமாக அமைகின்றன. அவற்றில் திருவள்ளு வரால் எழுதப்பட்ட உலகப் பொதுமறையாக போற்றப் படும் திருக்குறள் என்னும் நூலில் கள்ளுண்ணாமை குறித்து ஒரு அதிகாரமே அமைந்துள்ளது.

'துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சு உண்பார்கள் உண்பவர்.'

இதன் பொருளாவது நித்திரை செய்பவரையும் இறந்தாரையும் பிரித்தறிய முடியாது. அதேபோல் எப்போதும் போதைப்பொருட்களில் ஒன்றாகிய கள்ளினை உண்பவர் கொடும் விடத்தை உண்பவரே. அவ்வளவிற்கு போதைப்பொருள் ஓர் உயிருக்கே தீங்கு விளைவிக்கும் நஞ்சாக கி.பி மூன்றாம் நூற்றாண்டு காலத்திலேயே கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

அதைத்தான் இக்காலத்து மருத்துவர்கள் அடிக்கடி அறிவுறுத்துகின்றனர். "அது உடலிலுள்ள பாகங்களை சிறிது சிறிதாக பாதித்தழித்து விடும்" என்கின்றனர். ஆயினும் மக்களில் சிலர் அதை விடுவதாக தெரியவில்லை. அப்பழக்கம் நம் இளம் தலை முறையினரை வெகுவாக பாதித்து வருகின்றது. அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனுபவிக்கும் போது சொர்க்கம் கிட்டும் என்ற கூற்று நிலவுகிறது. ஆனால் அது அந்த கணத்திற்கு மட்டுமே என்பது அவர்களுக்கு தெரியவில்லை. அதனால் வாழ்நாள் முழுவதும் பெரிய தண்டனையை அனுபவிக்க வேண்டியுள்ளது. பலவகையான குற்றங்களுக்கு ஆளாகி வாழ்நாள் குற்றவாளி என்னும் முத்திரை இச்சமூகத்தால் இடப்பட்டுவிடும். சமூகத்தில் அன்றாடம் நடக்கும் கொலைகள், கற்பழிப்புகள், போதைவஸ்த்துக்களுடன் மாணவர்கள் கைது செய்யப்படுதல் போன்ற குற்றச் செயல்களுக்கு இதுவே ஆதாரமாகின்றது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், நாம் கலந்து கொள்ளும் நிகழ்வுகளிலும், சமூக வலைத்தளங்களிலும், பத்திரிகைகள் மூலமாகவும் மற்றும் நாம் பார்க்கும் சினிமாக்களிலும் அது பற்றிய விழிப்புணர்வுகள் விழிக்கப்படினும் அதேநேரத்தில் அதை பாவிக்கும்போது கிடைக்கும் பொய்யான அருமையும் காட்சிப்படுத்தப் படுகின்றன.

இது இன்றைய சமுதாய இளைஞர்களை அதிகளவில் பாதிக்கின்றது. அதை அன்றாடம் பார்க்கும் இளைஞர்கள் அதனால் விளையும் பாரிய தீங்குகளை கருத்திற் கொள்ளாது அதை நாமும் பயன்படுத்தினால் தான் என்ன என்ற மனநிலைக்கு அவர்கள் உள்ளாகுகிறார்கள். அதைவிட சமவயதுக்குழுக்கள் மற்றும் இனம் தெரியாத நபர்கள் வழங்கும் தவறான வழிகாட்டல்கள் மற்றும் வற்புறுத்தல்களின் மூலமும் இளைய சமுதாயத்தினர் இதனால் பெருமளவு பாதிப்புக்குள்ளாகின்றனர்.

மாணவர்கள் போதைப்பழக்கத்திற்கு அடிமையா வதற்கு அத்திவாரமாக அமைவது அவர்களின் வீட்டுச் சூழலாகும். பெற்றோர், அயலவர்கள் மற்றும் உறவினர் கள் அவற்றை உபயோகிப்பதைக் கண்டு மாணவர்களும் அதற்கு அடிமையாகின்றனர். உலக நடைமுறையில் இன்று சகல நாடுகளிலும் போதைப்பொருள் வியாபாரம் நடைபெறுகிறது. கல்வியறிவற்ற நாடுகள் கூட இருக்கலாம்; ஆனால் போதையற்ற நாடுகள் இருக்கவே முடியாது எனலாம்; அந்தளவிற்கு உலகமெங்கும் இது வியாபித்துள்ளது. தமக்கு யாது நடந்தாலும் பரவாயில்லை போதைப்பொருள் வியாபாரம் குறைவின்றி நடை பெற்றாக வேண்டும் என போதைப்பொருள் வாணிகர்கள் உறுதியளிக்கின்றனர். இந்த வியாபாரிகளும் பாடசாலைச் சூழல், தனியார் நிறுவன சூழல்கள் என இளம்பிராயத்தினர் அதிகளவு நடமாடும் இடங்களை இலக்கு வைத்து தங்கள் போதைப்பொருள் வியாபார நடவடிக்கை களை முன்னெடுக்கின்றனர். பெற்றோரின் கவன யீனம், அதீத செல்வ நிலை என்பன இளம் பிராயத்தினரை இப்பகுதிக்குள் இழுத்துச் செல் கின்றது. கட்டிளமைப்பருவத்தினரையே இது அதிகளவில் பாதிக்கின்றது. அவர்கள் தமது கதாநாயகர்களாக கொள்ளும் பாத்திரங்கள் மது அருந்துவது போல் தாமும் செயற்பட முற்படுவதால் அவர்களின் தீயபழக்கம் இவர்களையும் பற்றிக் கொண்டுவிடுகிறது.

பொது இடங்களில் சிகரட், புகையிலை உபயோகிப் பதையும் விற்பனை செய்வதையும் தடுக்க வேண்டும். வேறு நாடுகளிலிருந்து போதைப்பொருள் வணிகம் செய்பவர்களுக்கும் அதற்கு அனுசரணை வழங்குபவர் களுக்கும் எதிராக கடுமையான சட்டதிட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்தல் அவசியமானதாகும். பதி னெட்டு வயதிற்கு உட்பட்டோருக்கு மதுபானம், சிகரட் போன்றவற்றை விற்பனை செய்வோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இயலுமானவரை மதுபான சாலைகளுக்கு அனுமதி வழங்கப்படுவதை அரசு தடுக்க வேண்டும்.

அத்துடன் போதைப்பொருட்களை இயலுமானவரை கட்டுப்படுத்த சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வுகள், அதைத் தாங்கிய பதாதைகள், சுவரொட்டிகள், சினிமா மற்றும் வேறுவித பிரபலங்களால் முன்னெடுக்கப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி விளம்பரங்கள், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகள், இது குறித்தான மேடைநாடகங்கள், பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் மருத்துவ பிரிவினரால் நிகழ்த் தப்படும் இது பற்றிய கலந்துரையாடல்கள் போன்றவற்றை மேலும் முன்கொண்டு செல்லத் தலைப்படல் சாலச் சிறந்ததாகும். ஆகவே இது குறித்து அதிகளவு கவனத் துடன் பொதுமக்களும், நமது நாட்டு தலைமைகளும் மற்றும் சுகாதார பிரிவினரும் செயற்பட வேண்டும். போதைப்பொருள் பாவனைகளையும் அதனால் நிகழும் பாரிய பாதிப்புகளையும் இலங்கையில் மட்டுமல்ல உலகிலேயே இல்லாதொழிப்பதற்கு நாமெல்லோரும் முன்வர வேண்டும். ❑

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கரவெட்டி புத்தக அரங்க விழா – ஏப்ரல் 2023



இனுவில் புத்தக அரங்க விழா – மே 2023



சண்டிலிப்பாய் புத்தக அரங்க விழா – ஜூன் 2023





அரியாலை புத்தக அரங்க விழா – ஒகஸ்ட் 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலையகத்தில் தாயகம் சஞ்சிகையின் "மலையகம் – 200" சிறப்பிதழ் அறிமுக நிகழ்வுகள் – கொட்டகலை , ஹெட்டன் .



– மூங்கில் கலை இலக்கிய களத்தின் ஏற்பாட்டில் உருளவள்ளி – லோவர் கிரன்லி தமிழ் வித்தியாலயத்தில் , பண்டாரவளையில்



கொக்குவில் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெற்ற சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டங்கள்



யாழ்ப்பாணம் தேசிய கலை இலக்கியப் பேரவையில் இடம்பெற்ற "லயத்துக் கோழிகள்" நெடுநாடக ஆற்றுகையின் காட்சிகள்



"மலையக மக்களும் 200 வருட வாழ்வியலும் நிலவுரிமையும் " – சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் வவுனியாவில் – 17/09/2023



மாதாந்த ஆய்வரங்குத் தொடர் – கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org